விலை : 20.00
website : www.valampurii.lk
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 வைகாசி 06 வியாழக்கிழமை (19.05.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 152

# தமிழர் தாயகமெங்கும் நினைவேந்தல் எழுச்சி!

## நெடுந்துயர் வாட்ட பொதுச்சுடரேற்றி உறவுகள் அஞ்சலி





24ஆம் பக்கம் பார்க்க....

## உயிரிழந்த எம்மவரின் ஆத்மா சாந்தியடைய

# போர்க்குற்ற விசாரணை நடந்தேயாக வேண்டும்!



### நீதியை பெறாது விடமாட்டோம் என முதலமைச்சர் உரை

(முள்ளிவாய்க்கால்)

யுத்தம் முடிவடைந்து ஏழு ஆண்டுகள் கடந்துள்ள நிலையில் போரில் உயிரிழந்தவர்களுக்கான நீதி இன்னமும் கிடைக்கப்பெறவில்லை என தெரிவித்த வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், உயிரிழந்த மக்களின் ஆத்மா சாந்தியடைய சர்வதேசத்தின் உதவியுடனான போர்க்குற்ற விசாரணை நடந்தே ஆக வேண்டும் என இறுக்கமாகத் தெரிவித்துள்ளார்.

23ஆம் பக்கம் பார்க்க...

## தரம் - 5

புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் இன்றைய வலம்புரியில்...

### அரச சேவையாளர்களின் விடுமுறைகள் இரத்து

(கொழும்பு)

இயற்கை அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணம் வழங்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டி இருப்பதனால் அரச சேவையாளர்களின் விடுமுறைகள் இரத்து செய்

24ஆம் பக்கம் பார்க்க....

## இலட்சம் பேர் போரில் உயிரிழந்தமை பெரும் துயரைத் தருகின்றது

### இராணுவ நிகழ்வில் ஜனாதிபதி பேச்சு



(கொழும்பு)

மூன்று தசாப்தகால போர் முடிவுக்கு கொண்டுவரப்பட்டமை ஒரு புறத்தில் மகிழ்வைத் தந்தாலும். போரில் ஒரு இலட்சம் பேர் வரை கொல்லப்பட்டமை பெரும் துயரைத் தருகிறது என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்

24ஆம் பக்கம் பார்க்க....

### வித்தியா படுகொலை வழக்கு

## மரபணு பரிசோதனை அறிக்கை நேற்று நீதிமன்றில் சமர்ப்பிப்பு

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு பாடசாலை மாணவி சிவலோகநாதன் வித்தியாவின் வழக்கில் கைது செய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டு வரும் ஒன்பது சந்தேகநபர்களின் மரபணு பரிசோதனை அறிக்கை நேற்று புதன்கிழமை நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது.

யாழ்.ஊர்காவற்துறை நீதிமன்றில் நீதவான் எம்.எம்.றியால் முன்னிலையில் நேற்று. மேற்படி வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது குற்றப்புலனாய்வுப் பிரிவினர் சார்பில் மன்றில் ஆஜரான அதிகாரி குறித்த மரபணு பரிசோதனை (டி.என்.ஏ) அறிக்கையை

24ஆம் பக்கம் பார்க்க....

### இயற்கை பேரிடர்; அமெரிக்கா அனுதாபம்

(கொழும்பு)

காலநிலை மாற்றத்தினால் நாட்டில் தொடர்ச்சியாக பெய்து வந்த மழையினால் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் மண்சரிவுகள் காரணமாக உயிரிழந்த மற்றும் பாதிக்கப்பட்ட

24ஆம் பக்கம் பார்க்க....

# கேகாலையில் தொடர் நிலச்சரிவு; 150 பேரைக் காணவில்லை!



### 14 பேரின் சடலம் மீட்பு; 3 1/2 இலட்சம் பேர் பாதிப்பு

(கொழும்பு)


கேகாலை மாவட்டத்தில் தொடர்ச்சியாக இடம்பெற்ற நிலச்சரிவு அனர்த்தங்களின் பின்னர் 150க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தும் காணாமலும் போயுள்ளதாக இடர் முகாமைத்துவ மையம் அறிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் புதன்கிழமை மாலை அரநாயக்க பிரதேசத்திலும்

23ஆம் பக்கம் பார்க்க..

## புலிகளுக்கு எதிராகவே யுத்தத்தை நடத்தினேன்

### மகிந்த ராஜபக்ஷ அறிக்கை



(கொழும்பு)

வன்னியில் நடைபெற்ற யுத்தம் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக மட்டுமே முன்னெடுக்கப்பட்டிருந்ததாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அறிக்கையொன்றின் மூலம் வலியுறுத்தியுள்ளார்.

விடுதலைப் புலிகளுடனான யுத்த

23ஆம் பக்கம் பார்க்க...

## கிளிநொச்சியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களை வடக்கு ஆளுநர் நேற்று சந்திப்பு



(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு பாடசாலைகளிலும், பொது இடங்களிலும் வாழும் மக்களை நேற்று வட மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே சந்தித்தார்.

நேற்று மாலை 5.45 மணியளவில் புனித திரேசா பாடசாலை மற்றும் பரந்தன் இந்து மகா வித்தியாலயம் ஆகிய இடங்களிற்கு சென்ற ஆளுநர், அங்கு தங்கியுள்ள மக்களின் குறைகளை கேட்டறிந்தார்.

வெள்ளத்தால் பாதிக் கபட்டு தற்காலிக முகாம்களில் தங்கியுள்ள மக்களின் குறைகளை கேட்டறிந்த ஆளுநர், அம்மக்களிற்கான அத்தியாவசிய பொருட்களையும் வழங்கி வைத்தார்.


இச்சந்திப்பில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் சு.அருமைநாயகம், மேலதிக அரச அதிபர் சத்தியசீலன், கண்டாவளை பிரதேச செயலாளர் முகுந்தன், அனர்த்த முகாமைத்துவ நிலைய அதிகாரிகள், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர்.

ஊடகங்களிற்கு கருத்து தெரிவித்த ஆளுநர், பாதிக்கப்பட்ட மக்களின் நலன் தொடர்பில் ஜனாதிபதி அக்கறை செலுத்தி வருவதாகவும், அவ்வாறு கிளிநொச்சி மாவட்டத்தில் இடை தங்கல் முகாம்களில் வாழும் மக்களின் அத்தியாவசிய தேவைகளை சந்திப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

மக்கள் வீடுகளிற்கு திரும்பியதும் அவர்களின் இழப்புகள் அனைத்தையும் பெற்றுக்கொடுக்க உள்ளதாகவும் தெரிவித்தார்.

குறிப்பாக வீடு, உடை, அத்தியாவசிய பொருட்கள் என அனைத்து விடயங்களையும் பெற்றுக்கொடுகக உள்ளதாகவும் ஆளுநர் ஊடகங்களிடம் தெரிவித்தார். (செ-15)

## ஐரோப்பியத் தூதுவர் டேவிட் யாழ்.அரச அதிபருடன் சந்திப்பு



(யாழ்ப்பாணம்)

ஐரோப்பியா ஒன்றியத்தின் மாலைதீவு - இலங்கைக்கான தூதுவர் டேவிட் டலிக்கும் யாழ் மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகனுக்கும் இடையில் கலந்துரையாடல் ஒன்று நேற்றையதினம் யாழ் மாவட்ட அரச அதிபர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இக் கலந்துரையாடலில் யாழ் மாவட்டத்தில் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ள அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் மற்றும் சமூக பொருளாதார மேம்பாட்டுபணிகள் தொடர்பான விடயங்களும், மீள்குடியேற்றம் செய்யப்பட்டவர்களின் விபரங்களும் அவர்களுக்கான வாழ்வாதார மேம்பாட்டு உதவிகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டுள்ளது (செ-9)

## மரண அறிவித்தல்



### கணபதி சண்முகம்

உரும்பிராய் மேற்கு, மூன்று கோவிலடியை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கணபதி சண்முகம் 18.05.2016 அன்று சிவபதமடைந்தார்.

அன்னார் கணபதி - இலக்ஷ்மி ஆகியோரின் அன்புப் புதல்வரும், பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், கமலகுமாரி, விஜயா, சிவபாலன் (கனடா), வளர்மதி, அருள்மதி ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், செல்வரத்தினம், செல்வரஞ்சன், சந்திரகுமாரி, குமணகுமார், சிவேந்திரன் ஆகியோரின் மாமனாரும், குபேரன், கிருஷாளினி, கயிந்தன், சஞ்சீவன், சாரங்கன், சாரங்கி ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற சரஸ்வதி, செல்லத்துரை மற்றும் மார்க்கண்டு, கணேசலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் 19.05.2016 இன்று நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக உரும்பிராய் வேம்பன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உரும்பிராய் மேற்கு,
மூன்று கோவிலடி.

(4706)

தகவல் :
குடும்பத்தினர்

## தமிழர்களின் உரிமை, விடுதலைக்காக யுத்தத்தில் உயிர் நீத்த அனைத்து தமிழ் உறவுகளிற்குமான ஆத்ம சாந்தி பிரார்த்தனை நிகழ்வு



இலங்கை தமிழர்கள் வரலாற்றில் பல்வேறுபட்டவர்களின் ஆட்சிகளின் போது பல்வேறுபட்ட கறைகள் வலுவான வடுக்களாக பதியப்பட்டிருக்கின்றன. அந்த வடுக்கள் அனைத்திலும் உலகமெங்கும் பரந்து வாழும் ஈழத் தமிழ் மக்களின் மனதில் ஆழமாக என்றும் ஒரே மாதிரியான வலியை தரக்கூடிய உணர்வு நிலையை 2009-ம் ஆண்டு மே மாதம் எமக்கு தந்திருக்கின்றது.

விடுதலைக்கான போராட்டத்தில் 2009-ம் ஆண்டு நாசகார சக்திகளின் தலையீட்டினாலும் சதித்திட்டத்தினாலும் விடுதலை போராட்டத்தினை அழித்தார்கள். எமது உயிர்களை பறித்தார்கள். எமது சொத்துக்களினை நாசப்படுத்தி அழித்தார்கள்.


எனினும் எமது உணர்வுகள் செத்துவிடவில்லை. எமது உள்ளக்குமுறலில் உள்ள உரிமைக்கான போராட்டம் தோற்றுவிடவில்லை. இன்று உரிமைக்கான போராட்டம் மறுவடிவம் எடுத்துள்ளது. எமது உரிமையினை வென்றெடுக்கும்வரை எமது போராட்டம் தொடரும்.

இறந்த உறவுகள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பது எமது கடப்பாடு ஆகும். எமது மத கோட்பாட்டிலும் ஆன்ம ஈடேற்றம் பெற ஆன்மாவிற்கான கடமைகளை நாம் செய்ய வேண்டும். இந்த உரிமை போராட்டத்தின் போது தமது இன்னுயிர்களை ஈய்ந்த அனைத்து தமிழ் உறவுகளிற்கும் நாம் இந்த நாளை வருடா வருடம் நினைவேந்தல் நாளாக செய்ய வேண்டும் என்பதில் எந்த விதமான ஐயமும் இல்லை.

இந்த நாளினை எனது தலைமைச் செயலகத்திலும் (80 ஏ, கோவில் வீதி, நல்லூர்) உயிர் நீத்தவர்களின் சகோதரர்கள், உறவினர்கள், ஆதரவாளர்கள் மற்றும் எனது இளைஞர் அணி உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றுகூடி 19.05.2016 பகல் 12.00 மணிக்கு ஒட்டுமொத்த ஒற்றுமையையும் எமது உணர்வுகளை மௌனமாக வெளிப்படுத்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இறந்த உறவுகளின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பது எமது தலையாய கடமையாகும்.

அங்கஜன் இராமநாதன் - பாராளுமன்ற உறுப்பினர்

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்
09.06.1928
மறைவு
19.04.2016

திதி:- வளர்பிறை திரியோதசி

அமரர்

### நாகநாதர் சிவசுப்பிரமணியம்

(தர்மகர்த்தா - கடையிற்சுவாமிகள் நினைவாலயம், மண்டைதீவு,
ஒய்வூதியர் கிராமசபை, மண்டைதீவு)

யாதுமாகி நின்றீர் எங்கள் ஐயா !

ஏதும் வேண்டி எமக்கு - பெருமை கொள
போதும் உம்பெயர் ஒன்றே நாம் வாழ
வாராதித் தரணி தனிலே தீதேதும்

(4709)

நி.மு: 5-ம் வட்டாரம்,
மண்டைதீவு.

குடும்பத்தினர்:
வராகி அம்மன் வீதி, கொக்குவில்.

# திருகோணமலையில் நினைவேந்தல் நிகழ்வு



இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஏற்பாட்டில் முள்ளி வாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு கிழக்கு மாகாண கல்வி அமைச்சர் சி.தண் டாயுதபாணி தலைமையில்

நேற்று திருகோணமலை சிவன் கோவிலடியில் அமைந்துள்ள தந்தை செல்வாவின் நினைவுத்தூபிக்கு அருகாமையில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண கல்வி அமைச்சர் தண்டாயுதபாணி மற்றும் கிழக்கு மாகாண விவசாய அமைச்சர் க.துரைராஜசிங்கம், கிழக்கு மாகாணசபை உறுப்பினர் ஜெனார்த்தனன் உட்பட கட்சியின் பல உறுப்பினர்கள் கலந்து பங்கேற்றுள்ளனர்.

இதன்போது கருத்து தெரிவித்த கல்வி அமைச்சர், போரில் ஈடுபட்டவர்கள் இறப்பதுண்டு. இருந்த போதிலும் பொதுமக்கள் கூட இச் சம்பவத்தில் கொல்லப்பட்டனர். அவர்களை நினைவுகூருவது எமதுகடமைஎனஇதன்போது அவர் தெரிவித்தார். (இ-5)

# வாகரையில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு அனுஷ்டிப்பு

மட்டக்களப்பு வாகரை பிரதேசத்தின் மாணிக்கபுரம் ஆற்றங்கரையோரத்தில் முள்ளிவாய்க்காலில் தமிழ் தேசத்தின் போரால் கொல்லப்பட்ட மக்களின் ஆத்ம சாந்தி பிரார்த்தனை நிகழ்வு நேற்று நடைபெற்றது.

இந்த நிகழ்வினை தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி ஏற்பாடு செய்திருந்தது.

இந்த நிகழ்வில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் செல்வராஜா கஜேந்திரன், திருகோணமலை மாவட்ட செயலாளர் கணேசப்பிள்ளை குகன், அம்பாறை மாவட்டத்திற்கான உப தலைவர் முருகேசு வரதராஜன், மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளர் த.சுரேஸ் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

இதன்போது உயிர் நீர்த்தவர்களின் ஆத்மா சாந்தி வேண்டி பூசைகள் இடம் பெற்றதுடன், ஈகச் சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தினர்.

இதேவேளை, இராணுவ மற்றும் பொலிஸ் புலனாய்வு பிரிவனர் சூழ்ந்திருந்தமையால் மக்களின் வருகை குறைவாகவே காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-5)



# போரை முடிவுக்கு கொண்டுவர அமெரிக்காதான் உதவியது!

## வெளிவிவகார அமைச்சர் மங்கள சுட்டிக்காட்டு

(கொழும்பு)

**2009 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதி விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வர அமெரிக்காவே அனைத்து வகையிலும் உதவிகளை வழங்கியிருந்ததாக வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார். முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு கடந்தவார இறுதியில் எழுதியிருந்த கடிதத்திலேயே மங்கள சமரவீர இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.**



தமிழீழ விடுதலைப் புலிகளை 2006 ஆம் ஆண்டு ஐரோப்பிய ஒன்றியம் தடைப் பட்டியலில் சேர்த்தமை விடுதலைப் புலிகளுக்கு ஏற்பட்ட பாரிய பின்னடைவாக அமைந்தது.

முன்னாள் வெளிவிகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமரின் முயற்சியால் 1998 ஆம் ஆண்டு அமெரிக்காவும் 2001 ஆம் ஆண்டு பிரித்தானியாவும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை தடைசெய்யப்பட்ட பயங்கரவாத இயக்கமாக அறிவித்த நிலையிலேயே ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கம் வகிக்கும் 27 உறுப்பு நாடுகளிலும் புலிகள் தடை செய்யப்பட்டது. இதனையடுத்து 2007 ஆம் ஆண்டு கனடாவும் விடுதலைப் புலிகளை தடை செய்தது.

மகிந்த ராஜபக்ஷ மற்றும் அவரது சகாக்கள் தெரிவித்துவரும் குற்றச்சாட்டுக்கள் அடிப்படையற்றவை. அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் குறிப்பாக கொண்டலீசாரைஸ் மற்றும் நிக்கலொஸ் பேர்ன்ஸ் ஆகியோர் அளித்த முழுமையான ஒத்துழைப்பு காரணமாகவே ஐரோப்பிய ஒன்றியம் விடுதலைப் புலிகளை தடைசெய்யப்பட்ட இயக்கமாக அறிவித்தது. அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஸ் தலைமையிலான அரசாங்கத்தில் கொண்டலீசா ரைஸ் இராஜாங்க செயலாளராக கடமையாற்றியதுடன் நிக்கலொஸ் பேர்ன்ஸ் மூன்றாவது உயர்நிலை அதிகாரியாகவும் இருந்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியாக தோற்கடிப்பதற்கு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் அவரது ஆட்சியின் போது பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்கவும் முக்கிய பங்கை ஆற்றியிருந்தனர்.

விடுதலைப் புலிகளுடன் 2002 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் ஏற்படுத்திக் கொண்ட போர் நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திட்ட காலப் பகுதியில் அமெரிக்காவுடன் பாதுகாப்பு உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டது. இந்த உடன்படிக்கை மூலம் கரையோரங்களில் அதி நவீன தகவல் திரட்டும் ரடார்களை பொறுத்துவதற்கும் பாதுகாப்பு மற்றும் அதனூடனான தகவல் பறிமாற்றங்களை பெற்றுக் கொள்வதற்கும் அமெரிக்கா முன்வந்தது.

அதேவேளை தமிழீழ விடுதலைப் புலிகளின் கிழக்கு மாகாண சிறப்புத்தளபதியாக இருந்த கருணா அம்மானை விடுதலைப் புலிகள் இயக்கத்திலிருந்து பிரித்தெடுத்தமையும் விடுதலைப் புலிகளை தோற்கடிக்க ஏதுவாக அமைந்தது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-5)

# முதியோர் இல்லங்களில் தங்க 25 ஆயிரம் பேர் விண்ணப்பம் 10,000பேர் தற்போதுள்ளனர்

(கொழும்பு)

முதியோர் இல்லங்களில் தங்குவதற்கு விண்ணப்பித்து 25 ஆயிரம் பேர் வரிசையில் காத்திருப்பதாக சமூக கட்டமைப்பு மற்றும் சமூக நல அமைச்சு அறிவித்துள்ளது.

இதுவரையில், தனியார் மற்றும் அரச முதியோர் இல்லங்களில் 10,000 பேர் தங்கியிருப்பதாகவும் அமைச்சு தெரிவித்துள்ளது.

வாழ்க்கையின் கடைசிக் காலத்தை முதியோர் இல்லங்களில் கழிக்க நினைக்கும் மக்களுக்காக முதியோர் இல்லங்களை அமைக்க போதிய நிதி காணப்படாதுள்ளதாக அமைச்சர் எஸ்.பீ. திஸாநாயக்க தெரிவித்தார். (இ-5)

# எம்.பிக்களுக்கு கருத்தரங்கு

(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மனித உரிமைகள் தொடர்பான விடேச கருத்தரங்கு எதிர் வரும் 29, 30ஆம் திகதிகளில் நுவரெலியாவில் நடைபெறவுள்ளது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஏற்பாட்டி லேயே இந்தக் கருத்தரங்கு இடம் பெறுவதாக சபாநாயகர் கரு ஜயசூரிய தெரிவித்தார். (இ-5)

# வெள்ளம்;அதிவேகப் பாதையில் இலவசப் பயணங்கள் தொடரும்

(கொழும்பு)

நாட்டில் நிலவும் அசாதாரண கால நிலை காரணமாக ஏற்பட்டுள்ள வெள்ளப் பெருக்கு வடியும் வரை அதிவேகப் பாதையில் இலவசமாக பயணம் செய்ய முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.


நாட்டின் பல பகுதிகளிலும்வெள்ளப்பெருக்குஏற்பட்டுள்ளதை கவனத்திற் கொண்டு தென்னிலங்கை அதிவேகப் பாதையின் கடவத்தை தொடக்கம் கொட்டாவை வரையான பகுதியில் இலவசமாக பயணிப்பதற்கான அனுமதியொன்று வழங்கப்பட்டிருந்தது.


குறித்த அனுமதி நேற்று முன்தினம் நள்ளிரவுடன் முடிவடைந்து விடும் என்றும் முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

எனினும் வெள்ளம் முற்றாக வடியும் வரையில் கடவத்தை - கொட்டாவை வரையான அதிவேகப் பாதையில் இலவசமாக பயணங்களை மேற்கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் அதிவேகப் பாதையில் பயணிப்பதற்கு மோட்டார் சைக்கிள்கள் மற்றும் ஆட்டோ வண்டிகளுக்கு விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடு தொடர்ந்தும் அமுலில் இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)











த.தே.ம முன்னணியின் முள்ளிவாய்க்கால் தமிழின படுகொலையின் ஏழாம் ஆண்டு நினைவு அஞ்சலி நிகழ்வு நேற்று மாலை முள்ளிவாய்க்கால் கடற்கரையில் மாலை 4.00 மணிக்கு இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் அகில இலங்கை தமிழ் காங்கிரசினுடைய பொதுச் செயலாளருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செல்வராசா கஜேந்திரன், மதத் தலைவர்கள் மற்றும் பொதுமக்கள் என நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டு அஞ்சலி செலித்தினர்.

(படங்கள் :- ச.தவசீலன், உ.சாளின்)

# பவுன்சர் பந்து முகத்தை தாக்கியது லொறி மோதியதை போல் உணர்ந்தேன்

## பெய்லியின் திக் திக் நிமிடங்கள்



விசாகப்பட்டினத்தில் நேற்று முனதினம் டெல்லி டேர்டெவில்ஸ் - புனே அணிகள் மோதிய போட்டி நடந்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய டெல்லி டேர்டெவில்ஸ் அணி 20 ஓவர்கள் முடிவில் 6 விக்கெட் இழப்புக்கு 121 ஓட்டங்களை மட்டுமே சேர்த்தது.

இதனையடுத்து 122 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற எளிய இலக்குடன் புனே அணி களமிறங்கியது.

தொடக்கம் முதலே அதிரடி காட்டினாலும் மழை குறுக்கிட்டதால் டக்வொர்த் லூவிஸ் முறைப்படி புனே அணி 19 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இந்த போட்டியின் போது புனே அணியின் ஜார்ஜ் பெய்லி, அவுஸ்திரேலிய வீரரான நாதன் கோல்ட்டரின் பந்தை அடிக்க முயன்றார்.

வேகமாக வந்த பந்து மட்டையின் விளிம்பில் பட்டு ஹெலமெட்டை தாக்கியதில், ஹெல்மெட் ஸ்டம்புக்கு அருகே விழுந்தது.

எனினும் அதிர்ஷ்டவசமாக பெய்லிக்கு காயம் ஏதும் ஏற்படவில்லை.

இதுகுறித்து பெய்லி, பவுன்சர் பந்து தாக்கிய போது நிலை குலைந்து விட்டதாகவும், லொறி வந்து முகத்தை தாக்கியது போன்று உணர்ந்ததாகவும் தெரிவித்துள்ளார்.

மேலும் டிவி ரீபிளேயில் பார்த்த போது தான் எந்த அளவு தாக்கியது எனபதை தெளிவாக உணர முடிந்ததாகவும் தெரிவித்துள்ளார். (க)

# சிறந்த ஒருநாள் கிரிக்கெட் வீரராக சச்சினை வீழ்த்தி மகுடம் சூடினார் சங்கா




அவுஸ்ரேலியாவின் பிரபலமான cricket.com.au இணையத்தளத்தின் வாக்கெடுப்பில் இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் குமார் சங்கக்கார வெற்றி பெற்றுள்ளார்.

ரசிகர்களது வாக்கெடுப்பு மூலமாக, இதுவரை ஒருநாள் கிரிக்கெட் அரங்கில் சாதித்த சாதனையாளர்களுக்குள் இருந்து சங்கா, முதன்மை வீரராக தேர்வு செய்யப் பட்டுள்ளமை சிறப்பம்சமே.

404 ஒருநாள் போட்டிகளில் 25 சதங்கள் அடங்கலாக 41.98 எனும சராசரியின் அடிப்படையில் 14,234 ஓட்டங்களைக் சங்கக்கார குவித்துள்ளார். கடந்த 40 நாட்களாக நடதத வாக்கெடுப்பில் உலகத்தரம் வாய்ந்த 64 வீரர்கள் பங்கெடுத்தனர்.

MS டோனி, அடம் கில்கிறிஸ்ட், டி வில்லியர்ஸ், ஷேன் வோர்ன் , இம்ரான்கான் ஆகியோரை வெற்றி கொண்டே சங்கக்கார இறுதி நிலைக்கு முன்னேறினார்.

மறுபுறத்தில் ரோஹித் சர்மா, சயீட் அன்வர், மைக்கல் பெவன், விவ் ரிச்சர்ட்ஸ், சனத் ஜெயசூரிய ஆகியோரை வெற்றிகொண்டே சச்சின் டெண்டுல்கர் இறுதி நிலைக்கு முன்னேறினார்.

இறுதி சுற்றில் கிரிக்கெட்டின் கடவுள் என்று வர்ணிக்கப்படும் சச்சின் டெண்டுல்கரை, சங்கக்கார வெற்றிகொண்டு இந்த மகுடத்தை தனதாக்கினார்.

சச்சின்-சங்கா இருவரில் யார் சாதனையாளர் எனும் பல்வேறு பட்டபுள்ளிக் கணிப்புகளுக்கு மத் தியில் சச்சினை சங்கா வெற்றி கொணடுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க)

# அம்பாள் விளையாட்டுக் கழகம் நடத்தும் சதுரங்க போட்டிக்கு விண்ணப்பிக்குக

அம்பாள் விளையாட்டுக் கழகம் நடத்தும் சுற்றுப் போட்டிக்கு ஆண், பெண் இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பம் கோரப்பட்டுள்ளன.

மேற்படி போட்டியானது எதிர் வரும் சனிக்கிழமை காலை 8 மணிக்கு யாழ்.இந்துக் கல்லூரியில் நடைபெறும். 06,08,10,12,14,14 வயதின்மேல் என (Open) திறந்த பிரிவாக போட்டிகள் நடைபெறும்.

வெற்றிபெரும் வெற்றியாளருக்கு வெற்றிக் கிண்ணத்தோடு சான்றிதழ்களும் வழங்கப்படும்.

போட்டிகட்டணமாக 250 ரூபா அறவிடப்படுவதோடு போட்டியாளர் கள் சதுரங்க உபகரணங்களுடன் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப் பட்டுள்ளது. போட்டியாளர்கள்0777570577 என்னும் தொலை போசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும். (க)

# கூடைப்பந்தாட்ட போட்டி

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட கூடைபந்தாட்ட சங்கம் நடத்தும் முல்லைக் கிண்ண கூடைப்பந்தாட்ட சுற்றுப் போட்டி எதிர்வரும் 20, 21, 22-ம் திகதிகளில் மல்லாவி மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்ட திடலில் நடைபெறவுள்ளது.

இப் போட்டியின் இறுதி நாள் நிகழ்வு எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை மாலை 6 மணியளவில் நடைபெறும் என முல்லைத்தீவு மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்கம் அறிவித்துள்ளது. (க)

# மூன்று ஆண்டுகளில் 1618 கொலைகள், ஆறாயிரத்து 216 பாலியல் வல்லுறவுகள்

(கொழும்பு)

**கடந்த மூன்று வருடங்களில் 1618 பேர் கொலை செய்யப் பட்டுள்ளதுடன் 6216 பாலியல் வல்லுறவுச் சம்பவங்கள் இடம் பெற்றுள்ளதாக சட்டமும் ஒழுங்கும் அமைச்சர் சாகல ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.**



நாடாளுமன்றத்தில்நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற வாய்மூல விடைக் கான கேள்விச்சுற்றில் கரு த்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

2013 ஆம் ஆண்டில் 586 பேரும் 2014 இல் 548 பேரும் 2015 இல் 476 பேரும் கொலை செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் இதன்போது தெரிவித் துள்ளார்.

அத்துடன் கடந்த மூன்றா ண்டுகளில் ஒரு இலட்சத்து 11 ஆயிரத்து 950 திடீர் விபத் துக்கள் இடம்பெற்றுள்ள துடன் இவற்றில் 13 ஆயி ரத்து 580 பேர் உயிரிழந் துள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ-5)




# ஆனந்ததேரருக்கு கொலை மிரட்டல்

பெவிதி ஹண்ட அமைப் பின் தலைவர் முரத்தட்டுவே ஆனந்த தேரருக்கு கொலை மிரட்டல் விடுக்கப்பட்டுள்ள தாக தெரிவிக்கப்படுகிறது.

நாரஹேன்பிட்டி அபயா ராமயவில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் ஆனந்த தேரர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக் கையில்,

சில தினங்களாக எனக்கு தொலைபேசி மூலமும் கடி தம் மூலமும் கொலை மிரட் டல் விடுக்கப்படுகின்றது.

அநாமதேய அழைப்புக் களின் மூலம் கொலை மிரட் டல் விடுக்கப்படுகின்றது.

இந்த எந்தவொரு தொலை பேசிஅழைப்பு கொலை மிரட்டல்களுக்கும் நான் அஞ்சப் போவ தில்லை.

பௌத்த பிக்கு என்ற வகையில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்காக தொடர்ந்தும் குரல் கொடுப்பேன்.

கொலை மிரட்டல் விடுக்கும் கடிதங்கள் மற்றும் தொலைபேசி அழைப்புக்கள் விடுக் கப்பட்ட இலக்கங்கள் தொடர்பில் புலனாய் வுப் பிரிவினரிடம் முறை ப்பாடு செய்யப்பட்டுள் ளது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

**மகாதேவ ஆச்சிரமம்**
**MAHADEVA ASHRAMAM**
**Regd. No: SVP 104/44 OF 29.10.1976**

**ஆண்டுப் பொதுக் கூட்டம்**

காலம்:- 22.05.2016 ஞாயிற்றுக்கிழமை
மாலை 4 மணி

இடம்:- ஆச்சிரம பிரார்த்தனை மண்டபம்

*நிகழ்ச்சி நிரல்*

★ தேவாரம்
★ தலைமையுரை:-ஸ்ரீமத்கணேஷானந்த மகாதேவ சுவாமிகள்
★ செயலாளர் அறிக்கை
★ நிதி அறிக்கை
★ நிர்வாக சபை தெரிவு
★ நன்றியுரை

**அங்கத்தவர்கள் யாபேரும் பங்குபற்றி சிறப்பிக்கு மாறு அன்புடன் அழைக்கின்றேன்.**

**அன்பே சிவம்**
**இறைபணியில், ஞான சிரோன்மணி**
**ஸ்ரீமத் கணேஷானந்த மகாதேவ சுவாமிகள்,**
**குருபீடாதிபதி.**

(4427)

உ

குருவே துணை

**வருடாந்த வைகாசிப் பெருவிழா-2016**

இடம்:- சந்நிதியான் ஆச்சிரமம்
காலம்:- 20.05.2016 வெள்ளிக்கிழமை
நேரம்:- முற்பகல் 10 மணியளவில்
ஆசியுரை:- நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்

**விசேட நிகழ்வுகள்**

**கலைநிகழ்வுகள்**

தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலய மாணவர்கள்

**பட்டிமன்றம்**

தலைப்பு:- இன்று தமிழ் மக்களுக்கு பெரிதும் பயன்படும் இலக்கியம் இராமாயணமா? மகாபாரதமா?
அணி திரு. T.கருணாகரன், திரு S.கம்சன்
அணி திரு S.செந்தூர்ச்செல்வன், திரு. T.தயாபரன்
நடுவர்:- செஞ்சொற்செல்வர் இரா.செல்வவடிவேல்

வாராந்த நிகழ்வு வரிசையில்
சொற்பொழிவு:- கந்தபுராணம்
வழங்குபவர்:- திரு அ.குமாரவேல், சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ்.கல்லூரி,வட்டுக்கோட்டை

வழமைபோன்று ஸ்ரீசெல்வச்சந்நிதி ஆலயத்தில் நடைபெறும் பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து மேற்படி நிகழ்வுகள் யாவும் இடம்பெறும்.

சந்நிதியான் ஆச்சிரமம்
செல்வச்சந்நிதி,
தொண்டைமானாறு.

(4599)

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைப் பண்பாட்டுப் பேரவையினர்

# இராசி பலன்

19.05.2016
(வைகாசி 06, வியாழக்கிழமை)
சூரிய உதயம் காலை 5.54 மணிக்கு
திரயோதசி முன்னிரவு 11.18மணிவரை
சித்திரை பிற்பகல் 2.34 மணிவரை
சுபநேரம் 7.22-8.52 மணிவரை
இராகுகாலம் 1.22-2.52 மணிவரை
பிரதோச விரதம், சித்தாமிர்தம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | சுக், புத | சூரி | |
| கேது | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>உத்திரட்டாதி, ரேவதி | | |
| | | | குரு ராகு |
| | சனி செவ் | சந் | |

**மீனம்:** வரவும் செலவும் சமமாகும், எதையும் ஒரு முறைக்கு பல முறை யோசித்து செய்வது நல்லது, காரிய வெற்றிக்கு கடவுளை வழிபட வேண்டிய நாள்.

**மேடம்:** மறக்க முடியாத இனிய சம்பவமொன்று இடம்பெற லாம், உடல்நலம் சீராகும், மகிழ்ச்சிக்குரிய செய்தியொ ன்று வந்து சேரலாம், காரிய அனுகூலமுண்டு.

**இடபம்:** உள்ளம் மகிழும் விதத்தில் உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், கொடுக்கல்-வாங்க ல்கள் ஒழுங்காகும், குடும்பத் தில் சுகங்களும் சந்தோசங்க ளும் அதிகரிக்கும்.

**மிதுனம்:** பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், உறவினர் வழியில் இனிய செய்திகள் வந்து சேரலாம், நல்லவர்களின் தொடர்பால் நலம் காணும் நாள்.

**கும்பம்:** நேற்றைய பணியொன்று இன்றும் தொடரலாம், தொலை பேசி வழித் தகவல் மனக் குழப்பத்தை அகற்றும், புதிய திட்டங்கள் கைகூடும் நாள்.

**கடகம்:** இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப் புண்டு, தொல்லை கொடுத்த சிலரே தோள் கொடுத்து உதவ முன்வருவர், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும்.

**மகரம்:** எண்ணிய காரியங்கள் எளிதில் நிறைவேறும் நாள், ஆடம் பரப் பொருட்களில் அதிக ஆர்வம் காட்டுவீர்கள், உங்க ளின் திறமைகள் வெளிப்படும் நாள்.

**சிம்மம்:** உறவு-பகை பாராமல் ஒற்று மையாக இருக்கும் நாள், சிந்திக்காமல் செய்த காரியங் களில் கூட சிறப்படைவீர் கள், அரசியல் செல்வாக்கு மேலோங்கும்.

**தனுசு:** தித்திக்கும் செய்திகள் வந்து சேரலாம், பயணங்கள் கைகூடு வதற்கான வாய்ப்புண்டு, இலட்சியப் பாதையில் அடி யெடுத்து வைப்பீர்கள், கௌர வமான நாள்.


**விருச்சிகம்:** சுப செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், பயணங்களால் பலன் கிடைக்கும், தொழில் ரீதியாக எடுத்த முயற்சிகள் கைகூடும், சயன சுகக் குறை வுகள் ஏற்படலாம்.

**துலாம்:** உறவினர்கள் தொடர்பான சில காரியங்களுக்காக அலைய நேரிடலாம், புதிய பொறுப்புக் களை யோசித்து ஏற்பது நல்லது, கற்பனை மிகுதியான நாள்.

**கன்னி:** குடும்ப மகிழ்ச்சி கூடும் நாள், வழிபாட்டால் சந்தோசம் காண வேண்டிய நாள், சுய முயற்சியின் மூலம் சுகம் காண வேண்டிய நாள்.

# நிரந்தர நியமனம் வழங்கவேண்டும்

## 9 ஆவது நாளாக நேற்றும் ஊழியர்கள் போராட்டம்



யாழ்.மாநகர சபையின் சுகாதார பிரிவில் தற்காலிகமாக கடமையாற்றி வரும் ஊழியர்கள் தமக்கான நிரந் தர நியமனம் கோரி நேற்று ஒன்பதாவது நாளாக தமது போராட்டத்தைத் தொடர்ந்தனர்.

இக்கவனயீர்ப்பு போராட்டத்தை யாழ்.மாநகர சபை முன்றலில் மேற்கொண்ட னர். இதே வேளை நிரந்தர நியமனம் வழங்கும் வரை போராட்டம் இடம்பெறும் எனவும் கூறினர்.

யாழ்.மாநகர சபையின் சுகாதாரப் பிரிவில் தற்காலிகமாக கடமையாற்றி வரு கின்ற நிலையில் இதுவரை தமக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படவில்லை என தெரிவித்து நேற்று ஒன்பதாவது நாளாக போராட்டத்தை நடத் தியிருந்தனர்.


போராட்டத்தில் ஈடுபட்டோர் மேலும் தெரிவிக்கையில்,

இங்கு 140 பேர் போராட்டத்தில் ஒன்பது நாட் களாக ஈடுபட்டுள்ளோம். எமக் கான தீர்வு எவராலும் இன் னும் பெற்று தரப்படவில்லை. நாங்கள் கடந்த 10 வருடங்களுக்கு மேலாக நிரந்தர நியமனம் வழங்காமல் கடமையாற்றி வருகின்றோம். எமக் கான நியமனம் ஏன்தரப்படவில்லை.

ஆனால் குறிப்பிட்ட காலம் பணி புரிந்த ஊழியர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளது. எங்களுக்கான நிரந்தரநியமனம் வழங்கும் வரை எமது கவனயீர்ப்பு போராட்டம் நீடிக்கும் எனவும் தெரிவித்தனர். (இ-7)




# நயினாதீவு நாகபூஷணி அம்மன் மஹோற்சவப் பெருந்திருவிழா



(யாழ்ப்பாணம்)

நயினாதீவு ஸ்ரீ நாக பூஷணி அம்மன் கோவில் வருடாந்த மஹோற்சவப் பெருந்திருவிழா எதிர்வரும் 6 ஆம் திகதி திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 15 தினங்கள் திருவிழா இடம்பெறும்.

10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரவு முத்துச் சப்பறமும் 15 ஆம் திகதி புதன் கிழமை பகல் சிவபூசைகைலை காட்சியும் இரவு திரு மஞ்சமும்16 ஆம் திகதி வியா ழக்கிழமை பகல் விசேட கருட சர்ப்ப பூசையும் வாயு பட்சணி நாகம் வீதியுலாவும் இரவு பூந்தண்டிகையும் 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை குதிரை வாகனமும் 18 ஆம் திகதி சனிக்கிழமை பகல் கைலைக் காட்சியும் இரவு சப்பறத் திருவிழாவும் 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழாவும் 20 ஆம் திகதி திங்கட்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (இ-5)

# வள்ளலார் தயானந்த இல்லம் திறப்பு விழா

கொடிகாமம் மீசாலை வடக்கு சமரச சுத்த சன்மார்க்க சத்திய ஞான கோட்டம் நடத்தும் வள்ளலார் தயானந்த இல்லம் திறப்பு விழா எதிர்வரும் 25 ஆம் திகதி புதன்கிழமை மட்டுவில் வடக்கு ஸ்ரீ வேற்பிள்ளை வாசிகசாலை ஒழுங்கையில் அமைந்துள்ள வள்ளலார் தயானந்த இல்லத்தில் நடைபெறும். (இ-5-7)

# வடமராட்சியில் அடைமழை காரணமாக இதுவரை 442 குடும்பங்கள் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

கடந்த மூன்று நாட்களாக தொடர்ச்சியாக பெய்த பலத்த காற்றுடனான அடைமழை காரணமாக வடமராட்சி பிரதேசத்தில் 442 குடும்பங்கள் இதுவரை பாதிகப்பட்டுள்ளன. 55 வீடுகள் சேதமடைந்துள்ளன. அத்துடன் படகுகள் மற்றும் வலைகளுக்கும் சேதம் ஏற்பட்டுள்ளன.

வடமராட்சி வடக்கு (பருத்தித்துறை) பிரதேசத்தில் அல்வாய் வடக்குப் பகுதியில் 33 வீடுகள் சேதமடைந்துள்ளன. 64 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. வடமராட்சி தென்மேற்கு (கரவெட்டி) பிரதேசத்தில் அல்வாய் பகுதியில் 9 வீடுகள் சேதமடைந்துள்ளன. 79 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. வடமராட்சி கிழக்கு (மருதங்கேணி) பிரதேசத்தில் குடாரப்பு கிராமத்தில் 12 வீடுகள் சேதமடைந்துள்ளன. 369 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. 6 படகுகள் காணாமல் போயுள்ளன. 2 வலை மடிகளை பேரலை முற்றாக இழுத்துச் சென்றுள்ளது. 98 வலைகள் பயன்படுத்த முடியாமல் சேதமடைந்துள்ளன. அல்வாய் கைவிரை பகுதியில் பனை மரங்கள் முறிந்து வீழ்ந்ததில் மின்கம்பிகள் அறுந்து தொங்குகின்றன. மின்கம்பங்களும் வீழ்ந்து கிடக்கின்றன.

அடைமழை காரணமாகப் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருட்கள் வழங்குவதற்கு பிரதேச அரச அதிகாரிகள் மாவட்ட செயலகத்திற்கு பரிந்துரை செய்துள்ளதாகக் கூறப்படுகிறது. (இ-5)

# கேசாவில் வீதி எப்போது திருத்தப்படும்?



யாழ். மாநகரசபைக்குட்பட்ட கேசாவில் வீதி நீண்ட காலமாக திருத்தமின்றி காணப்படுவதாக பொதுமக்களால் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.கே.கே.எஸ். வீதி மற்றும் மானிப்பாய் வீதி என்பவற்றை இணைக்கும் பிரதான வீதியாக இவ் வீதி காணப்படுகின்றது. இவ் வீதி தொடர்பாக உரிய அதிகாரிகள் கவனமெடுக்குமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-5)

# ராணுவ வாகனத்துடன் மோ.சைக்கிள் விபத்து

## முதியவர் படுகாயம்

(கரணவாய்)

இராணுவ வாகனமும் மோட்டார்சைக்கிளும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகியதில் முதியவர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இவ் விபத்துச் சம்பவம் நேற்றுக்காலை 9 மணியளவில் தொண்டைமானாறு செல்வச்சந்நிதி கோவில் சந்திப் பகுதியில் இடம்பெற்றது.

தெல்லிப்பழை நீதவான் முகாமைச் சேர்ந்த மயிலன் குணசீலன் (வயது-60) என்ற வயோதிபரே விபத்தில் படுகாயமடைந்தவராவார்.

வல்வெட்டித்துறையில் இருந்து மோட்டார் சைக்கிளில் யாழ்ப்பாணம் வந்து கொண்டிருந்த மேற்படி வயோதிபரை யாழ்ப்பாணத்தில் இருந்து சென்ற இராணுவ வாகனம் மோதித் தள்ளியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

படுகாயமடைந்த வயோதிபர் சிகிச்சைக்காக பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் தொடர்பிலான விசாரணைகளை வல்வெட்டித்துறைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-5-60)

# இணைப்பாளர் தெரிவு

அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கத்தின் யாழ். மாவட்ட இணைப்பாளராக எஸ்.சசிகரன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.2015.05.01 ஆம் திகதி நடைபெற்ற 23 ஆவது வருடாந்த பொதுக்கூட்டத்தில் இத் தெரிவு இடம்பெற்றது. (இ-5)

# மணவாளக்கோலத் திருவிழா

தெல்லிப்பழை கிழக்கு பெரிய கலட்டி அருள்மிகு ஞான வைரவர் சுவாமி கோவில் கும்பாபிஷேக தின 2 ஆம் வருட வருஷாபிஷேக நவோத்திர ஸகஸ்ர மஹா சங்காபிஷேக மணவாளக் கோலத் திருவிழா நாளை மறுதினம் 21 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது. (இ-5)





Vijayalanka Exports & Contracts Co.Pvt.Ltd ஆனது தனது நெல்லியடிக்கிளையினை இல.50 எம்.எம்.வீதியில் அமைத்துள்ளது. இக்கிளைக்கான திறப்பு விழா கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற போது இலங்கை வங்கி நெல்லியடி முகாமையாளார் ஜி.பரதன் கிளையினை திறந்து வைத்தார்.

# பகுதிநேர கற்கைநெறிக்கு விண்ணப்பங்கள் கோரல்


(யாழ்ப்பாணம்)

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையானது யாழ். மாவட்டத்திலுள்ள யாழ்ப்பாணம் மற்றும் கைதடி தொழிற்பயிற்சி நிலையத்தில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப வியலாளர், குளிர்சாதன இயந்திர திருத்துநர் மற்றும் டீசல் வாகன இயந்திர திருத்துநர் பயிற்சி நெறிகளை பகுதிநேரமாக எதிர்வரும் மாதத்தில் ஆரம்பிக்கவுள்ளது.

இக் கற்கை நெறிகளை கற்க விரும்புவர்கள் தங்கள் பதிவுகளை அலுவலக நேரத்தில் மாவட்ட அலுவலகம் முதலாம் மாடி வீரசிங்கம் மண்டபம் இல. 12, கே.கே.எஸ். வீதி யாழ்ப்பாணம் எனும் முகவரியில் எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளுமாறு இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையின் யாழ். உதவிப் பணிப்பாளர் கு.நிரஞ்சன் அறிவித்துள்ளார். (இ-5)

# நல்லிணக்கத்தை ஏற்படுத்த ஒருபக்க அர்ப்பணிப்பு போதுமானது அல்ல

## அமைச்சர் சம்பிக்க தெரிவிப்பு



(கொழும்பு)

**நல்லிணக்கத்தை ஏற்ப்டுத்துவதற்கு ஒரு தரப்பின் அர்ப்பணிப்பு மட்டும் போதுமானது அல்ல என அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.**

அவிசாவளையில் நேற்று முன்தினம்நடைபெற்ற ஜாதிக ஹெல உறுமய கட்சியின் கருத்தரங்கு ஒன்றில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஒரு தரப்பு அர்ப்பணிப்பின் ஊடாக மட்டும் நல்லிணக்கத்தை நிலைநாட்டிவிட முடியாது. இரு தரப்பு அரப்பணிப்பு அவசியமானது.

சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம்களின் ஒத்துழைப்பும் அர்ப்பணிப்பும் அவசியமாகின்றது.

நாட்டின் கொள்கைகள் குறித்து நாடாளுமன்றிலேயே தீர்மானம் எடுக்க வேண்டும். மாகாண சபைகளுக்கு அதற்கான உரிமை கிடையாது.

அண்மையில் வடக்கில் சமஷ்டி குறித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தமிழக சட்ட மன்றத் தேர்தல் மற்றும் அரசியல் அமைப்பு திருத்தங்களில் தாக்கம் செலுத்தும் நோக்கில் இந்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

1939 ஆம் ஆண்டில் தமிழகத்தில் ராமசாமி நாயக்கர் தனித் தமிழ் நாட்டு கொள்கைகயை முன்னெடுத்தார். இந்தப் போராட்டத்தில் பின்னர் அறுஞர்அண்ணா, மு.கருணாநிதி போன்றவர்களும் இணைந்து கொண்டிருந்தனர்.

1957 ஆம் ஆண்டில் அண்ணா தலைமையில் தமிழக சட்ட மன்றத் தேர்தலில் போட்டியிட்டு குறிப்பிட்டளவு வெற்றியீட்டிய போதிலும் ஆட்சியை கைப்பற்ற முடியவில்லை. நேருவின் கட்சியே ஆட்சியை அமைத்தது.

1962 இல் கருணாநிதி மீளவும் தேர்தலில் போட்டியிட்டார். எனினும் வெற்றியீட்ட முடியவில்லை.

எமது தலைவர்களைப் போன்று அல்லாது நேரு ஓர் கடுமையான தீர்மானத்தை எடுத்தார்.

தனிநாட்டு கோரிக்கையை முன்வைப்போர் தேர்தலில் போட்டியிட முடியாது என அறிவித்து, ஐக்கிய இந்தியாவை எதிர்ப்போரை கைது செய்தார்.

அதன் பின்னர் தனிநாட்டு கோரிக்கை கைவிடப்படும் என கருணாநிதி தரப்பினர அறிவித்தனர். அதன் பின்னரே கருணாநிதி தரப்பினர் தேர்தலில் போட்டியிட்டு வெற்றியீட்டினர்.

ஏழுஆண்டுகளுக்குமுன்னதாக இலங்கைப் படையினர் வெளிநாட்டு படைகளின் உதவியின்றி பயங்கரவாதத்தை இல்லாதொழித்தனர்.

இராணுவம் காணிகளை கைப்பற்றியுள்ளதாக கூறப்படுகின்றது. பாதுகாப்பை நிலைநாட்டியதன் பின்னர் காணிகள் மீள ஒப்படைக்கப்பட வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு.

தமிழீழ விடுதலைப் புலிகளினால் அபகரிக்கப்பட்ட சிங்கள முஸ்லிம்களின் காணிகளும் மீள ஒப்படைக்கப்பட வேண்டும்.

கடும்போக்குவாதம், பயங்கரவாதம் மற்றும் பிரிவினை வாதத்தையே நாம் எதிர்க்கின்றோம்.

மகிந்த ராஜபகஷ ஆட்சிக் காலத்தில் காணப்பட்ட சர்வாதிகார குடும்ப ஆட்சி தற்போது இல்லை.

இன்று தேசப்பற்றாளரகள் என மார்தட்டிக் கொளளும் எவரும் அன்று மாவிலாறுக்கு சென்று மக்களுக்காக குரல் கொடுக்கவில்லை என சம்பிக்க ரணவக்க மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

## உள்ளூராட்சி மன்றத் தேர்தலை துரிதப்படுத்த பவ்ரல் கோரிக்கை

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை துரிதப்படுத்துமாறு பவ்ரல் அமைப்பு மீளவும் கோரிக்கை விடுத்துள்ளது.

தேர்தல் ஆணைக்குழுவிடம் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

எல்லை நிர்ணயம் தொடர்பிலான பிரச்சினை காரணமாகவே தற்போதைக்கு உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடத்தப்பட முடியாது என கூறப்படுவதாக பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.



எல்லை நிர்ணயப் பிரச்சினைகள் ஏற்படாத வகையில் தேர்தலை துரிதகதியில் நடத்துமாறு நாம் கோரியுள்ளோம் என அவர் தெரிவித்துள்ளார்.

முறைப்பாடு செய்யப்படாத சர்ச்சைகளற்ற உள்ளூராட்சி மன்றங்களுக்காக தேர்தல் நடத்தப்பட முடியும் என அவர் தெரிவித்தார்.

சிங்கள பத்திரிகையொன்று உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போது அவர் இதனைத் தெரிவித்தார். (இ-5)

### தரம்-5 மாணவர்களுக்கான புலமைப்பரிசில் பரீட்சை — மாதிரி வினாத்தாள் இல-11

**(18.05.2016 அன்று வெளிவந்த வினாத்தாளுக்குரியவை)**

| | | | |
|---|---|---|---|
| 1) 3 | 11) 3 | 21) 3 | 31) 1 |
| 2) 2 | 2) 3 | 22) 1 | 32) 1 |
| 3) 2 | 13) 2 | 23) 2 | 33) 2 |
| 4) 3 | 14) 3 | 24) 3 | 34) 3 |
| 5) 1 | 15)1 | 25) 1 | 35) 2 |
| 6) 2 | 16)3 | 26) 2 | 36) 3 |
| 7) 2 | 17) 1 | 27) 3 | 37) 1 |
| 8) 2 | 18) 3 | 28) 1 | 38) 2 |
| 9) 1 | 19) 2 | 29) 2 | 39) 3 |
| 10)3 | 20) 1 | 30) 1 | 40) 3 |


கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: பூரம்
கி.பா:42சூரிசெவ் 11 இல்
உயரம்: 5'11"
தகைமை/தொழில்:BBM/சொந்த தொழில்
தொ.இ: B/5824

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை
கி.பா: 4
உயரம்: 5'4"
தகைமை/தொழில்:A/L/ நோர்வே PR
தொ.இ: B/5825

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: உத்தரம்
கி.பா: 27சூரிசெவ் 5 இல்
உயரம்: 5'7"
தகைமை/தொழில்A/L/தனியார் தொழில்
தொ.இ: B/5826

பிறப்பு: 1978 RC
நட்சத்திரம்: சித்திரை
கி.பா: 42சூரிசெவ் 1 இல
உயரம்: 5'11"
தகைமை/தொழில்:BSc,Mphill/பொறியியளாளர் லண்டன் குடியுரிமை
எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்கப்படும்
தொ.இ: B/5827

இவர்களுக்கு மணமகன் தேவை


பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: சுவாதி
கி.பா: 26செவ் 4 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:A/L
தொ.இ: G/5856

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம்
கி.பா: 95செவ் 7 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்:A/L
தொ.இ: G/5857

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: பூசம்
கி.பா: 81சூரிசெவ் 1 இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்:BA/அரசதொழில்
தொ.இ: G/5858

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: மூலம்
கி.பா: 36செவ் 12 இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்:CIMA/கணக்காளர்
தொ.இ: G/5864

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு: 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

நாட்டில் ஏற்பட்ட சீரற்ற காலநிலை காரணமாக கடந்த சில நாட்களாக கொட்டித் தீர்த்த கன மழை காரணமாக கிளிநொச்சி அக்கராயன் குளம் வான் பாய்கின்றது. இதேவேளை புதுமுறிப்புக்குளம் வீதியின் குறுக்காக வெள்ளம் பாய்வதை படங்களில் காணலாம்.

(படங்கள்:-கரணவாய் செய்தியாளர்)

# அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் திருவண்ணை நகர் அருள் மிகு மகா மாரி அம்மாள் திருக்கோவில் அலங்கார உற்சவம் நாளை வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி ஜூன் மாதம் 05 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இதற்கமைய 31 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சப்பறத் திருவிழாவும் முதலாம் ஆம் திகதி புதன்கிழமை குதிரை வாகனமும் 2 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு தேர்த்திருவிழாவும் இடம்பெறும். (இ-5)

# மழைவெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சாந்தி எம்.பி. உதவி

(பனிக்கன்குளம்)

அண்மைய நாட்களாக ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலை காரணமாக வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களை பார்வையிடுவதற்காக மாங்குளம் பகுதிக்கு நேற்று முன்தினம் தமிழ்த தேசியக்கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி ஸ்ரீகந்தராசா சென்றிருந்தார். இதனபோது கிராம சேவையாளருடன் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் நிலைகளை கேட்டறிந்து அவர்களுக்கு வழங்கப்பபட்டுள்ள உதவிகள் பற்றி கலந்துரையாடினார்.

அதன்பின் மிக மோசமாக பாதிக்கப்பட்ட குடும்பத்தினரின் வீட்டிற்கு கிராம சேவையாளருடன் நேரடியாகச் சென்று அவர்களுக்கு தேவையான அத்தியாவசிய உணவுப்பொருட்களினை வழங்கிவைத்தார். (இ-15-281)



# ஒப்பந்த அடிப்படையிலான தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்த்தல்

(கிளிநொச்சி)

சிறைச்சாலைகள், புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சினால் வடக்குக் கிழக்கில் உள்நாட்டில் இடம்பெயர்ந்து மீளக்குடியமர்ந்த மற்றும் இந்தியாவிலிருந்து மீளத் திரும்பியவர்களுக்காக 2016 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்படும் வீடமைப்புத் திட்டத்தின் மூலம் கிளிநொச்சி மாவட்டத்தில் அமைக்கப்படவுள்ள வீடுகளை தொழில்நுட்ப மேற்பார்வை செய்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தேசிய பயிலுநர் மற்றும் தொழில் பயிற்சி அதிகார சபையினால் வழங்கப்படும் தேசிய பொறியியல் டிப்ளோமா (சிவில்) சான்றிதழ் அல்லது கல்வி உயர்கல்வி அமைச்சினால் வழங்கப்படும் தேசிய உயர் பொறியியல் சான்றிதழ் (சிவில்) தகைமையுடன் ஆகக்குறைந்தது இரண்டு வருட முன் அனுபவமுள்ள விண்ணப்பதாரர்கள் தங்களது சுய விபரக் கோவையினை (துங்கள் தொலைபேசி இலக்கத்துடன்) 30.05.2016 ஆம் திகதிக்கு முன்னர் திட்டமிடல் பணிப்பாளர், மாவட்டச் செயலகம் கிளிநொச்சி என்னும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கவும். நேர்முகப் பரீட்சைக்கான திகதி தபால் மூலம் அறியத்தரப்படும் என கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் அறிவித்துள்ளார். (இ

# மரண அறிவித்தல்

## திருமதி இந்திராதேவி சுந்தரலிங்கம்



புங்குடுதீவு 3 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 162/3, பருத்தித்துறை வீதி, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இந்திராதேவி சுந்தரலிங்கம் அவர்கள் கடந்த 15.05.2016 ஞாயிற்றுக்கிழமை அன்று இந்தியாவில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா- அலங்காரம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான அப்பாக்குட்டி- அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் சுந்தரலிங்கத்தின் ( Mayoora Hotel, Colombo) அன்பு மனைவியும் சுகிர்தா, சுதர்சன் (Mayoora Gift Centre) மயூரதி, தர்சினி, மதுசூதனன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் லோகேஸ்வரன் (Engineer, RDA), கிசோன் ( Rathy Fashion Fair) ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்ற ரவீந்திரன் மற்றும் யோகேஸ்வரன் (Sun Printers , Colombo) புவனேந்திரன் (கனடா), சுரேஸ்கரன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் மஞ்சுளாதேவி (இந்தியா), சுலோசனா (கொழும்பு), ரஞ்ஜனி (கனடா), அகிலா (கனடா), சோமசுந்தரம் (கனடா), காலஞ்சென்றவர்களான சிவபாதசுந்தரம், நாகலெட்சுமி மற்றும் கமலாம்பிகை ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஸ்ரீநீத்,சாயிஷ் ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.05.2016) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப.3.30 மணியளவில் கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(4704)

162/3, பருத்தித்துறை வீதி,
நல்லூர்.

தகவல்:
குடும்பத்தினர்.
021 222 6491

# யாழ்.பல்கலையில் நினைவேந்தல்








முள்ளிவாய்க்காய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு நேற்றைய தினம் யாழ். பல்கலைக்கழக சமூகத்தின் ஏற்பாட்டில் முற்பகல் 10 மணிக்கு யாழ். பல்கலைக்கழக முன்றலில் அனுஷ்டிக்கப்பட்டது.
(படங்கள்:-கு.கஜரூபன்)

# முல்லைத்தீவில் நேற்று பூரண கடையடைப்பு









முல்லைத்தீவு மாவட்டத்தில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வை முன்னிட்டு நேற்று பூரண கடையப்பு மேற்கொள்ளப்பட்டது.
(படங்கள்:-பனிக்கன்குளம் செய்தியாளர்)

வடமாகாண வல்லவன் தொடர்

# சமநிலை தவிர்ப்பு உதையில் நவசக்தியை வென்றது றோயல்







பருத்தித்துறை உதைபந்தாட்ட சங்க அனுமதியுடன் நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக்கழகம் நடத்தும் "வடமாகாண வல்லவன் -2016" உதைபந்தாட்ட தொடரின் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற போட்டிகளில் முதலாவது போட்டியாக றோயல் வி.க. எதிர்த்து நவசக்தி வி.க. மோதியது.

பரபரப்பான முதலாவது போட்டியில் முதலாவது கோலினை ஆட்டத்தின் 13 ஆவது நிமிடத்தில் நவசக்தி வி.க. தவநீதன் பதிவு செய்ய முதற்பாதி ஆட்டத்தில் நவசக்தி வி.க. 1: 0 என முன்னிலை பெற்றது. தொடர்ந்த இரண்டாவது பாதி ஆட்டத்தில் றோயல் வி.க. வீரர் கஜகோபன் ஆட்டத்தின் 34 ஆவது நிமிடத்தில் கோலினை அடிக்க மீண்டும் சமநிலையானது.

தொடர்ந்து 42 ஆவது நிமிடத்தில் நவசக்தி வி.க. கிடைக்கப் பெற்ற அரிய சந்தர்ப்பத்தினை சயந்தன் கோலாக மாற்றி வலுச் சேர்த்தார்.

தொடர்ந்து றோயல் வி.க. பல முயற்சிகளை மேற்கொண்ட போதும் ஆட்டத்தின் இறுதி நிமிட முயற்சியில் றோயல் வி.க. கோலினை பெற ஆட்ட நேர முடிவில் மீண்டும் சமநிலையானது.

சமநிலை தவிர்ப்புக்காக போட்டி சமநிலை தவிர்ப்பு உதைக்கு தள்ளப்பட்டது.

சமநிலை தவிர்ப்பு உதையில் 3:0 என றோயல் வி.க. வெற்றி பெற்றது.

போட்டியின் ஆட்ட நாயகனாக றோயல் வி.க. வீரர் கஜகோபன் தெரிவு செய்யப்பட்டு அவருக்கான பணப்பரிசு மற்றும் பதக்கத்தினை கழுகுகள் வி.க. மூத்த வீரரும் கழக ஆலோசகருமாகிய துரைச்சாமி செல்வராசா (மதன்) வழங்கி கௌரவித்தார். (க)

# தெல்லிப்பழை நாமகள் வி.கழக வலிகாம ரீதியிலான உதைபந்தாட்டம்

## றெட் றேஞ்சர்ஸ் சம்பியன்






சாவற்காடு மகாத்மா விளையாட்டுக்கழகத்தை வீழ்த்தி நாமகள் வெற்றிக்கிண்ணத்தை கைப்பற்றியது மானிப்பாய் றெட்றேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழகம்.

தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக்கழகம் 53ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு கழகங்களுக்கு இடையே நடத்தும் உதைபந்தாட்டப் போட்டியின் இறுதிப்போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நாமகள் விளையாட்டுக் கழக மைதானத்தில் கழகத்தலைவர் நா.சதீஸ்குமார் தலைமையில் நடைபெற்றது.

வலிகாமம் லீக் மட்டும் நடந்த உதைபந்தாட்ட போட்டியின் இறுதிப் போட்டியில் மானிப்பாய் றெட் றேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து சாவற்காடு மகாத்மா விளையாட்டுக்கழகம் மோதியது. மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற போட்டியில் மானிப்பாய் றெட் றேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழகம் சம்பியன் பட்டத்தை தட்டிச்சென்றது. மாவட்ட ரீதியில் நடைபெற இருந்த போட்டி மழை காரணமாக நடைபெறவில்லை. எதிர்வரும் கிழமை மேற்படி போட்டி நடைபெறும் என போட்டி ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (க)



அண்மையில் நடைபெற்ற தேசிய தடகள சம்பியன்ஷிப் போட்டியில் 20 வயதுப் பிரிவில் 10 ஆயிரம் மீற்றர் (walking race) ஓட்டத்தில் வெண்கலப் பதக்கத்தினை வென்ற கே.கனகேஸ்வரியை படத்தில் காணலாம்.

# யாழ்ப்பாண மாவட்ட பிரதேச செயலகங்களுக்கிடையிலான கபடி

## சென்.தோமஸ் சம்பியன்



யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்களுக்கிடையிலான கபடி போட்டிகள் அண்மையில் (ஆண்,பெண்) வல்வை ரேவடி உல்லாசக் கடற்கரையில் இடம்பெற்றது.

இதில் பருத்தித்துறை பிரதேச செயலகத்தை பிரதிநிதித்துவப்படுத்திய சென்.தோமஸ் அணி யாழ். மாவட்ட சம்பியன் பட்டத்தை வென்றது. (க)

# இளங்கதிர், ரேவடி அரையிறுதிக்குத்தகுதி



மறைந்த நேதாஜி விளையாட்டுக்கழக உறுப்பினர் சிவனடியார் நவரட்ணம் ஞாபகார்த்தமாக நடத்தப்படும் உதைபந்தாட்ட தொடரில் இடம்பெற்ற ஆட்டத்தின் முதல் போட்டியில் உதயசூரியன், இளங்கதிர் அணிகள் மோதின. இதில் கோல் மழை பொழிந்த இளங்கதிர் அணி 7:0 என்ற கோல் கணக்கில் அபார வெற்றி பெற்றது.

விறுவிறுப்பாகநடைபெற்ற இரண்டாவது ஆட்டத்தில் 2 : 0 என்ற கோல் கக்கில் ரேவடி அணி தீருவில் அணியை வெற்றி கொண்டது. (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# இன்றைய போட்டிகள்

பருத்தித்துறை உதைபந்தாட்ட சங்க அனுமதியுடன் நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக்கழகம் நடத்தும் வடமாகாண வல்லவன் உதைபந்தாட்ட தொடரில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும் போட்டியில் இமையாணன் மத்தி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து பொற்பதி விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது. (க)

# பழிவாங்கல்களுக்கு உள்ளானவர்களுக்கு பதவியுயர்வு வழங்குவதை எதிர்த்து வழக்கு

(கொழும்பு)

**கல்வித்துறையில் கடந்த அரசாங்கத்தின் அரசியல் பழிவாங்கல்களுக்குள்ளானோருக்கு பதவி உயர்வுகள் வழங்கும் தீர்மானத்துக்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் சார்பில் அதன் உபதலைவர் ஆர். எல். ஹந்தபான்கொட உள்ளிட்ட ஆறு பேர் இதனைத் தாக்கல் செய்துள்ளனர்.

பிரதிவாதிகளாக கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் மற்றும் அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட 26 பேர் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

கடந்த அரசாங்கத்தின் காலத்தில் அரசியல் பழிவாங்கல்களுக்குள்ளான நான்காயிரத்துக்கும் அதிகமான கல்விச் சேவை உத்தியோகத்தர்களுக்கு கல்வி நிர்வாக சேவையில் பதவி வழங்க அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் மேற்கொண்டுள்ள முயற்சிகளை எதிர்த்தே இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இதன் காரணமாக கல்வி அமைச்சில் மேற்கொள்ளப்படவிருந்த அரசியல் பதவி உயர்வுகளுக்கு தற்காலிகத் தடை விதிக்கப்படலாம் என்றுகூறப்படுகின்றது.(இ-5)

## பிரதான வீதியில் மீன் விற்பனை

பேலியகொடை மீன் சந்தை வர்த்தகர்கள் நேற்று முன்தினம் பிரதான வீதியின் ஒரு மருங்கில் மீன் விற்பனை செய்து வித்தியாசமான முயற்சியொன்றை மேற்கொண்டிருந்தனர்.

நாட்டில் நிலவும் அசாதாரண வானிலை காரணமாக ஏற்பட்டுள்ள வெள்ளப்பெருக்கின் காரணமாக பேலியகொடை மீன் சந்தை முற்றாக மூழ்கடிக்கப்பட்டுள்ளது.

எனினும் இது குறித்த தகவல்கள் அறியாத நிலையில் நேற்று முன்தினம் காலையும் நாட்டின் பல பாகங்களில் இருந்தும் மீன் லொறிகள் பேலியகொடை மீன் சந்தைக்கு வருகை தந்திருந்தன.

இதனையடுத்து பேலியகொடையிலிருந்து கொழும்பு வரும் பிரதான வீதியின் ஒரு மருங்கில் தமது மீன்களை வைத்து நேற்று முன்தினம் மீன் வர்த்தகர்கள் வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

இதன் காரணமாக போக்குவரத்துக்கு சிறிது இடைஞ்சல் ஏற்பட்டிருந்த போதும் மீன் வியாபாரிகளின் பாதிப்பை உணர்ந்து அனைத்துத் தரப்பினரும் அவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

# மத்திய வங்கி நட்டத்தை ஈடுசெய்யவே வற்வரி அதிகரிப்பு-பந்துல குற்றச்சாட்டு



பிணை முறிகளினால் ஏற்பட்ட நட்டத்தை ஈடு செய்யவே அரசாங்கம் வற் வரியை அதிகரித்துள்ளதாக முன்னாள் கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன குற்றஞ்சாட்டியுள்ளார்.

புஞ்சி பொரளை வஜிரராம பௌத்த மத்திய நிலையத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

2015 ஆம் ஆண்டு மத்திய வங்கியில் இடம்பெற்ற பிணை முறிப் பத்திர மோசடிகளினால் நாட்டில் ஏற்பட்ட நட்டத்தை ஈடு செய்யவும் அரசாங்கத்தின் மோசமான பொருளாதார முகாமைத்துவத்தை மறைத்துக் கொள்ளவும் வற்வரி அறவீடு செய்யப்படுகின்றது.

வற்வரி அதிகரிப்பின் ஊடாக 100 பில்லியன் ரூபா வருமானத்தை ஈட்ட அரசாங்கம் எதிர்பார்த்துள்ளது. எனினும் மத்திய வங்கி பிணை முறி ஊழல் மோசடிகளினால் நாட்டுக்கு 145 பில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது.

எனவே அரசாங்கத்தின் வற்வரி அதிகரிப்பு இந்த மத்திய வங்கி மோசடியினால் ஏற்பட்ட நட்டத்தைக் கூட ஈடு செய்ய போதுமானதல்ல.

கடந்த மார்ச் மாதம் மீளவும் அரசாங்கம் பிணை முறிகளை வெளியிட்டு 14.23 வீத வட்டிக்கு கடன் பெற்றுக்கொண்டுள்ளது.

மகிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் 6 வீதமாக காணப்பட்ட வட்டியே இவ்வாறு அதிகரித்துள்ளது.

மத்திய வங்கி நிதி மோசடிகள் குறித்து மீளவும் விசாரணை நடத்தப்பட வேண்டுமென பந்துல குணவர்த்தன கோரியுள்ளார். (இ-5)

## (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 724

கீர்த்து




மாணன்

ஒருவரிடம் தெருவில் சென்ற பிச்சைக்காரன் சாப்பிட இரண்டு ரூபாய் கேட்டான். அவர் அவனை விசாரித்தார்.

குடிப்பாயா? இல்லை சார்

ரேசுக்கு போவாயா? இல்லை சார்

சூதாட்டம்? கிடையாது சார்

உனக்கு இருபது ரூபாய் தருகிறேன். என் வீட்டுக்கு வா. என் மனைவியிடம் உன்னைக் காட்ட வேண்டும். எந்த கெட்ட பழக்கமும் இல்லாத ஒரு மனிதனின் நிலைமையை பார்த்தாயா என்று காட்ட வேண்டும்.



ஜீவி



செரோன்

மனைவி: எங்க போறீங்க?

கணவன்:-தற்கொலை பண்ணிக்கறதுக்கு

மனைவி: இந்தாங்க பை எடுத்துட்டு போங்க திடீர்ன்னு முடிவு ஏதும் மாத்திக்கிட்டீங்கன்னா வர்றப்ப வெங்காயமும் தக்காளியும் வாங்கிக்கிட்டு வந்துடுங்க

அச்சு



நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# குருதி தோய்ந்த மண்ணில்

















முள்ளிவாய்க்கால் பேரவலத்தின் 7 நிகழ்வு நேற்றைய தினம் காலை 9 மைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தலை ஆரம்பமானது. ஐந்து நிமிட மௌன அ 9.30 மணியளவில் முதலமைச்சரால் பட்டதனை தொடர்ந்து போரில் கொல்லப் மதகுருமார், அருட்சகோதரிகள், அமை பினர்கள், மாகாணசபை உறுப்பினர்க பிரதிநிதிகள் உள்ளிட்ட கட்சி மற்றும் பொதுமக்கள் உட்பட ஆயிரக்கணக்கானே பூர்வமாக உறவுகளுக்கு அஞ்சலி செலு

(படங்கள்:- உ.சாளின், பொ.சோபிக







# சில் குமுறி அழுத உறவுகள்


























மத்தின் 7 ஆம் ஆண்டு நினைவேந்தல் காலை 9 மணிக்கு வடமாகாண முதல ரன் தலைமையில் முள்ளிவாய்க்காலில் மௌன அஞ்சலியைத் தொடர்ந்து காலை மச்சரால் மலர் தூவி ஈகச்சுடர் ஏற்றப் ் கொல்லப்பட்ட மக்களின் உறவினர்கள், ள், அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப் றுப்பினர்கள், தமிழ் மக்கள் பேரவைப் ி மற்றும் சிவில் சமூக உறுப்பினர்கள், ணக்கானோர் கலந்து கொண்டு உணர்வு ்சலி செலுத்தினர்.

*பா.சோபிகா, ச.தவசீலன், த.விஜயரூபன்)*


















# இரண்டு புலிக்கு எங்கே போவேன்?

ஓர் ஊரில் பெண் ஒருத்தி இருந்தாள். அவளுக்கு இரண்டு குழந்தைகள் இருந்தன. அவள் கணவன் வணிகத்திற்காக வெளியூர் சென்றிருந்தான்.

பல நாட்களுக்குப் பிறகு அவனிடமிருந்து கடிதம் வந்தது. நீயும் குழந்தைகளும் இங்கு வந்து சேருங்கள். நாம் வளமாக வாழலாம், என்று அதில் எழுதியிருந்தது.

தன் குழந்தைகளுடன் மாட்டு வண்டியில் ஏறினாள் அவள். வண்டியை ஓட்டிக் கொண்டு புறப்பட்டாள்.

அடர்ந்த காட்டு வழியாக வண்டி சென்று கொண்டிருந்தது. ஆபத்து வரப் போவதை மாடுகள் உணர்ந்தன. கயிற்றை அறுத்துக் கொண்டு ஓட்டம் பிடித்தன.

ஐயோ! என்ன செய்வேன்? நடுக் காட்டில் குழந்தைகளுடன் சிக்கிக் கொணடேனே! இங்கே புலி பலரை அடித்துக் கொன்றதாகக் கேள்விப் பட்டுள்ளேனே, என்று நடுங்கினாள் அவள்.

அருகிலிருந்த மரத்தின் கிளையில் குழந்தைகளுடன் அமர்ந்தாள் அவள்.

சிறிது தூரத்தல் பயங்கரமான புலி ஒன்று வந்து கொண்டிருந்தது. இதைப் பார்த்த அவள் அதனிடமிருந்து எப்படித் தப்பிப்பது என்று சிந்தித்தாள்.

நல்ல வழி ஒன்று அவளுக்குத் தோன்றியது.

இரண்டு குழந்தைகளின் தொடையிலும் அழுத்திக்கிள்ளினாள். இரு வருடம்



காடே அலறும் படி அழத் தொடங்கினார்கள்.

குழந்தைகளே! அழாதீர்கள், நான் என்ன செய்வேன். இப்படி நீங்கள் அடம் பிடிப்பது சிறிதும் நல்லது அல்ல. நேற்றுத் தான் நீங்கள் உண்பதற்கு ஆளுக்கொரு புலி பிடித்துக் கொடுத்தேன். இன்றும் அதே போல ஆளுக்கொரு புலி வேண்டும் என்கிறீர்களே. இந்தக் காட்டில் புலியை நான் எங்கே தேடுவேன்? எப்படியும் இன்று மாலைக்குள் நீங்கள் சாப்பிட ஆளுக்கொரு புலி தருகிறேன். அதுவரை பொறுமையாக இருங்கள், என்று உரத்த குரலில் சொன்னாள்.

இதைக் கேட்ட புலி நடுங்கியது, நல்ல வேளை! அருகில் செல்லாமல் இருந்தேன். இந்நேரம் நம்மைப் பிடித்துக் கொன்றிருப்பாள், இனி இங்கே இருப்பது நல்லதல்ல, எங்காவது ஓடிவிடுவோம், என்று நினைத்தது அது.

ஒரே பாய்ச்சலாக அங்கிருந்து ஓட்டம் பிடித்தது அது.

தன் திட்டம் வெற்றி பெற்றதை எண்ணி மகிழ்ந்தாள் அவள்.

பயந்து ஓடும் புலியை வழியில் சந்தித்தது நரி. காட்டுக்கு அரசே! ஏன் இப்படி அஞ்சி ஓடுகிறீர்கள்? உங்களை விட வலிமை வாய்ந்தது சிங்கம் தான். நம் காட்டில் சிங்கம் ஏதும் இல்லை. என்ன நடந்தது? சொல்லுங்கள், என்று கேட்டது அது.

நரியே! நம் காட்டுக்கு ஒரு அரக்கி வந்துள்ளாள். இரண்டு குழந்தைகள் அவளிடம் உள்ளன. அந்தக் குழந்தைகள் உண்ண நாள்தோறும் ஆளுக்கொரு புலியைத் தருகிறாளாம். இப்படி அவளே சொல்வதை என் காதால் கேட்டேன். அதனால் தான் உயிருக்குப் பயந்து ஓட்டம் பிடித்தேன், என்றது புலி.

இதைக் கேட்ட நரியால் சிரிப்பை அடக்க முடியவில்லை. புலியாரே! கேவலம் ஒரு பெண்ணிற்குப் பயந்தா ஓடுகிறீர்?

(தொடரும்)




- 1535 - பிரெஞ்சு நடுகாண் பயணி ஜாக் கார்ட்டியே வட அமெரிக்கா நோக்கிய தனது இரண்டாவது பயணத்தை 110 பேருடன் மூன்று கப்பல்களில் ஆரம்பித்தார்.
- 1536 - இங்கிலாந்தின் எட்டாம் ஹென்றியின் இரண்டாம் மனைவி "ஆன் பொலெயின்" வேறு ஆண்களுடன் தொடர்பு வைத்திருந்ததாக குற்றம் சாட்டப்பட்டு தலை துண்டிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டாள்.
- 1604 - கனடாவின் மொன்ட்றியால் நகரம் அமைக்கப்பட்டது.
- 1649 - இங்கிலாந்தை பொதுநலவாய நாடாக அங்கீகரிக்கும் சட்டமூலம் நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்பட்டது. அடுத்த பதினொரு ஆண்டுகளுக்கு இங்கிலாந்து குடியரசாக இருந்தது.
- 1848 - மெக்சிக்கோ-அமெரிக்கப் போர்: க்லிபோர்னியா, நெவாடா, யூட்டா மற்றும் பல பகுதிகளை ஐக்கிய அமெரிக்காவுக்கு கூ15 மில்லியன்களுக்க்குக் கொடுக்க மெக்சிக்கோ முன்வந்ததை அடுத்து போர் முடிவுக்கு வந்தது.
- 1897 - ஐரிய எழுத்தாளர் ஆஸ்கார் வைல்டு இங்கிலாந்தின் ரெடிங் சிறையில் இருந்து விடுதலை பெற்றார்.
- 1961 - சோவியத்தின் வெனேரா 1 வீனஸ் கோளைத் தாண்டி, வேறொரு கோளைத் தாண்டிய முதலாவது விண்ணூர்தி ஆனது.
- 1971 - சோவியத் ஒன்றியம் மார்ஸ் 2 விண்கலத்தை ஏவியது.
- 1978 - விடுதலைப் புலிகள் மீதான தடை ஜே. ஆர். ஜெயவர்த்தனா அரசினால் பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட்டது.
- 1991 - அனைத்து மக்கள் வாக்கெடுப்பில் குரொவேசியர்கள் தமது விடுதலைக்காக வாக்களித்தனர்.

**பிறப்புக்கள**

- 1762 - யோஃகான் ஃபிக்டே, ஜெர்மனிய மெய்யியல் அறிஞர். (இ. 1814)
- 1882 - மொஹம்மது மொஸாடெக், ஈரானியத் தேசிய இயக்கத்தின் தலைவர்.
- 1890 - ஹோ ஷி மின், வியட்நாமியத் தலைவர். (இ. 1969)
- 1925 - பொல் பொட், கம்போடிய சர்வாதிகாரி. (இ. 1998)
- 1925 - மால்கம் எக்ஸ், அமெரிக்க மனித உரிமைச்செயற்பாட்டாளர். (இ. 1965)
- 1976 - கெவின் கார்னெட், அமெரிக்கக் கூடைப்பந்து ஆட்டக்காரர்.

**இறப்புகள்**

- 1904 - ஜாம்செட்ஜி டாடா, இந்தியாவின் நவீன தொழில்துறையின் முன்னோடி. (பி. 1839)
- 1985 - பி. சுந்தரய்யா, இந்திய விடுதலைப் போராட்ட வீரர், மார்க்சியக் கட்சித் தலைவர். (பி. 1913)
- 1996 - ஜானகி இராமச்சந்திரன் திரைப்பட நடிகை, தமிழக அரசியல்வாதி. (இ.1924)
- 2007 - ஜோதி, தமிழ்த் திரைப்பட நடிகை.

**சிறப்பு நாள்**

## ஜாம்செட்ஜி டாடா
### இந்தியாவின்நவீன தொழில் துறையின் முன்னோடி



ஜாம்செட்ஜி நுசர்வாஞ்சி டாட்டா இந்தியாவின் நவீன தொழில்துறையின் முன்னோடிகளுள் ஒருவராவார். இவர் இந்திய தொழில்துறையின் தந்தை என்று அறியபடுகிறார். இவர் பாரிஸ் நகரத்திலேயே நீண்ட காலம் வசித்தார். இவர் இந்தியாவின் குஜராத் மாநிலத்திலுள்ள நவசாரி என்னுமிடத்தில் பிறந்தார். எஃகு உற்பத்திக்குப் பெயர்பெற்ற ஜாம்ஷெட்பூர் நகரத்திற்கு இவருடைய நினைவாகவே பெயர்சூட்டப்பட்டது. ஜம்சேத்ஜீ நசர்வான்ஜி டாட்டா 1839 ஆம் வருடம் மார்ச் மாதம் 3 ஆம் திகதி தெற்கு குஜராதில் உள்ள நவசாரி என்ற சிறு நகரத்தில் வாழ்ந்த நசர்வான்ஜி டாடா மற்றும் அவர் மனைவி ஜீவன்பாய் டாடாவிற்கு மகனாகப் பிறந்தார். பார்சி ஜொரோஸ்டிரியன் புரோகிதர்கள் குடும்பத்தில் டாடாதான் முதல் வணிகராகத் திகழ்ந்தார். குடும்பத்தின் குலத்தொழிலான புரோகிதத்தை நசர்வான்ஜி தேர்ந்தெடுத்திருந்தால் வழக்கமான ஒன்றாக இருந்திருக்கும். ஆனால் துணிவுமிக்க இளைஞனான டாடா பாரம்பரியத்தைத் தகர்த்து தன் குடும்பத்திலேயே வணிகத்தில் நுழைந்த முதல் மனிதனாகத் திகழ்ந்தார். அவர் தன் வியாபாரத்தை அன்றைய பம்பாயாக இருந்த இன்றைய மும்பையில் ஆரம்பித்தார். தனது 14 ஆவது வயதில் தன் தந்தையுடன் மும்பைக்கு வந்த ஜம்சேத்ஜீ டாடா எல்பின்ஸ்டோன் கல்லூரியில் இன்றைய இளங்கலைப் பட்டத்திற்கு இணையான “க்ரீன் ஸ்காலர” -ஆக படிப்பை முடித்தார். அவர் மாணவனாக இருக்கும்போதே ஹிராபாய் தாபு என்ற பெண்ணை மணந்தார். 1858 இல் கல்லூரியிலிருந்து பட்டம் பெற்ற அவர் தனது தந்தை வேலை செய்த வணிக நிறுவனத்தில் தன்னை இணைத்துக்கொண்டார். அச்சமயம் 1857 இன் இந்திய புரட்சிக்காரர்களாக கருதப்பட்டு பிரிட்டிஷ் அரசாங்கத்தால் அடக்கப்பட்ட கொந்தளிப்பான காலகட்டமாக இருந்தது. 1900-ஆம் ஆண்டு வியாபார விஷயமாக ஜெர்மனிக்குச் சென்றபோது, டாடா நோய்வாய்ப்பட்டார். ஆபத்தான நிலையிலிருந்த அவர் நௌஹீமில 19 மே 1904 இல் காலமானார். இங்கிலாந்தின் வோகிங், புரூக்வுட் மயானத்திலுள்ள, பார்ஸியினருக்கான இடுகாட்டில் புதைக்கப்பட்டார்.

# மோசடிகள் தொடர்பான விசாரணை அமைச்சரவைப் பத்திரம் நிராகரிப்பு

(கொழும்பு)

**முன்னைய ஆட்சிக்காலத்தில் முக்கிய பிரமுகர்களால் மேற்கொள்ளப்பட்ட மோசடிகள், முறைகேடுகள் குறித்து நடத்தப்படும் விசாரணைகளின் முன்னேற்றம் குறித்து விளக்கமளிக்குமாறு அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்ட பத்திரம் நிராகரிக்கப்பட்டுள்ளது.**

நேற்று முன்தினம் நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில், அமைச்சர் ராஜித சேனாரத்ன உள்ளிட்ட மூன்று அமைச்சர்கள் இணைந்து இந்த அமைச்சரவைப் பத்திரத்தைச் சமர்ப்பித்திருந்தனர்.

எனினும், இந்த விவகாரம் குறித்துக் கலந்துரையாடுவதற்கு அமைச்சரவை பொருத்தமான இடம் அல்ல என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அதனை நிராகரித்து விட்டதாக கூறப்படுகிறது.

எனினும், இந்த விவகாரம் தொடர்பாக,வேறொரு இடத்தில் கலந்துரையாடுவதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இணக்கம் தெரிவித்துள்ளதாக, அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

அதேவேளை, இது சம்பந்தமான அமைச்சரவைப் பத்திரம் நிராகரிக்கப்படவில்லை என்று அமைச்சர் சம்பிக்க ரணவக்க மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# சுதந்திரக்கட்சி தலைமையகத்தில் ரணிலின் படம் வைக்க முடியாது

## டிலான் பெரேரா தெரிவிப்பு



(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் கட்சியின் உறுப்பினர்களது ப்டங்களே காட்சிப்படுத்தப்படும் என இராஜாங்க அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

அண்மையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் புகைப்படம் ஒன்றை சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் வைக்க வேண்டுமென முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா கூறியதற்கு பதிலளிக்கும் வகையில் அமைச்சர் டிலான் இதனை சிங்கள ஊடகமொன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மேர்வின் சில்வாவிற்கு ஒவ்வொரு நபர்களின் புகைப்படங்களை காட்சிப்படுத்திக் கொள்ள வேண்டுமாயின் அவர் தனது வீட்டில் அவற்றை காட்சிப்படுத்திக்கொள்ள முடியும்.அதில் எவ்வித பிழையும் கிடையாது.

எனினும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு சொந்தமில்லா எவரின் புகைப்படமும் கட்சியின் தலைமையகத்தில் காட்சிப்படுத்தப்படாது என டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் வெற்றிக்கு ஐக்கிய தேசியக் கட்சி மிகச் சிறந்த பங்களிப்பு வழங்கியது எனவும் இதனால் ரணில் விக்கிரமசிங்கவின் புகைப்படம் ஒன்றை சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் காட்சிப்படுத்த வேண்டுமெனவும் மேர்வின் சில்வா அண்மையில் கோரியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# களனி கங்கையின் வெள்ளப்பெருக்கில் மூழ்கிப் போன இராணுவ முகாம்

(கொழும்பு)

நாட்டில் நிலவும் அசாதாரண வானிலை காரணமாக களனி ஆற்றில் ஏற்பட்டுள்ள வெள்ளப்பெருக்கினால் இராணுவ முகாம் ஒன்று மூழ்கடிக்கப்பட்டுள்ளது.

களனியாற்றுப்படுகையில் அமைந்துள்ள களுஅக்கல பிரதேசத்தில் உள்ள இராணுவ முகாம் சுற்றிலும் வெள்ளம் சூழ்ந்து தனிமைப்படுத்தப்பட்டுள்ளது.



இராணுவ முகாமுக்குள் ஆறு அடி உயரம் வரை வெள்ள நீர் புகுந்துள்ளதாக முகாமின் கட்டளை அதிகாரி தெரிவித்துள்ளார்.

வெள்ளம் காரணமாக இராணுவ முகாமுக்கு வழங்கப்பட்ட மின்சார விநியோகமும் துண்டிக்கப்பட்டுள்ளது. அங்கிருந்த ட்ரான்ஸ்போமரை மின்சார சபை அதிகாரிகள் அகற்றி எடுத்துச் சென்றுள்ளனர்.

இதன் காரணமாக ஜெனரேட்டர் மூலமாக இராணுவ முகாமின் மின்சாரத் தேவை பூர்த்தி செய்யப்படும் அதேவேளை முகாமில் உள்ளவர்களின் போக்குவரத்து தேவைகளுக்காக படகுகள் பயன்படுத்தப்படுவதாகவும் தெரியவந்துள்ளது. (இ-5)

# இந்தியப் புடைவை வியாபாரிகள் இருவர் கைது

(கொழும்பு)

சுற்றுலா விசாவில் இலங்கைக்கு வந்து நீண்ட காலமாக புடைவை வியாபாரத்தில் ஈடுபட்டுவந்த குற்றச்சாட்டின் பேரில் இந்தியாவைச் சேர்ந்த புடைவை வியாபாரிகள் இருவரை மட்டக்களப்பு, களுவன்கேணிப் பிரதேசத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அத்துடன், இவர்களிடமிருந்து ஒன்றரை இலட்சம் ரூபாய் பெறுமதியான புடைவைகளையும் கைப்பற்றியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்,

தங்களுக்கு அறிமுகம் இல்லாதவர்கள் கிராமப்புறங்களிலுள்ள வீடுகளுக்குச் சென்று சேலை, சல்வார் உள்ளிட்ட புடைவை வியாபாரத்தில் ஈடுபடுவதாக பொது மக்களிடமிருந்து தமக்குக் தகவல் கிடைத்தது.

இதனை அடுத்து, தேடுதல் மேற்கொண்டு இந்தச் சந்தேக நபர்களைக் கைது செய்ததுடன், இவர்களிடமிருந்து 37 சேலைகள், 33 சல்வார்கள் உள்ளிட்டவற்றைக் கைப்பற்றியுள்ளதாகவும் பொலிஸார் கூறினர்.

தென்னிந்தியா, தமிழ் நாடு, மதுரை அருப்புக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்தவர்களான நாகப்பன் கந்தவேல் (வயது- 46), நீலமேகன் மணிகண்டன் (வயது- 31) ஆகியோரே கைதுசெய்யப்பட்டனர். (இ-5)

## இன்று ஒரு தகவல்

# உங்கள் பிள்ளைகள் எதிர்த்துப் பேசுகிறார்களா?

நேற்று வரை உங்கள் பிள்ளைகள் எவ்வளவு வேண்டுமானாலும் எதிர்த்துப் பேசியிருக்கட்டும். அதை ஒரு கெட்ட கனவாக எண்ணி மறந்து விடுங்கள். இன்று முதல் அவர்களை மாற்றி நம் வழிக்கு கொண்டுவர முடியும் என்பதாக மனப்பூர்வமாக நம்புங்கள். உங்கள் அணுகுமுறைகளை ஆதியோடந்தமாக மாற்றிக் கொள்ள வேண்டிய தருணம் வந்து விட்டது.

பிள்ளைகள் எதிர்த்துப் பேசும்போதெல்லாம் உங்கள் மனம் பாதிப்படைகிறது என்பதை அவர்களுக்கு உணர்த்துங்கள். இதை அவர்கள் எண்ணி வருத்தப்படும் வகையில் உணர்த்த வேண்டுமே தவிர, அவர்கள் எரிச்சல் அடையும் வகையில் உணர்த்தக் கூடாது. இந்த மனப்பாதிப்பை வெளியே காண்பித்துக் கொள்ளாமல் இருக்கும் பெற்றோர்கள் தொடர்ந்து பிள்ளைகளின் வார்த்தைத் தாக்குதலுக்கு ஆளாகிக் கொண்டே இருக்க வேண்டியதுதான்.

ஒருபந்தானது ஒரு சுவரின் மீது எவ்வளவு வேகத்தில் வீசப்படுகிறதோ அதேவேகத்தில் அது திரும்பி விடும். அதே போலத்தான் வார்த்தைகளும். உங்கள் பிள்ளைகள் மீது எந்த அளவுக்குப் பாய்கிறீர்களோ அதே அளவிற்கு அவர்களும் பாயத்தான் செய்வார்கள்.

எனவே வார்த்தைகளில் கனிவு என்னும் அரிய மருந்தைக் கலந்து கொள்ளுங்கள்.

“நீ வரக்கூடாது ,உனக்குத்தர முடியாது” “நீ செய்யக்கூடாது'' என்றெல்லாம் மொட்டையாக உத்தரவு போடாமல் நீங்கள் ஏன் அப்படி எண்ணுகிறீர்கள் என்பதற்கான காரணத்தைச் சொல்லுங்கள்.

நீங்கள் எதைச் சொன்னாலும் அவர்களது நன்மைக்குத்தான் சொல்கிறீர்கள் என்பதாக அவர்கள் உணரும் வகையில் எடுத்துச் சொல்லுங்கள்.

நாலு பேரை வைத்துக்கொண்டு சொல்லாமல் தனியே சொல்லுங்கள். மற்றவர்கள் முன் தாங்கள் அதிகாரம் செய்யப்படுவதையோ, கட்டுப்படுத்துவதையோ எந்தப் பிள்ளைகளும் விரும்புவதில்லை. அப்படிச் செய்யும்போது அவை சீறி எழுகின்றன. அல்லது உங்களுக்கு எதிரான வெறுப்பை மனத்தினுள் வளர்த்துக் கொள்கின்றன.

கௌரவப் பிரச்சினை பார்க்காமல் பிள்ளை செயலிலும் பேச்சிலும் உள்ள நியாயத்தைத் திறந்த மனத்துடன் எடை போட்டுப் பாருங்கள். காரணங்களை நடுநிலையுடன் ஆராயுங்கள்.

ஏதோ ஆண்டான்–அடிமை உறவு முறைபோல நான் சொல்வதையெல்லாம் நீ கேட்கத்தான் வேண்டும். விளக்கம் கேட்கக்கூடாது என்பதான மனநிலையெல்லாம் இந்தக் காலத்துப் பெற்றோர்களுக்கு இருக்கவே கூடாது.

காரணம்,இந்தக் காலத்துப் பிள்ளைகள் கொஞ்சம் நிமிர்ந்தவர்கள்.

பிள்ளைகளை நண்பர்களைப் போலவும் உடன் பிறந்தவர்களைப் போலவும் நடத்திப் பாருங்கள். நிச்சயம் பலன் இருக்கும்.

மேலும் உங்கள் பிள்ளைகளுக்கு நீங்கள் வேலியாக மட்டும் இராமல் வேராகவும் விழுதாகவும் இருங்கள்.

இதற்கப்புறம்

உங்களை ஏன் அவர்கள் எதிர்த்துப் பேசப் போகிறார்கள்?

**லேனா தமிழ்வாணன்**

# ஈராக்கில் ஐ.எஸ். வெறிச்செயல்; குண்டுவெடிப்பில் 54 பேர் பலி!



ஈராக்கில் நேற்று முன்தினம் ஒரே நாளில் அடுத்தடுத்து 3 இடங்களில் ஐ.எஸ். தீவிரவாதிகள் நடத்திய குண்டுவெடிப்பு சம்பவத்தில் 54 பேர் உயிரிழந்தனர். நூற்றுக்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

பக்தாத்தின் வடகிழக்கு பகுதியில் ஷியா பிரிவு முஸ்லிம்கள் அதிகம் வசிக்கும் சாப் என்ற இடத்தில் ஐ.எஸ். தீவிரவாதிகள் நேற்று முன்தினம் குண்டுவெடிப்பு சம்பவத்தை அரங்கேற்றினர். முதலில் மக்கள் நடமாட்டம் மிகுந்த சந்தைப் பகுதியில் குண்டு வெடித்தது.

இதனால் பொதுமக்கள் அலறியடித்து அங்குமிங்கும் ஓடிய சமயத்தில், ஐ.எஸ். தீவிரவாதி ஒருவன் தனது உடலில் கட்டியிருந்த குண்டை வெடிக்கச் செய்தான். இதில் 28 பேர் சம்பவ இடத்திலேயே உடல் சிதறி உயிரிழந்தனர். 68இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

இந்த தாக்குதலை தொடர்ந்து பக்தாத்தின் தெற்கு பகுதியில் உள்ள டோரா என்ற இடத்தில் ஷியா பிரிவினரை குறிவைத்து அங்குள்ள காய்கறி சந்தைக்குள் கார் வெடிகுண்டை ஐ.எஸ். தீவிரவாதிகள் வெடிக்கச் செய்தனர். இதில் 8 பேர் உயிரிழந்தனர். 22 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

பக்தாத்தின் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள சதர் நகரத்தின் மீதும் ஐ.எஸ் தீவிரவாதிகள் நேற்று முன்தினம் தாக்குதல் நடத்தினர்.

அங்குள்ள சந்தைப் பகுதியில் குண்டுகள் வெடித்ததில், 18 பேர் உயிரிழந்தனர்.

ஆபத்தான நிலையில் 35 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

ஒரே நாளில் மூன்று இடங்களில் அடுத்தடுத்து நிகழ்ந்த குண்டுவெடிப்பு சம்பவத்தால் ஈராக் முழுவதும் பதற்றம் ஏற்பட்டுள்ளது. (இ-5)

## சதுப்பு நிலங்களில் மூழ்கி 9 சிறுவர்கள் உயிரிழப்பு



சவுதி அரேபியாவின் ஜாஸான் பிரதேசத்தில் அண்மையில் பெய்த மழையை அடுத்து, தேங்கி நிற்கும் தண்ணீரினால் உருவான சதுப்பு நிலங்களில் மூழ்கி 9 சிறுவர்கள் பலியாகியுள்ளதாக சிவில் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பொதுமக்களின் உதவியுடன் சிவில் பாதுகாப்பு படையினர் குறித்த சிறுவர்களை மீட்டு வைத்தியசாலைக்கு கொண்டுசெல்ல முன்னரே அச் சிறுவர்கள் உயிரிழந்து விட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, நீர்த்தேக்கங்கள், பள்ளத்தாக்குகளுக்கு அருகில் செல்வதை தவிர்ப்பதோடு, தமது குழந்தைகளை கண்காணித்துக் கொள்ளுமாறும், அவதானத்துடன் இருக்குமாறும் பொதுமக்களை சவுதி அரசாங்கம் கேட்டுக்கொண்டுள்ளது. (இ-5)

# சாட் பிராந்தியத்தில் உணவுக்காக காத்திருக்கும் 9 மில்லியன் மக்கள்

( வோஷிங்டன் )

**ஆபிரிக்கா கண்டத்தின் சாட் ஏரியைச் சுற்றியுள்ள பிராந்தியத்தில் வாழும் 9 மில்லியனுக்கும் அதிகமான மக்கள், அவசரமான உணவு உதவிகளை எதிர்பார்த்திருப்பதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.**



ஏற்கனவே பஞ்சத்தின் கோரப்பிடியில் சிக்கத் தவிக்கின்ற இப்பகுதியில், போகோஹராம் தீவிரவாதிகள் அமைதியின்மை ஏற்பட வழிகோலுவதாகவும் ஐ.நா. சபை குற்றம் சுமத்தியுள்ளது.

ஐ.நா. சபையின் மனிதாபிமான விவகாரங்களுக்கான ஒருங்கிணைப்பு அலுவலகம் விடுத்துள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில், இப்பிராந்தியத்தில் வசிக்கும் மொத்த குடித்தொகையில் ஏறத்தாழ அரைப் பங்கினர், பாதுகாப்பான உணவுகள் கிடைக்கப்பெறாமை மற்றும் போக்கின்மையால் பாதிக்கப்படும் நிலை மோசமடைந்து வருவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், ஆபிரிக்காவில் தற்போது ஏற்பட்டுள்ள பெருந்தொகை மக்களின் இடப்பெயர்வு தொடர்பான நெருக்கடி நிலைக்கு, அங்கு ஆதிக்கம் செலுத்தி வரும் போகோஹராம் தீவிரவாதிகளே காரணம் எனவும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இவேளை சாட் பிராந்தியத்தில் இடம்பெறும் வன்முறைகளினால் 20 ஆயிரத்திற்கும் அதிகமானோர் கொல்லப்பட்டுள்ளதுடன், 2.4 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் இடம்பெயர்ந்துள்ளதாகவும் ஐ.நா. சபை அண்மையில் வெளியிட்ட அறிக்கையொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நிலையில் கடந்த வருடம் நவம்பர் மாதத்தில் சாட் பிராந்தியத்தில் அவசரகால நிலை பிறப்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-5)




# சாதனை விலைக்கு இளஞ்சிவப்பு வைரம்



சுவிட்சர்லாந்தின் ஜெனீவா மாகாணத்தில் கடும் போட்டிகளுக்கிடையே சாதனை விலைக்கு விற்கப்பட்டுள்ளது பிங்க் வைரம்.

இதுவரை ஏலம் விடப்பட்ட இளஞ்சிவப்பு வைரங்களில் இதுவே சாதனை விலைக்கு விற்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

ஏலம் எடுப்பவர்களில் இருவர் இந்த வைரத்தை தமதாக்கிக் கொள்ள இறுதிவரை போராடியதாகவும் கடைசியில் 42.8 மில்லியன் டொலர்களுக்கு தொலைபேசி வாயிலாக ஆசியாவை சேர்ந்த ஒரு வணிகர் அந்த வைரத்தை கைப்பற்றியதாகவும் கூறப்படுகிறது.

இந்த வைரத்தை ஏலம் எடுக்கும் பொருட்டு அந்த வளாகத்தில் 150 பேர் ஆர்வமுடன் குழுமியிருந்தனர்.

ஆனால் தொலைபேசியிலேயே ஏலத்தை முடித்து முகம் தெரியாத நபர் வைரத்தை கைப்பற்றியுள்ளார்.

தென்னாபிரிக்க சுரங்கத்தில் இந்த வைரம் கண்டெடுக்கப்பட்டு 5 ஆண்டுகளுக்கும் குறைவான கால அளவே ஆனதாகவும், அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் அமைந்துள்ள பிரபல நிறுவனத்திற்கு இந்த வைரம் சொந்தமாக இருந்தது எனவும் Unique Pink என அறியப்படும் இந்த வைரத்திற்கு அமெரிக்காவின் ஜெம்மாலஜிக்கல் இன்ஸ்டிடியூட் 'Fancy Vivid pink' என பெயரிட்டுள்ளது எனவும் கூறப்படுகிறது. (இ-5)

# பங்களாதேசத்தில் இடி-மின்னல் தாக்கியதில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 81 ஆக உயர்வு

(டாக்கா)

பங்காளதேசத்தின் பல்வேறு பகுதிகளில் கடந்த வாரம், மே 12 மற்றும் 13 ஆகிய திகதிகளில் இடி, மின்னலுடன் கனமழை பெய்தது. டாக்கா உட்பட 26 மாவட்டங்களில் இடி மின்னலின் பாதிப்பு இருந்தது.

இடி, மின்னல் தாக்கியதில் ஏராளமானோர் உயிரிழந்தனர். அதில், விளையாட்டு மைதானத்தில் விளையாடிய சிறுவர்கள் மற்றும் வேலையில் இருந்த பெண்களும் உயிரிழந்துள்ளனர்.

இதில் பெரும்பாலானோர் பங்களாதேசத்தின் வடக்கு பகுதியில் உள்ள கிராமப் புறங்கள், மத்திய பகுதிகளை சேர்ந்தவர்கள்.

முதலில் இடி மின்னல் தாக்குதலுக்கு பலியானோர் எண்ணிக்கை 25 இக்குள் இருந்தது. பலர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தனர். அவர்களில் சிலர் சிகிச்சை பலனின்றி இறந்ததையடுத்து பலி எண்ணிக்கை உயர்ந்து வந்தது.

இந்நிலையில், இரண்டு நாட்கள் இடி மின்னல் ஏற்படுத்திய பாதிப்பில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 81 ஆக உயர்ந்துள்ளதாக பங்களாதேச அரசு நேற்று தெரிவித்துள்ளது.

இது குறித்து அந்நாட்டின் பேரிடர் மேலாண்மை அமைச்சர் மொபஸல் ஹொசைன் சௌத்துரி மாயா செய்தியாளர்களிடம் கூறுகையில், "இரண்டு நாட்களில் இடி மின்னல் தாக்கி 81 பேர் உயிரிழந்துள்ளனர். இந்த அளவிற்கு உயிரிழப்பு ஏற்படுவது பங்களாதேசத்தில் மட்டுமல்லாமல் உலக அளவிலே அரிதானது. பருவநிலை மாறுபாடு காரணமாக கடந்த சில வருடங்களாக இடி, மின்னலால் ஏற்படும் பாதிப்பு அதிகரித்து மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது" என்றார்.

மார்ச் முதல் மே மாதங்களில் பங்களாதேசம் பருவகால மேற்கு நோக்கிய புயலில் சிக்கிக் கொள்கிறது. அப்போது இடி, மின்னல்கள் ஏற்படுவது தொடர்கதையாகி வருகிறது. பங்களாதேசத்தில் ஒவ்வொரு ஆண்டும் மின்னல் தாக்குதலுக்கு ஏராளமானோர் பலியாகி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## சட்டவிரோத மதுபானத்தை அருந்திய 12 பேர் மரணம்

இந்தோனேசியாவில் சட்டவிரோத மதுபானத்தை அருந்திய 12 பேர் பலியாகினர். இந்தோனேசிய பொலிஸ் பேச்சாளர் இதனைத் தெரிவித்துள்ளார்.

சட்டவிரோத மதுபானத்தை அருந்திய மேலும் சிலர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். கைதானவரிடமிருந்து 81 சட்டவிரோத மதுபானப் போத்தல்களும் கைப்பற்றப்பட்டுள்ளன. (இ-5)

# வைகாசி மாத இராசி பலன்கள்

## 14.05.2016~14.06.2016

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்



பழகுவதில் பாசத்தை அதிகம் காட்டும் மிதுன ராசி நேயர்களே!

துர்முகி வருட வைகாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் ராசிநாதன் லாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கின்றார். அவரோடு விரயாதிபதி சுக்ரனும் இணைந்திருபபதால் வரவும், செலவும் சமமாகும். இருநதாலும் ராசி நாதன் புதன் மாதத்தின் மையப் பகுதியில் ரிஷபத்தில் சஞ்சரிக்கப் போகின்றார்.

ராசிநாதனாகவும், 4 ஆம் இடத்திற்கு அதிபதியாகவும் விளங்கும் புதன், 12 இல் சஞ்சரிக்கும் பொழுது மறைந்த புதனால் நிறைந்த தனலாபம் கிடைக்க வேண்டும். எனவே, சுபகாரியங்களை நடத்தி வைக்கும் மாதமாக இம்மாதத்தைக் கருதலாம். காது குதது விழா முதல் கல்யாண வாய்ப்புகள் வரை மட்டுமல்லாமல், பெற்றோர்களின் மணி விழா, முத்து விழா போன்ற முத்தான விழாக் களையும் நடத்திப் பார்க்கும் நேரம் இது.

வேற்று மனிதர்களின் ஒத்துழைப்போடு கூட்டு முயற்சியில் வெற்றி காண்பீர்கள். விரயத்திற்கேற்ற வரவு வந்து கொண்டேயிருக்கும். பெற்றோர் வழியில் பிரியம் கொஞ்சம் குறைந்தாலும், உற்றார், உறவினர்கள் உங்கள் குறையைத் தீர்க்க முன்வருவர். பூர்வீகச் சொத்துக்களில் ஏற்பட்ட பஞ்சாயத்துக்கள் நல்ல முடிவிற்கு வரும்.

6 இற்கு அதிபதி செவ்வாயும், 8இற்கு அதிபதி சனியும் இணைந்து சஞ்சரிப்பதால், விபரீத ராஜயோக அடிப்படையில் சில நல்ல மாற்றங்கள் வந்து சேரப்போகின்றது. திட்டமிடாது செய்யும் காரியங்களில் கூட உங்களுக்கு வெற்றி கிடைக்கும். திடீர் திடீரென வாய்ப்புகள் வந்து அலைமோதும். புதிய முயற்சிகளில் வெற்றி காணும் விதத்தில், கிரக நிலைகள் சாதகமாக சஞ்சரிக்கின்றன.

குருவின் பார்வை 7,9,11 ஆகிய இடங்களில் பதிவதால், அதன் வக்ர நிவர்த்திக்குப் பிறகு கல்யாணக் கனவுகள் நனவாகும். தந்தை வழி உறவில் ஏற்பட்ட விரிசல்கள் அகலும். வெளிநாட்டு யோகமும், வீடுமாற்ற சிந்தனைகளும் கைகூடும். சனி, வக்ர இயக்கததில் இருப்பதால் ஆரோக்கியத் தொல்லைகளை ஒரு சிலர் சந்திக்க நேரிடும். சனிபகவான் வழிபாடும், விசாகத்தன்று முருகப் பெருமான்வழிபாடும்சந்தோஷத்தை வழங்கும்.

**ரிஷப சுக்ரனின் சஞ்சாரம்!**

உங்கள் ராசிக்கு 5,12 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சுக்ரன் மே 20ஆம் திகதி விரய ஸ்தானத்தில் சஞ்சரிக்கப்போகின்றார். எனவே, பிள்ளைகளால் விரயங்கள் ஏற்படலாம். அவர்களின் எதிர்கால நலன் கருதி கல்விக்காகவோ, கடல் தாண்டும் முயற்சிக்காகவோ ஏதேனும் ஏற்பாடு செய்திருந்தால், அந்த ஏற்பாடுகள் வெற்றிகரமாக நடைபெறும்.

**ரிஷப புதனின் சஞ்சாரம்!**

ஜூன் 3ஆம் திகதி ரிஷப ராசிக்கு புதன் செல்கின்றார். அங்குள்ள சகோதர ஸ்தானாதிபதி சூரியனுடன் புதன் இணைவதால்,




சகோதரர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். விலகிச் சென்ற உடன்பிறப்புகள் விரும்பி வந்து இணைவர். செல்வாக்கு மேலோங்கும். அரசியல் மற்றும் பொதுநலத்தில் இருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகளும், பதவிகளும் கிடைக்கலாம். அதிகார வர்க்கத்தினரின் ஆதரவு கூடுதலாக கிடைக்கும் நேரமிது.

## புது முயற்சிகளில் வெற்றி கிடைக்கும் நேரம்!

**மிதுன சுக்ரனின் சஞ்சாரம்!**

ஜூன் 13ஆம் திகதி மிதுன ராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப் போகின்றார். விரயாதிபதி விரயஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது வீடு, இடம் மற்றும் விலை உயர்ந்த பொருட்களை விற்க நேரிடலாம். அரசியல்வாதிகளால் அனுகூலம் கிடைக்கும். வாழ்க்கைத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வீர்கள். பூர்வீக சொத்துக்களில் இருந்த வில்லங்கங்கள் அகலும். ஆபரணங்கள வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள.

இம்மாதம் ராகு-கேதுக்களின் வழிபாடு நன்மையை வழங்கும்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாதம் எடுதத காரியங்களை எளிதில் முடித்து வெற்றி காண்பீர்கள். இல்லத்தில் சுபகாரியப் பேச்சுக்கள் நல்ல முடிவிற்கு வரும். பழைய பணியாளர்களை மாற்றி, புதியவரகளை சேர்த்துக் கொள்வீர்கள். வாகனம் வாங்கும் முயற்சியில் வெற்றி கிட்டும். கணவன்-மனைவிக்குள் பாசமும், நேசமும் அதிகரிக்கும். குழந்தைகளால் உதிரி வருமானம் உண்டு. பொதுநலத்தில் இருப்பவர்களுக்கு புகழ்கூடும். பொறுப்புகள் வந்து சேரும். செவ்வாய்க்கிழமை தோறும் முருகப்பெருமானை வழிபட்டு வந்தால் புது முயற்சிகளில் வெற்றி கிடைக்கும் நேரம்!



நண்பர்களின் நம்பிக்கைக்கு பாத்திரமாக விளங்கும் கடக ராசி நேயர்களே!

துர்முகி வருடம் வைகாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கின்ற பொழுது, தனாதிபதி லாப ஸ்தானத்தில் இருப்பது யோகம்தான். வருமானம் போதுமானதாக இருக்கும். வளர்ச்சி கூடும். சென்ற மாதத்தில் நடைபெறாத சில காரியங்கள் துரிதமாக நடைபெறத் தொடங்கும். அரசியலில் அனுகூலம் உண்டு. அடுத்தவர் நலன்கருதி எடுத்த முயற்சிகளில் ஆதாயம் அதிகமாகவே கிடைக்கும். கொடுத்த வாக்குறுதிகளைக் காப்பாற்றி மகிழ்வீர்கள்.

குரு தனஸ்தானத்தில் வீற்றிருந்து அவருடைய பார்வையை 6,8,10 ஆகிய இடங்களில் பதிக்கின்றார். எனவே உத்தியோகத்தர்கள் சிலருக்கு உத்தியோக உயர்வும், ஊதிய உயர்வும் வந்து சேரலாம். உடன் பணிபுரிபவர்களால் ஏற்பட்ட உபத்திரவங்கள் அகலும். கடன் சுமை குறைய வழிபிறக்கும். புதிய நண்பர்கள் வந்திணைந்து பொருளாதாரத்தைப் பெருக்கிக் கொடுப்பார்கள்.

அதிகாலை முதல பணிபுரிந்தும், ஆதாயம் எதிர்பார்த்தபடி கிடைக்கவில்லையே என்று ஏங்கியவர்களுக்கு, மனக்குறையை அகற்றும் மாதமாக, இந்த மாதம் அமையப் போகின்றது. மணமாலை சூடும யோகம் ஒரு சிலருக்கு வந்து சேரும்.

8 ஆம் இடத்தை குரு பார்ப்பதால் இது வரை ஏற்பட்ட இழப்புகளை ஈடுசெய்ய புதிய யுக்திகளைக் கையாள்வீர்கள். ராகு-கேதுக்களின ஆதிக்கம் மேலோங்கி இருப்பதால், சர்ப்ப சாந்திப்பரிகாரங்களை முறையாக செய்து கொள்வதன் மூலம் முன்னேற்றத்தை வரவழைத்துக் கொளளலாம். குரு சந்திரயோகத்தோடும், புத சுக்ர யோகத்தோடும் பிறக்கும் இம் மாதத்தில் இடம், பூமியால் ஏற்பட்ட பிரச்சினைகள் அகலும். புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்திடும் யோகமும் வந்து சேரும்.

## எதிர்பாராத திருப்பங்கள் ஏற்படும் நேரம்!

செவ்வாய், உங்கள் ராசிக்கு யோகம் செய்யும் கிரகமாகும். அந்தச் செவ்வாய்க்குரிய தெய்வமாக விளங்குபவர் முருகப்பெருமான். அவருக்கு வைகாசி விசாகத் திருநாள் அன்று விரதமிருந்து வழிபாடுகளை மேற்கொண்டால், வியக்கும் வண்ணம் வாழ்க்கையை அமைத்துக் கொள்ளலாம்.

**ரிஷப சுக்ரனின் சஞ்சாரம்!**

4,11 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சுக்ரன், மே 20ஆம் திகதி லாபஸ்தானத்தில் சஞ்சரிக்கப் போகின்றார். அங்கு தனாதிபதி சூரியனுடன் அவர் இணைவதால், பொருளாதாரத்தில் நிறைவு ஏற்படும். புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். அதிக உழைப்பின்றி லாபம் கிடைக்கும்.




அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர். அரசியலில் உள்ளவர்களுக்கு மேலிடத்து ஆதரவு கிடைக்கும்.

**ரிஷப புதனின் சஞ்சாரம்!**

உங்கள் ராசிக்கு 3,12 இற்கு அதிபதியானவர் புதன். அவர் ஜூன் 3 ஆம் திகதி ரிஷப ராசியில் சஞ்சரிக்கப் போகின்றார். லாப ஸ்தானத்தில் புதன், சுக்ரன், சூரியன் ஆகிய மூன்றும் சஞ்சரிக்கும் பொழுது, எதிர்பாராத திருப்பங்கள் ஏற்படும். புதிய நூதனப் பொருட்களின் சேர்க்கை உண்டு.

தங்கம், வெள்ளி வாங்குவதில் இருந்த தடை அகலும். எதிர்பாராத தனலாபம் உண்டு. பாக்கிகள் வசூலாகி பரவசப்படுத்தும். உத்தியோகத்தில் உள்ளவர்கள், விருப்ப ஓய்வு பெற்றுக் கொண்டு, தொழில தொடங்க ஆர்வம் காட்டுவார்கள்.

**மிதுன சுக்ரனின் சஞ்சாரம்!**

ஜூன் 13 ஆம் திகதி மிதுன ராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப் போகின்றார். அதே நாளில் ரிஷபத்தில் புதன் வலிமை இழக்கின்றார். எனவே, திடீர் செலவுகள் அதிகரிக்கலாம். குடும்பத்தினரின் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாமல் தத்தளிப்பீர்கள். காரியங்கள் கடைசி நேரத்தில் கைகூடும்.

இம்மாதம் விநாயகப்பெருமான் வழிபாடு வெற்றியை வழங்கும்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள**

ஏற்றமும், இறக்கமும் இணைந்து வரும் மாதம் இது. மாதத் தொடக்கத்தில் வருமானம் திருப்தி தரும். கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும். கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். சொத்துக்கள் வாங்குவதில் உங்கள் பெயர் பரிசீலிக்கப்படும். சொந்த பந்தங்களின் ஒத்துழைப்போடு நல்ல காரியமொன்று இல்லத்தில் நடைபெறும். குழந்தைகளின் படிப்பிற்காக எடுத்த முயற்சி வெற்றி பெறும். தாய்வழி ஆதரவு உண்டு. சகோதரர்களின் ஆதரவு குறைந்தாலும் மீண்டும் சரியாகிவிடும். செவ்வாய் தோறும் முருகப்பெருமானை வழிபடுவதன் மூலம் முன்னேற்றப்பாதையை நோக்கிச் செல்ல இயலும்.

(தொடரும்)

# தமிழ் சினிமா வரலாறு

161

## எம்.ஜி.ஆரின் 2 ஆவது சொந்தப்படம் அடிமைப் பெண்

**100 ஆவது படம்**

எம்.ஜி.ஆரின் 100 ஆவது படம் ஒளிவிளக்கு இது ஜெமினி தயாரிப்பு. 1936 இல் வெளிவந்த சதி லீலாவதி எம்.ஜி.ஆருக்கு முதல் படம். இந்தப் படத்தின் கதாசிரியர் எஸ்.எஸ்.வாசன். முதல் படத்தில் இணைந்த இந்த இருவரும் 100 ஆவது படத்திலும் இணைந்தனர்.

தமிழ் நாட்டில் ஒளி விளக்கு நூறு நாட்கள் ஓடியது. இலங்கையில் ஐந்து தியேட்டர்களில் 100 நாள் படம்.

1996 ஆம் ஆண்டில் அடிமைப்பெண், நம்நாடு ஆகிய இரண்டு படங்களில் எம்.ஜி.ஆர். நடித்தார்.

இரண்டுமே வெற்றிப் படங்கள் என்றாலும் அடிமைப்பெண் மெகாஹிட் படம். எம்.ஜி.ஆரின் சொந்தப்படம். நாடோடி மன்னனுக்குப்பிறகு அவர் பிரமாண்டமாகத் தயாரித்த படம்.

ஆனால் இதை எம்.ஜி. ஆர். டைரக்ட் செய்யவில்லை. கே.சங்கர் டைரக்ட் செய்தார்.

அடிமைப் பெண்ணின் கதையை எம்.ஜி.ஆர். பிக்சர்ஸ் கதை இலாகா எழுதியது. வசனத்தை சொர்ணம் எழுதினார்.

பாடல்களை வாலி, ஆலங்குடி சோமு, புலமைப் பித்தன், அவிநாசி மணி ஆகியோர் எழுத கே.வி. மகாதேவன் இசை அமைத்தார்.

ஆரம்பத்தில் இப்படத்தின் கதாநாயகியாக கே.ஆர். விஜயா ஒப்பந்தம் செய்யப்பட்டார். சில காட்சிகளும் எடுக்கப்பட்டன. பின்னர் அவருக்குப்பதிலாக ஜெயலலிதா நடித்தார்.

அசோகன், ஆர்.எஸ். மனோகர், சோ, ஓ.ஏ.கே. தேவர், பண்டரிபாய், ஜோதிலட்சுமி, பேபி ராணி ஆகியோரும் நடித்தனர்.

**கதை**

அடிமைப்பெண் கதை, நிறைய சம்பவங்களும் திருப்பங்களும் கொண்டது.



செங்கோடன் (அசோகன்) கொடியவன். வேங்கை மலைத்தலைவி மங்கம்மா (பண்டரிபாய்) மீது மோகம் கொள்கிறான். அவள் வேறொருவரை மணந்து தாயான பிறகும் அவளை அடைய முயற்சி செய்கிறான்.

உன் குழந்தையைக் கொலை செய்வேன் என்று மிரட்டுகிறான். ஆனால் அவளோ புலியென மாறி அவன் காலைத் துண்டாக்குகிறாள்.

ஒரு காலை இழந்த செங்கோடன், மங்கம்மாவைப் பழி தீர்த்துக் கொள்ள அவளுடைய 2 வயது மகன் வேங்கையனைக் கடத்திச் சென்று, ஒரு சிறு இருட்டறையில் அடைத்து வைக்கிறான். இதனால் வேங்கையன் கூனிக்குறுகி வளருகிறான்.

மங்கம்மா, செங்கோடன் கண்ணில் படாமல் மறைந்து வாழ்கிறாள். அவளைக் கண்டுபிடித்து அவள் கண் எதிரே வேங்கையனின் காலைத் துண்டிக்கப்போவதாக சபதம் செய்கிறான் செங்கோடன். பெண்களை அடிமையாக்கி கால்களில் விலங்கு மாட்டுகிறான். எதிர்க்கும் ஆண்களின் தலை துண்டிக்கப்படுகிறது.

இருட்டறையில் கூனாகவே வளர்ந்து வரும் வேங்கையன் வாலிபனான பிறகும் பேசக்கூட முடியாத அளவுக்கு குழந்தைபோல் இருக்கிறான்.

ஒரு அழகி (ஜெயலலிதா) மூலம் அவனுக்கு விடிவு காலம் ஏற்படுகிறது. கூன் நிமிர்ந்து செங்கோடனுக்கு எதிராகப் போர்க்கொடி தூக்குகிறான். கொடிய வர்களை ஒடுக்குகிறான். அடிமைப் பெண்களை விடுவிக்கிறான்.

**மாறுபட்ட நடிப்பு**

01.05.1969 இல் வெளியான இந்தப்படத்தில் எம்.ஜி.ஆர். மாறுபட்ட வேடத்தில் சிறப்பாக நடித்திருந்தார். ஆரம்ப கட்டங்களில் முதுகை வளைத்து கூனனாக நடித்த காட்சிகளில் ரசிகர்களின் கைதட்டலைப் பெற்றார். பின்னர் கூன் சரியாக வீரதீரச் செயல்கள் செய்யும் போது வழக்கமாக எம்.ஜி.ஆரைக் கண்டு ரசிகர்கள் ஆரவாரம் செய்தனர். (தொடரும்)

# இலங்கை அரசை நிலைகுலைய வைத்த புலனாய்வு அறிக்கை



(நேற்றைய கட்டுரையின் தொடர்ச்சி...)

இது தொடர்பான பௌத்த பீடாதிபதிகளின் அறிக்கைகளை மகிந்தவின் ஊடகப் பிரிவானது ஊடகங்களுக்கு அனுப்பியுள்ளது. மகிந்தவிற்கான இராணுவப் பாதுகாப்பு மீண்டும் வழங்கப்பட வேண்டும் எனக் கோரி சத்தியாக்கிரகம் ஒன்றில் ஈடுபடுவதற்கான தயார்படுத்தல் 'பௌத்த பிக்குகளின் குரல்' எனக் கூறும் 'பெவிடி கண்ட' என்கின்ற அமைப்பிலுள்ள மகிந்த ஆதரவுப் பிக்குகள் தரப்பால் மேற்கொள்ளப்படுகிறது.

மகிந்தவிற்கு பொலிஸ் மற்றும் சிறப்பு அதிரடிப்படையினரின் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ள நிலையில் இராணுவப் பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும் என வலியுறுத்தப்படுவதற்கான காரணம் என்ன என்பது தொடர்பில் பலத்த சந்தேகம் தோன்றியுள்ளது. எடுத்துக் காட்டாக, மங்களவுடன்



வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டதாகக் கூறப்படும் மேஜர் ஜெனரல் சாஜி கல்லகே மகிந்தவின் பாதுகாப்புப் பிரிவின் பொறுப்பதிகாரியாகச் செயற்பட்டுள்ளார்.

அமெரிக்காவின் ஜெனிவா பரிந்துரைகள் தொடர்பாக இராணுவ அதிகாரிகளிடம் எடுத்துக் கூறுவதற்காக மங்கள யாழ்ப்பாணத்திற்குப் பயணம் செய்த போது, மகிந்த ராஜபக்ஷவின் முன்னாள் பாதுகாப்புப் பொறுப்பதிகாரி என சாஜி கல்லகே தன்னைத் தானே அறிமுகம் செய்திருந்தார். இலங்கை அரசாங்கத்தால் அமெரிக்காவின் ஜெனிவா பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்காக நியமிக்கப்பட்ட குழுவில் தானும் அங்கம் வகிப்பதாக சாஜி கல்லகே மங்களவிடம் தெரிவித்திருந்தார்.

இப்பரிந்துரைகள் தொடர்பான இராணுவத்தின் அபிப்பிராயங்களை கல்லகேயின் ஊடாக செயற்குழுவிற்கு அறியத்தருவது சாத்தியமான விடயமாகும் என பாதுகாப்புச் செயலர் தெரிவித்திருந்தார். எனினும், தான் யுத்த களத்தில் செயற்பட்டுள்ளதன் காரணமாக செயற்குழுவில் உள்வாங்கப்பட வேண்டும் என சாஜி கல்லகே குறிப்பிட்டார்.

இந்நிலையில் இது தொடர்பாக மங்கள எந்தவொரு கருத்தையும் முன்வைக்கவில்லை. ஆனாலும் யாழ்ப்பாணத்தில் சாஜி கல்லகேக்கும் மங்களவிற்கும் இடையில் சூடான வாய்த்தர்க்கம் இடம் பெற்றதாக மகிந்த ஆதரவு ஊடகங்கள் தகவல் வெளியிட்டன.

இலங்கை இராணுவத்திற்கும் மைத்திரி-ரணில் அரசாங்கத்திற்கும் இடையில் பிரச்சினைகளை உருவாக்குவதற்கான பாரிய



தொரு முயற்சியை மகிந்த ஆதரவுக் குழுக்கள் மேற்கொண்டு வருகின்றமை இங்கு வெளிப்படை. இக் காரணத்தை அடிப்படையாகக் கொண்டே மகிந்த மற்றும் கோத்தபாயவிற்கு வழங்கப்பட்டிருந்த இராணுவப் பாதுகாப்பை மைத்திரி-ரணில் அரசாங்கம் நீக்குவதெனத் தீர்மானித்திருக்கலாம்.

இராணுவப் பாதுகாப்பு அதிகாரிகள் மற்றும் உயர் இராணுவ அதிகாரிகளுடனான மகிந்த மற்றும் கோத்தபாயவின் நெருக்கமான உறவை மிகச் சாதாரணமாக எடைபோட முடியாது. ஆகவே, இது தொடர்பில் இலங்கை அரசாங்கமானது விழிப்புடன் செயற்பட வேண்டியது மிகவும் முக்கியமான தாகும்.

(முற்றும்)

ஆங்கிலத்தில் - உபுல்ஜோசப் பெர்னாண்டோ
மொழியாக்கம் - நித்தியபாரதி
வழிமூலம் - சிலோன் ருடே

# தமிழகத்தில் ஆட்சி யாரிடம் இன்று நண்பகல் தெரியவரும்

(சென்னை)

தமிழக சட்டப் பேரவை தேர்தல்வாக்கு எண்ணிக்கை 3 அடுக்கு பாதுகாப்புடன் இன்று நடைபெறவுள்ளது. வாக்கு எண்ணிக்கைக்காக தமிழகம் முழுவதும் 68 மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்த மையங்க ளில் தொகுதி வாரியாக பிரித்து வைக்கப்பட்டுள்ள மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்களுக்கு பலத்த பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.









24 மணி நேரமும் துப்பாக்கி ஏந்திய வீரர்கள் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். சிசிடிவி கமராக்கள் மூலம் கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அனைத்து இடங்களிலும் இன்று காலை 8 மணி முதல் வாக்கு எண்ணிக்கை நடைபெற உள்ளது.

முதலில் தபால் வாக்குகள் குறித்து எண்ணப்படும். இதை தொடர்ந்து வாக்குச் சாவடி வாரியாக மின்னணு இயந் திரங்கள் திறக்கப்பட்டு எண் ணிக்கை தொடங்கும்.

வாக்கு எண்ணிக்கையில் பங்கேற்கும் முகவர்களுக்கு கடும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

காலை 8.30 மணி முதல் நிலவரங்கள் வெளியாகும். தமிழகத்தில் ஆட்சி அமைக்கப்போவது யார் என்பது நண்பகலில் தெரிய வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழகத்தில் பரவலாக மழை பெய்து வருவதால் பழைய கட்டடங்களில் வைக்கப்பட்டுள்ள மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை தார்ப்பாய்களை கொண்டு மூடவும் உத்தரவிடப்பட்டுள்ளது. (இ-5)

## தமிழக சட்டசபைத் தேர்தலின் முடிவுகளை வெளியிடக்கூடாது

### நீதிமன்றில் வழக்குத்தாக்கல்

திருப்பூரில் பறிமுதல் செய்யப்பட்ட ரூ.570 கோடி குறித்து முறையான விசாரணை நடத்தவேண்டும் என்றும், அதுவரை தமிழக சட்டசபை தேர்தல் முடிவுகளை வெளியிடக்கூடாது என்றும் உயர் நீதிமன்றில் வழக்கு தொடர்ந்துள்ளார் மக்கள் பாதுகாப்புக் கழகத் தலைவர் டிராபிக் ராமசாமி. சென்னை உயர் நீதிமன்றில் அவர் தாக்கல் செய்துள்ள மனுவில் கூறியிருப்பதாவது,

சட்டசபை தேர்தலை முன்னிட்டு, தமிழகத்தில் சட்டவிரோதமாக எடுத்து செல்லப்பட்ட சுமார் 100 கோடி ரூபாய் பறிமுதல் செய்துள்ளதாகவும், அதில் 50 சதவீதம் முறையான கணக்கு இல்லாதவை என்றும் தமிழக தலைமை தேர்தல் அதிகாரி ராஜேஷ் லக்கானி கூறியுள்ளார்.

இந்த நிலையில், கடந்த 14ஆம் திகதி திருப்பூர் மாவட்டத்தில் வாகன சோதனையில் ஈடுபட்ட தேர்தல் அதிகாரிகள், 3 கண்டெய்னர் லொறிகளில் எடுத்துச்செல்லப்பட்ட ரூ.570 கோடியை பறிமுதல் செய்துள்ளனர். அந்த வாகனங்களில் பயணம் செய்தவர்களிடம் முறையான ஆவணங்கள்எதுவும்இல்லை. தற்போது இந்த பணம் தங்களுடையது என்று பாரத ஸ்டேட் வங்கி நிர்வாகம் உரிமை கோரியுள்ளது.

ஆனால், வங்கி நிர்வாகம சார்பில் அளிக்கப்பட்டுள்ள விளக்கம், தேர்தல் அதிகாரிகளுக்கு திருப்தி அளிக்காமல் உள்ளன. ஒரு இடத்தில் இருந்து மற்றொரு இடத்துக்கு பெரும் தொகையை எப்படி எடுத்து செல்வது?, ஒரு வங்கி கிளையில் எவ்வளவு பணம் இருப்பு வைக்கலாம்? என்பது தொடர்பான ரிசர்வ் வங்கி ஏற்கனவே சில விதிமுறைகளை வகுத்துள்ளது.

ஆனால், இந்த விதிமுறைகளை பின்பற்றாமல், பாரத ஸ்டேட் வங்கியின் கோவை கிளை நிர்வாகம் இந்த தொகையை தங்களது கிளையில் இருந்து எடுத்து செலப்பட்டது என்று கூறியுள்ளது. ஆனால், ‘இவ்வளவு பெரிய தொகையை ஒரு வங்கி கிளையில் இருந்து மற்றொரு கிளைக்கு எடுத்துச் செல்வது சாத்தியமற்றது’ என்று முன்னாள் நிதி அமைச்சர் கருத்து தெரிவித்துள்ளார். எனவே, இது சட்ட விரோதமான பணம்என்று தெரிகிறது. மேலும், இதுவரை ரிசர்வ் வங்கி மண்டல இயக்குநர், அமுலாக்கப்பிரிவு மண்டல சிறப்பு இயக்குநர் ஆகியோர் இந்த பணம் குறித்து முறையான விசாரணை நடத்தி, தமிழக தலைமை தேர்தல் அதிகாரிக்கு அறிக்கை தரவில்லை.

எனவே, திருப்பூரில் பறிமுதல் செய்யப்பட்ட ரூ.570 கோடி குறித்து முறையான விசாரணை நடத்தவேண்டும். இந்த தொகையை தமிழக சட்டசபை தேர்தலுக்காக கொண்டுவரப்பட்டதா? என்பதை கண்டறியவேண்டும். அதுவரை தமிழக சட்டசபை தேர்தல் முடிவுகளை வெளியிடக்கூடாது என்று கடந்த 15 ஆம் திகதி தமிழக தலைமை தேர்தல் அதிகாரிக்கு மனு கொடுத்தேன். இதுவரை மனு பரிசீலிக்கப்படவில்லை. எனவே, தமிழக சட்டசபை தேர்தல் முடிவுகளை வெளியிடக்கூடாது என்று இந்திய தேர்தல் ஆணையத்துக்கும், தமிழக தலைமை தேர்தல் அதிகாரிக்கும் உத்தரவிட வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது. (இ-5)

## அரியாணாவில் கிணற்றில் விச வாயுவினால் 5 பேர் உயிரிழப்பு



அரியானா மாநிலத்தில் கிணற்றில் தூர் வாரும்போது விஷ வாயு தாக்கியதில் 5 பேர் பலியாகி உள்ளனர்.

அரியானா மாநிலம் ஜிந்த மாவட்டத்தில் உள்ள நிதனா என்ற கிராமத்தில் கடுமையான தண்ணீர் பஞ்சம் நிலவி வருகிறது. இதனால் நான்கைந்து ஆண்டுகளாக பயன்படுத்தப்படாத தூர்ந்து போன கிணற்றை தூர்வார கிராம மக்கள் முடிவு செய்தனர். அதன்படி, நேற்று முன்தினம் காலை தூர்வாரும் பணிகளை தொடங்கினர்.

கிணற்றை தூர் வார முயன்ற ஒருவர் முதலில் இறங்கினார். அப்போது அவர் மயங்கி கிணற்றுக்குள் விழுந்தார். அவரைத் தொடர்ந்து மற்றொருவர் இறங்கினார், அவரும் திரும்பி வரவில்லை. இவ்வாறு ஒருவர்பின் ஒருவராக மொத்தம் 5 பேர் கிணற்றுக்குள் விழுந்தனர். இதுகுறித்து உடனடியாக பொலிஸாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. விரைந்து வந்த பொலிஸார் இதுகுறித்து விசாரணை நடத்தினர். விசாரணையில் கிணற்றில் உள்ள விஷவாயு தாக்கி 5 பேரும் இறந்திருப்பது தெரிய வந்தது.

பின்னர் அனைவரின் உடல்களும் மீட்கப்பட்டு பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இறந்தவர்கள் சஞ்சய் (23), சுக்செயின் (20), மஹிபால் (36), மோகன் (18), தினேஷ் (24) என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

விஷவாயு தாக்கி பலியானவர்களின் குடும்பத்திற்கு தலா ரூ.5 லட்சம் இழப்பீடு வழங்கப்படும் என்று அம்மாநில அரசு அறிவித்துள்ளது. (இ-5)

### தென்காசி தொகுதியிலுள்ள 56வது வாக்குச்சாவடியில்

## மறுவாக்குப்பதிவு நடத்த உத்தரவு

தென்காசி தொகுதியில் உள்ள 56-வது வாக்குச் சாவடியில் மறுவாக்குப்பதிவு நடதத தமிழக தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது. இன்று 232 தொகுதிகளுக்கு வாக்கு எண்ணிக்கை நடைபெற உள்ள நிலையில், தென்காசி தொகுதியில் உள்ள ஒரு வாக்குச்சாவடியில் மறு வாக்குப்பதிவு நடத்தப்படவேண்டும் என தேர்தல் ஆணையத்திற்கு பரிந்துரை செய்யப்பட்டதை தொடர்ந்தே குறித்த உததரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தென்காசி தொகுதியில் உள்ள 56-வது வாக்குச் சாவடியில் உள்ள மின்னணு வாக்குப்பதிவு எந்திரத்தில் மாதிரி வாக்குப்பதிவின் போது பதிவான 52 வாக்குகளை அழிக்காமல் வாக்குப்பதிவு நடத்தப்பட்டிருப்பதாகவும், அதனால், அந்த வாக்குச் சாவடியில் மறுவாக்குப்பதிவு நடத்த வேண்டும் என்றும் தேர்தல் பொது பார்வையாளர், தமிழக தேர்தல் ஆணையத்திற்கு பரிந்துரை செய்துள்ளார்.

இந்த பரிந்துரையை ஏற்ற தேர்தல் ஆணையம் மேற்குறிப்பிட்ட வாக்குச்சாவடியில் மறுவாக்குப்பதிவு நடத்த உத்தரவு பிறப்பித்துள்ளது. (இ-5)

## கேரளாவில் கனமழை மற்றும் கடல் சீற்றத்தால் நூற்றுக்கணக்கான வீடுகள் இடிந்து தரை மட்டம்



கேரள மாநிலத்தில் கடலோர மாவட்டங்களில் பெய்த கனமழை மற்றும் கடல் சீற்றம் காரணமாக 100 இற்கும் மேற்பட்ட வீடுகள் இடிந்து தரைமட்டமாகின. வங்கக் கடலில் உருவான காற்றழுத்த தாழ்வு மண்டலம் காரணமாக கேரள மாநிலத்தின் கடலோர மாவடங்களில் கனமழை பெய்து வருகிறது. திருவனந்தபுரம், ஆலப்புழா, உள்ளிட்ட மாவட்டங்களில் கடல் சீற்றமும் அதிகள்வில் இருப்பதால் கடற்கரையோரத்தில் இருந்த நூற்றுக்கணக்கான வீடுகள் சேதம் அடைந்துள்ளன.

இன்றும் மழை தொடரும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளதால் வீடுகளை இழந்து தவிக்கும் மீனவர்கள் மற்றும் தாழ்வான இடங்களில் வசிப்போர் கவலையடைந்துள்ளனர். (இ-5)

## சீனாவை ஊடறுத்த மணற்புயல்

(பீஜிங்)

சீனாவின் ஜின்ஜியாங் உய்குர் தன்னாட்சிப் பிராந்தியத்தில் உள்ள கஷ்கர் பகுதியை மணற்புயல் ஊடறுத்துள்ளது.

தரையில் இருந்து சுமார் 100 மீற்றர் உயரத்திற்கு மணலை வாரியிறைத்து புயற்காற்று வீசியுள்ளதுடன், அப்பகுதிகளில் தெளிவுதிறன மிக மிகக் குறைவாக இருந்தமையையும் காணொளிகளில் அவதானிக்க முடிகின்றது.



இதனைடுத்து உள்ளூர் வானிலை ஆய்வு அதிகாரிகள், குறித்த பகுதியில் மணற்புயல் தாக்கம் தொடர்பில் செம்மஞ்சள் எச்சரிக்கையை விடுத்துள்ளதுடன், மக்களை அவதானமாக செயற்படுத்துமாறும் அறிவுறுத்தியுள்ளனர.

மணற்புயலின் தாக்கத்தினால் குறித்த பகுதியில் போக்குவரத்து பாரியளவில் பாதிக்கப்பட்டுள்ளதோடு, சிலர் கண்களில் ஏற்பட்ட சில நோய் அறிகுறிகள் தொடர்பில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (இ-5)

# போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டன

## ஒருவர் கைது

ஏறாவூர் நகரிலுள்ள மருந்தகம் ஒன்றில் ஒரு வகைப் போதை மாத்திரைகளை மட்டக்களப்புப் பிராந்திய உணவு மற்றும் மருந்துப்பொருள் பிரிவினர் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கைப்பற்றியுள்ளனர்.

அத்துடன், அம்மருந்தகத்தில் குறித்த மாத்திரைகளை விற்பனை செய்த ஒருவரையும் கைதுசெய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த மருந்துக்கடையில் போதையூட்டும் மாத்திரைகள் விற்பனை செய்யப்படுவதாக கிடைத்த தகவலை அடுத்து, பொலிஸார் திடீர்ச் சோதனையை மேற்கெண்டனர். இதன்போது, ஒவ்வொன்றும் 150 மில்லிக்கிராம் கொண்ட 18 மாத்திரைகளைக் கைப்பற்றியுள்ளதாகவும் பொலிஸார் கூறினர்.

குறித்த மாத்திரைகள் இளவயதினருக்கு குறிப்பாக, பாடசாலை மாணவர்களுக்குப் போதையூட்டுவதற்காக சட்டவிரோதமாக விற்பனை செய்வதாக அறியப்படுகின்றது.

இந்த மாத்திரைகள் போதை தரக்கூடியது என்றும் மேலும் நீண்டகாலப்போக்கில் நரம்பு மண்டலங்களைத் தாக்கி நிரந்தரமாக ஊனமுறச் செய்யக்கூடியது என்றும் சுகாதாரத்துறையினர் தெரிவிக்கின்றனர்.

இது விடயமாக தாம் சட்ட நடவடிக்கை எடுத்திருப்பதாக மட்டக்களப்புப் பிராந்திய உணவு மற்றும் மருந்துப் பொருள் பிரிவினர் தெரிவித்தனர். (இ-5)

## நாணயமாற்று விகிதம்

மத்திய வங்கி வெளியிட்ட அறிக்கை-18.05.2016

| நாடு | நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|---|
| அமெரிக்கா | டொலர் | 144.02 | 147.84 |
| பிரிட்டன் | பவுண்ட் | 207.20 | 214.71 |
| ஐரோப்பிய ஒன்றியம் | ஈரோ | 161.65 | 168.20 |
| சுவிட்சர்லாந்து | பிராங் | 145.68 | 151.91 |
| கனடா | டொலர் | 110.66 | 115.35 |
| அவுஸ்திரேலியா | டொலர் | 104.04 | 109.01 |
| சிங்கப்பூர் | டொலர் | 104.48 | 108.61 |
| இந்தியா | ரூபா | 2.1785 | ------- |
| சீனா | யுவான் | 22.3087 | -------- |

மத்திய கிழக்கு நாடு

| நாடு | நாணயம் | பெறுமதி |
|---|---|---|
| பகரெயின் | டினார் | 386.5180 |
| குவைத் | டினார் | 483.0610 |
| ஓமான் | ரியால் | 378.5311 |
| கட்டார் | ரியால் | 40.0343 |
| சவுதி அரேபியா | ரியால் | 38.8574 |
| ஐக்கிய அரபு எமிரேட்ஸ் | டிராம் | 39.6736 |

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 140 | 100 | 80 | 120 | 80 | 120 | 120 |
| உருளைக்கிழங்கு | 80 | 100 | 90 | 100 | 90 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 180 | 250 | 150 | 200 | 250 | 250 | 200 |
| தக்காளி | 220 | 250 | 180 | 200 | 120 | 280 | 220 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 80 | 50 | 60 | 60 | 80 | 70 |
| கோவா | 140 | 160 | 100 | 100 | 140 | 160 | 150 |
| கரட் | 120 | 120 | 100 | 120-200 | 120 | 160 | 120 |
| பூசணி | 60 | 40 | 20 | 40 | 40 | 60 | 40 |
| புடோல் | 100 | 60 | 50 | 80 | 60 | 120 | 100 |
| வாழைக்காய் | 50 | 30 | 30 | 40 | 40 | 40 | 40 |
| சின்ன வெங்காயம் | 140 | 160 | 100 | 120 | 140 | 160 | 100 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 80 | 90 | 90 | 100 | 80 |
| பாகற்காய் | 140 | 200 | 110 | 150 | 120 | 120 | 120 |
| வெண்டிக்காய் | 120 | 100 | 70 | 80 | 60 | 80 | 100 |
| கருணைக்கிழங்கு | 80 | 120 | 80 | 100 | 80 | 120 | 100 |
| பயற்றங்காய் | 180 | 160 | 120 | 180 | 120 | 120 | 180 |
| லீக்ஸ் | 140 | 160 | 100 | 140 | 160 | 160 | 180 |
| பீற்றூட் | 120 | 120 | 100 | — | 140 | 160 | 100 |
| கறிமிளகாய் | 150 | 250 | 120 | 160 | — | 160 | 140 |
| முருங்கைக்காய் | 180 | 150 | 120 | 100 | 140 | 180 | 100 |
| போஞ்சி | 200 | 200 | 180 | 200 | 160 | 280 | 200 |
| கத்தரிதம்புள்ள | 100 | 100 | 70 | 80 | — | 100 | 90 |
| கீரை - 1பிடி | 30 | 30 | 20 | 40 | 30 | 30 | 30 |
| தேசிக்காய் | 600 | 400 | 250 | 400 | 350 | 300 | 500 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 30-50 | 15-30 | 50 | 20 | 20-30 | 40 |
| இராசவள்ளி | 150 | 250 | 140 | 160 | 140 | 160 | 150 |
| வெங்காயப்பூ | 400 | — | — | — | — | — | — |
| முள்ளங்கி | 100 | — | 60 | 60 | 60 | 120 | 80 |
| பொன்னாங்காணி | 20 | — | 20 | 30 | 40 | 30 | 20 |
| வல்லாரை | 10 | — | 10 | 10 | 20 | 20 | 10 |
| ஈரப்பலா | 80 | — | — | 80 | — | — | 70 |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## கிளிநொச்சி மீண்டும் விடுதலைப்புலிகள் வசமானது 184

குண்டு வெடித்த தகவல் கிடைத்ததும் இராணுவ துணை அமைச்சர் அனுருத்தா அங்கு சென்று பார்வையிட்டார். கோவிலின் சேதம் அடைந்த பகுதி உடனடியாக புதுப்பிக்கப்படும் என்று அப்போது அவர் கூறினார்.

**தடை**

விடுதலைப்புலிகள் இயக்கத்துக்குத் தடை விதிக்க வேண்டும் என்று ஏற்கனவே அரசுக்கு கோரிக்கை விடப்பட்டு இருந்தது. ஆனால் விடுதலைப்புலிகளுடன் பேச்சு நடத்துவதற்காகத் தடை விதிக்கப்படாமல் இருந்தது. இதற்கிடையே கண்டியில் உள்ள புத்தர் கோவிலில் குண்டு வெடித்து 15 பேர் பலியானார்கள்.

இதற்கு கண்டனம் தெரிவித்துப் புத்த பிக்குகள் கொழும்பு நகரில் ஊர்வலம் சென்றார்கள். கோவிலைப் பாதுகாக்க தவறியதற்காக ஜனாதிபதி சந்திரிகா இராஜினாமா செய்யவேண்டும் என்று வற்புறுத்தினார்கள். புத்தர் கோவில் குண்டு வைத்ததற்காக விடுதலைப்புலிகள் இயக்கத்துக்குத் தடை விதிக்க வேண்டும் என்று கோரினார்கள். இதேபோல பல தரப்புக்களில் இருந்தும் கண்டனங்கள் தெரிவிக்கப்பட்டன.

இதைத் தொடர்ந்து விடுதலைப்புலிகள் இயக்கத்துக்கு தடை விதித்து அரசு 26.01.1998 அன்று அறிவிப்பு வெளியிட்டது.

**கிளிநொச்சி நகரம்**

விடுதலைப்புலிகள் கட்டுப்பாட்டில் இருந்த யாழ்ப்பாணத்தை இராணுவம் 1996 ஆம் ஆண்டு தொடக்கத்தில் கைப்பற்றியது.இதைத் தொடர்ந்து கிளிநொச்சி நகரை விடுதலைப்புலிகள் தங்கள் தலைமையிடமாகக் கொண்டு இராணுவத்தை எதிர்த்துப் போரிட்டு வந்தனர். இந்த நகரையும் 1996 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் இராணுவம் கைப்பற்றிக் கொண்டது.

**அதிரடித்தாக்குதல்**

கிளிநொச்சி நகரை மீட்க விடுதலைப்புலிகள் 27.09.1998 அன்று அதிரடித்தாக்குதல் நடத்தினார்கள். 1500 விடுதலைப்புலிகள் இந்தத் தாக்குதலில் ஈடுபட்டனர். இவர்களில் பெரும்பாலானவர்கள் பெண் விடுதலைப் புலிகள்.

பரந்தன் என்ற இடத்தில் இருந்து 8 கிலோமீற்றர் தூரத்தில் உள்ள கிளிநொச்சி வரையிலும் ஆங்காங்கே இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டிருந்தன. இந்த முகாம்கள் மீது விடுதலைப் புலிகள் அதிரடித் தாக்குதல் நடத்தினார்கள்.

**கைப்பற்றினார்கள்**

2 நாட்களாக நடந்த கடும் சண்டைக்குப்பிறகு கிளிநொச்சி நகரை விடுதலைப்புலிகள் கைப்பற்றிக் கொண்டனர்.

கிளிநொச்சி நகர் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் சென்றதை இராணுவம் 29.09.1998 அன்று அறிவித்தது. இது பற்றிக் கொழும்பில் இராணுவ அதிகாரி ஒருவர் கூறுகையில்,

நாங்கள் ஒவ்வொரு பக்கத்தில் இருந்தும் தாக்கப்பட்டோம். 1500 பேர் தாக்குதல் நடத்தினார்கள். இவர்களில் பெரும்பாலானவர்கள் பெண்கள் என்று கூறினார்.

இந்தச் சண்டையில் 377 விடுதலைப்புலிகள் உயிர் இழந்ததாகவும் இராணுவத் தரப்பில் 150 பேரும் ஆக மொத்தம் 527 பேர் உயிர் இழந்ததாகவும் 110 பேர் காயம் அடைந்ததாகவும் அவர் கூறினார்.

கிளிநொச்சி நகருக்குள் இன்னும் சில இராணுவ வீரர்கள் சிக்கி இருக்கின்றார்கள். அவர்கள் உயிருடன் இருக்கிறார்களா, இல்லையா என்றும் தெரியவில்லை என்றும் அந்த இராணுவ அதிகாரி தெரிவித்தார்.

**விடுதலைப்புலிகள் வானொலி**

கிளிநொச்சி நகர் கைப்பற்றப்பட்டதை விடுதலைப் புலிகளின் வானொலியிலும் அறிவித்தனர்.

கிளிநொச்சி நகரை மீட்கும் போரில் 240 விடுதலைப் புலிகள் உயிரிழந்ததாகவும் இராணுவ தரப்பில் 300 பேர் கொல்லப்பட்டதாகவும் அந்த செய்திகள் தெரிவித்தன.

ஓயாத அலைகள் 2 என்று பெயரிடப்பட்ட இந் தத் தாக்குதல் விடுதலைப் புலிகள் இயக்கத்தலைவர் பிரபாகரன் தலைமையில் நடந்ததாகவும் 1996 ஆம் ஆண்டு முல்லைத்தீவு இராணுவத்தளம் மீது நடந்த தாக்குதலுக்கு இணையாக இந்தச் சண்டை இருந்தது என்றும் அறிவிக்கப்பட்டது.

வடக்கில் மேலும் 6 முக்கிய நகரங்களை விடுதலைப்புலிகள் மீட்டனர். விடுதலைப் புலிகளின் தாக்குதலைச் சமாளிக்க முடியாமல் இராணுவம் பின்வாங்கியது.

வன்னிப்பகுதியில் உள்ள முக்கிய நகரம் ஒட்டுசுட்டான். விடுதலைப்புலிகள் வசம் இருந்த இந்த நகரை 1998 ஆம் ஆண்டு தொடக்கத்தில் இராணுவம் கைப்பற்றியது.

அந்த நகரை இராணுவத்திடம் இருந்து மீண்டும் கைப்பற்றுவதற்காக விடுதலைப்புலிகள் அதிரடித் தாக்குதல் நடத்தினார்கள்.

**கைப்பற்றினார்கள்**

பீரங்கிகள், ஏவுகணைகள் உதவியுடன் ஏராளமான விடுதலைப் புலிகள் இந்தத் தாக்குதலில் ஈடுபட்டனர்.



கிளிநொச்சியில் போர் நடந்தபோது எடுத்த படம்.

(தொடரும்)

உயர்ந்த இலட்சியத்தை அடைய வீறுடன் உழைப்பவனுக்கு சிறு குறைகள் உறுத்தாது.

-ஓர் அறிஞர்

வலம்புரி

T.P : 021 567 1530

website : www.valampurii.lk

## தமிழ்த் தரப்புக்களை ஒற்றுமைப்படுத்த முள்ளிவாய்க்கால் ஒன்று போதாதோ!

மே 18 முள்ளிவாய்க்காலில் நேற்றையதினம் தீபம் ஏற்றி உயிரிழந்த எம் உறவுகளுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

இறுதிப் போரில் உயிரிழந்த எம் உறவுகளை நினைவு கூருவதென்பது எங்களின் உரிமையும் கடமையுமாகும்.

இருந்தும் தமிழ் அரசியல் தலைவர்கள் சிலர் முள்ளிவாய்க்காலில் அஞ்சலி செலுத்துவதை தவிர்த்துக் கொண்டனர்.

முள்ளிவாய்க்காலுக்கு சென்று அஞ்சலி செலுத்தினால் அது அரச மட்டத்துச் செல்வாக்கை குறைத்துவிடும் என்று நினைத்து அவர்கள் முள்ளிவாய்க்காலுக்குச் செல்வதை தவிர்த்திருக்கலாமோ என்று எண்ணத் தோன்றலாம்.

இருந்தும் போரில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்துவதை தடைசெய்ய முடியாது என்று அரசாங்கமே அறிவித்த பின்னர் முள்ளிவாய்க்காலுக்குச் சென்று எங்கள் உறவுகளை நினைந்து ஒரு நிமிடம் அஞ்சலி செலுத்துவது உயிரிழந்தவர்களை முன்னிறுத்தி பாராளுமன்ற உறுப்பினர் பதவியைப் பெற்ற தமிழ் அரசியல் தலைமைகளின் கடமை.

இருந்தும் தமிழ்த் தலைவர்கள் சிலர் முள்ளிவாய்க்கால் பக்கம் செல்வதை முற்றாகத்தவிர்த்துக் கொண்டதற்கு புலிகள் மீதான ஆத்திரம் காரணமோ என்று எண்ணத் தோன்றும்.

எது எப்படியாயினும் மகிந்த ராஜபக்ஷவின் தந்தையார் ராஜபக்ஷவின் நினைவு தின நிகழ்வில் கலந்து கொண்ட தமிழ்த் தலைவர்கள் முள்ளிவாய்க்காலை ஓரம் கட்டியமை எந்த வகையிலும் நியாயமாகத் தெரியவில்லை.

பரவாயில்லை; கிடைக்கின்ற வெளிநாட்டு நிதி உதவிகள் கிடைக்காமல் போய்விடும் என்ற அச்சத்திலும் இவர்கள் முள்ளிவாய்க்காலை நினைக்காமல் இருந்திருக்கலாம்.

எது எப்படியாயினும் தமிழர்கள் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் ஒன்றுபட வேண்டும்.

தமிழர்களின் ஒற்றுமை ஒன்றுதான் அவர்களின் பலமாக இருக்க முடியும். இருந்தும் துரதிர்ஷ்டவசமாக தமிழ் அரசியல் தலைமைகளும் தமிழ் அமைப்புக்களும் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் ஒற்றுமையை இழந்து தனித் தனி வழியில் பயணிக்கின்றன.

ஒரு அமைப்பு நல்லதைச் செய்ய நினைத்தால் மற்றைய அமைப்பு அதனை தடுத்து நிறுத்த கடுமையாகப் பாடுபடுகிறது.

பதவி ஆசையும் பெயர், புகழ் விருப்பமும் மேலோங்கி சதிராடுகிறது. உள் ஒன்று வைத்து புறம் ஒன்று பேசுகின்ற வஞ்சகத்தனங்கள் தமிழினம் தழைத்தோங்க முடியாதவாறு வெட்டிச் சரிக்கின்றன.

இத்தகைய நிலைமை தொடர்ந்தால் தமிழினம் தன் இனத்தால் அழிந்த இனம் என்ற கறை படிந்த வரலாற்றை தனதாக்கிக் கொள்ளும்.

ஆகையால்; அன்புக்குரிய தமிழ் அரசியல் தலைமைகளே! தமிழ் அமைப்புக்களே! உங்களிடம் கருத்து முரண்பாடுகள் இருக்கலாம்.

அந்தக் கருத்து முரண்பாடுகள் தமிழ் மக்களுக்கு நன்மை செய்யும் பொருட்டு ஏற்பட்டது என நீங்கள் கருதினால், ஒரு கணம் முள்ளிவாய்க்காலை நினையுங்கள்.

முள்ளிவாய்க்கால் உங்கள் மனக்கண்ணில் தெரியுமாயின் தமிழர்கள் ஒற்றுமைப்படுவதில் எந்தத் தடையும் இருக்க முடியாது.

ஆம், முள்ளிவாய்க்கால் ஒன்றுபோதும் தமிழர்கள் ஒன்றுபடவும்; தமிழன் வாழ்ந்து காட்டுவான் என்பதை உறுதிப்படுத்தவும் முள்ளிவாய்க்கால் ஒன்று போதும்.

## ஸ்ரீலங்கன் விமான நிறுவனத்தின் பிரதான அதிகாரியின் சம்பளம் 40 இலட்சம் ரூபா

(கொழும்பு)

ஸ்ரீலங்கன்விமானசேவையின் பிரதான நிறைவேற்று அதிகாரி 40 இலட்சம்ரூபாயை சம்பளமாக பெறுவதாக மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில்நேற்று முன்தினம் சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

ஸ்ரீலங்கன்விமானசேவை நிறுவனத்தின் ஊழியர் களை கவனத்தில் கொள்ளும் போது ஒரு விமானத்திற்கு 333 என்ற அளவில் ஊழியர்கள் இருக்கின்றனர்.

அரசாங்கம் ஸ்ரீலங்கன் விமான நிறுவனத்தை விற்பனை செய்ய அடிப்படையை ஏற்படுத்தி வருகின்றது.

நிறுவனத்தின் நஷ்டத்தை மக்களுக்கு கொடுத்து விட்டு, நன்மையை முதலாளிமாருக்கு கொடுக்க முயற்சிக்கின்றனர்.

புல்லை மக்களுக்கு கொடுத்து விட்டு, பாலை கடத்தல் காரர்களுக்கு கொடுப்பது போன்ற நடவடிக்கையாகும்.

விமானத்தில் பயணிக்கும் பயணி இந்த நஷ்டத்தை செலுத்த வேண்டிய அவசியமில்லை.

பணத்தை கொள்ளையிட்டு, விமானத்தில் பயணித்தவர்களை அழைத்து பணத்தை அறவிட வேண்டும்.

கடந்த அரசாங்கத்தின் திட்டம் கொள்ளையிடுவது. தற்போதைய அரசாங்கத்தின் திட்டம் விற்று தின்பது எனவும் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்தார். (இ-5)

## பொங்கல் திருவிழா

(யாழ்ப்பாணம்)

மல்லாகம் பெரிய நாயகி சமேத பெரிய தம்பிரான் ஆலய வருடாந்த பொங்கல் திருவிழா எதிர்வரும் 22 ஆம் திகதி நடைபெறவுள்ளது. (இ-5)

## விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

சாவற்காடு நூறு வீட்டுத் திட்ட பாலர் பாடசாலையின் விளையாட்டு விழா இன்று பிற்பகல் 2.30 மணிக்கு பாலர் பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வட மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே, யாழ். இந்தியத் துணைத் தலைவர் ஏ.நடராஜன், யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-5)

## சத்திய தரிசனம்



### ஆன்மாவிற்கு உரமிடுங்கள்

❖ பாரதப் பண்பாடு அனுபவத்தாலும், வெளியுலகம் அறிவதாலும் மேலும் மேலும் சிறப்படைந்து வருகிறது. அனுபவம் மேலிட மேலிட நம் பண்பாடு பற்றி அதிகம் அறிகிறோம். புதிய எண்ணங்கள் நமக்கு எழுகின்றன.

❖ உன் காலில் தைத்துள்ள முள்ளை இன்னொரு முள்ளால்தான் எடுக்க வேண்டும். பாதத்தில் தைத்த முள்ளை எடுக்க கோடாரியைப் பயன்படுத்த முடியாது. வைரத்தை வைரத்தால்தான் அறுக்க முடியும். ஒரு மனிதனைப் புரிந்து கொள்ள மிக முக்கியமான மனித இயல்புகளால்தான் முடியும்.

❖ பல மரங்களைப் பார்த்திருக்கலாம். சில பெரிய ஆலமரங்கள் பெரிய மாளிகை போலப் பெரியதாய் காட்சி அளிக்கின்றன. அதன் விதையைப் பார்த்தால் கடுகு போல மிகச் சிறியதாயுள்ளது. அந்த மிகச்சிறிய விதையுள் தான் அந்த மிகப்பெரிய ஆலமரம் உள்ளது என்பதுதான் உண்மை. இதே போலப் பிரபஞ்சமெனும் பெரிய மரத்தில் காண்பன யாவும், தெய்வீகமெனும் சிறிய விதையிலிருந்து தோன்றியதுதான். இவ்வண்ணமே உன் பெரிய உடலில் ஆத்மாவின் அம்சமாக மிகமிகச் சின்னஞ்சிறிய விதையுள்ளது. அதற்கு உரமிட்டு, வளர்த்து செழிக்கவிடு. அப்போதுதான் பிரபஞ்சத்தின் தெய்வ ஸ்வரூபம் தெரியும்.

❖ ஒரு மனிதன் வாழ்வில் நடக்க வேண்டியவை நடந்தே தீரும். தவிர்க்க முடியாத சம்பவங்களை எடுத்துக் கொண்டு பொறாமையை வளர்க்கப் பயன்படுத்துவது தவறு. அது நல்ல மனித இயல்பு அல்ல. அனுபவிக்க வேண்டிய நோய், சூழும் துன்பம், நமக்குள்ள தொந்தரவுகள் யாவும் வெளியிலிருந்து வந்தவையோ, கடவுள் கொடுத்தவையோ அல்ல. அவை யாவும் நம் செயலின் விளைவுகளே.

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வெள்ளிக்கிழமை யாழ். பிரதேசத்தில் நாவற்குழி, மறவன் புலோ, தனங்கிளப்பு, கோகிலாக்கண்டி, கேரதீவு வீதி ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில குட்செட் வீதி பிரதேசம், கோவில்குளம் சிவன் கோவிலடி பிரதேசம் ஆகிய பிரதேசத்திலும் மின் தடைப்படும். (இ-9)

## போட்டிப் பதிவுக்கான முடிவுத்திகதி நீடிப்பு

குருதேவரின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு யாழ்ப்பாணம் சின்மயா மிஷன் நடத்தும் பாடசாலை மாணவர்களுக்கான ஸ்ரீ மத் பகவத் கீதை வினாவிடைப் போட்டிக்கு மாணவர்கள் பதிவுகளை மேற்கொள்ள வேண்டிய முடிவுத் திகதி 21.05.2016 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது என யாழ். சின்மயா மிஷன் அறிவித்துள்ளது.

மேற்படி போட்டிப் பதிவுக்கான முடிவுத் திகதி 18.05.2016 என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால் போட்டிகளில் பங்குபற்றவுள்ள மாணவர்களது நன்மை கருதி முடிவுத் திகதி நீடிக்கப்பட்டுள்ளதாக சின்மயா மிஷன் அறிவித்துள்ளது. (இ-5)

## பொதுக்கூட்டம்

சர்வதேச இந்து மத குருமார் ஒன்றியத்தின் விசேட பொதுக்கூட்டம் யாழ். பருத்தித்துறை வீதி ஆனைப்பந்தியில் அமைந்துள்ள குருகுலம் தலைமைச் செயலகத்தில் எதிர்வரும் 25 ஆம் திகதி புதன்கிழமை இரவு 7 மணியளவில் இடம் பெறும். (இ-5)



## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### வீட்டில் செல்வம் அதிகரிக்க வேண்டுமா?

பணப்பெட்டி மற்றும் நகைப்பெட்டி வீட்டில் பணம் வைக்கும் பெட்டி மற்றும் நகை வைக்கும் பெட்டியை தெற்கு அல்லது தென்மேற்குப் பகுதியில் வைக்கவும். இதனால் அந்த பெட்டியானது திறக்கும் போது வடக்கு நோக்கி இருக்கும். பொதுவாக வடக்கு குபேரனின் சாம்ராஜ்யம். இந்த திசையை நோக்கி ஒவ்வொரு முறை திறக்கும் போதும், குபேரன் அப்பெட்டியில் செல்வத்தை நிரப்ப வழி செய்வாராம்.

இயந்திரங்கள் வைக்க கூடாத இடம் எப்போதும் வீட்டின் வடகிழக்கு பகுதியில் எந்த ஒரு பொருளையும் வைக்காதீர்கள். மேலும் வீட்டின் இந்த திசையில் மாடிப் படிக்கட்டுக்களை வைக்க வேண்டாம் மற்றும் மிகவும் கனமான இயந்திரங்களையும் இப்பகுதியில் வைப்பதைத் தவிர்த்திடுங்கள்.

வீட்டில் உள்ள குழாயில் எப்போதும் நீர் வடிந்தவாறு இருந்தால், உடனே அதை சரிசெய்யுங்கள். இல்லாவிட்டால், அதிலிருந்து வெளியேறும் நீரைப் போல், வீட்டில் உள்ள செல்வ நிலையும் வெளியேறும்.

பணம் வைக்கும் பெட்டியின் முன் கண்ணாடியை வைப்பதால், பெட்டியில் உள்ள பணம், மீண்டும் பெட்டியில் பிரதிபலித்து, செல்வ நிலையை இரட்டிப்பாக்கும்.

உங்கள் வீட்டில் இருந்து பணம் அதிகம் வெளியேறுவது போன்று நீங்கள் உணர்ந்தால், வீட்டில் தென்மேற்கு பகுதியில் கனமான பொருளை வையுங்கள்.

வீட்டின் வடக்கு பகுதியில் பச்சை நிற வண்ணத்தைப் பூசுவதன் மூலமும், வீட்டின் செல்வ நிலையை மேம்படுத்தலாம்.

வீட்டில் நாற்காலி அல்லது சோபாவை வடக்கு நோக்கி அமருமாறு தெற்கு பகுதியில் வைக்க வேண்டும். இதன் மூலமும் செல்வ வளம் அதிகரிக்கும்.

வீட்டின் முன் கோயில் அல்லது பெரிய கட்டடங்கள் கூடாது. நீங்கள் தங்கும் வீட்டின் முன் உயரமான கட்டடங்களோ அல்லது கோவிலோ இருந்தால், அவை வீட்டில் உள்ள செல்வ வளத்தை குறைக்கும். ஒருவேளை அந்த உயரமான கட்டடம் அல்லது கோவிலின் நிழல் வீட்டில் படாதவாறு இருந்தால், அந்த வீட்டில் குடியேறலாம். இல்லையெனில் அந்த வீட்டில் தங்குவதைத் தவிர்த்திடுங்கள்

வீட்டின் மையப் பகுதி வீட்டின் மையப் பகுதியில் எந்த ஒரு பொருளையும் வைக்காதீர்கள். எப்போதுமே வீட்டின் மையப்பகுதி ப்ரீயாக இருந்தால் தான் அந்த வீட்டில் செல்வம் கொட்டும்.


ஜன்னல் மற்றும் கதவு வீட்டில் உள்ள ஜன்னல் மற்றும் கதவு மிகவும் சுத்தமாக இருக்க வேண்டும். ஒருவேளை மிகவும் அழுக்குடன் இருந்தால், பின் வீட்டில் உள்ள செல்வம் பறந்து போகும்.

வீட்டில் மீன் தொட்டியை வடகிழக்கு பகுதியில் வைப்பதன் மூலம் வீட்டின் செல்ல வளத்தை அதிகரிக்கலாம்.

வீட்டின் சுவற்றில் தொங்கவிடப்பட்டிருக்கும் கடிகாரம் எப்போதும் ஓடிய நிலையில் இருக்க வேண்டும். ஒருவேளை கடிகாரம் ஓடாமல் அப்படியே இருந்தால், வீட்டின் வருமானமும் அதிகரிக்காமல் அப்படியே இருக்கும்.

குடும்பத் தலைவர் வீட்டின் வடகிழக்குப் பகுதியில் தங்குவதைத் தவிர்க்க வேண்டும்.

# வழிகாட்டல் என்பது வாழ்ந்து காட்டுதல்



அவர் யதார்த்தமானது, யதார்த் தமற்றது என்று கருதுப வற்றை வேறு பிரித்து அறிந்து கொள்வதற்கு உதவுவது அல்ல. நேர் முகம் காண்பவரது வாக் குப் பலத்தில் தங்கியுள்ளது. அவர் தனது திறமையை யும் அனுபவத்தையும் பயன்படுத்தி யதார்த்தமான தெரிவினை ஆலோசனை நாடி தெரிவு செய்வதற்கு அவரை வழிப்படுத்தும் செயற்பாடாகும். ஆனால் வாழ்ந்து காட்டுதல் என்பது சமூகத்தின் பொருத்தப்பாட்டுடன் முன் மாதிரியான நடந்து கொள்ளுதல், செய்து காட்டுதல், வாழ்ந்து காட்டுதல் எனலாம்.

இதனை விட நாங்கள் தமிழர்கள். எங்களிடம் இயல்பான சிறப்பியல்பு ஒன்று காணப்படுகின்றது. அதுதான் மரபைப் பின் பற்றுதல் அல்லது தனது தாய் தந்தையரைப் பின் பற்றுதல் அல்லது தனக்கு விருப்பமான ஆசிரியரைப் பின்பற்றுதல் அல்லது மூதாதையர்களைப் பின் பற்றுதல்,தனக்கு மேலான வர்களை, சமூகத்தில் காணப்படும் மதிப்பு மிக்க வர்களை, இப்படி அடுக்கிக்கொண்டுபோகலாம்.

அத்தோடு எமது கல்வித் திட்டமிடலில் கூட எமக்கு முன் வாழ்ந்த பெரிய வர்களின் வாழ்க்கை வரலாறுகளை பாடப்புத் தகங்களில் போட்டிருக்கி றார்கள். இதனைப் படித்த வர்கள் அவரவர் திறன் களுக்கேற்ப பின்பற்றுதல் சிறப்பிடம் பெறுகின்றது. சில இடங்களில் அது பிசகுவதைக் காண்கின் றோம். ஆனாலும் இந்தப் பின்பற்றலாலும் வழி காட்டுதல்களாலும் இன்றும் சமூகத்தில் சமூக நட்சத்தி ரங்கள் திகழ்கின்றன. அவர்களுடைய வாழ்க் கையை எடுத்துப் பார்த்தால் அவர்களது பெற்றோர்கள், நல்ல வழிகாட் டிகளாக வாழ்ந்திருக்கிறார்கள். அவர்களுக்குக் கிடைத்த ஆசிரியர்கள் சிறந்த வழிகாட் டிகளாக வாழ்ந்து காட்டி யிருக்கிறார்கள். அவர்களது சக பாடிகள் பரஸ்பரம் சிறந்த வழிகாட்டிகளாக வாழ்ந் திருக்கிறார்கள். அவர்களது சமூகத்தில் வாழ்ந்த பெரிய வர்கள் சிறந்த வழிகாட்டி களாக வாழ்ந்து காட்டியிருக் கிறார்கள். அவர்கள் வாசித்த சிறந்த நூல்கள் அவர்களுக்கு சிறப்பான உறுதுணையைக் கொடுத்திருக்கின்றது. இவற் றின் துணையுடன் இன்றும் சமூக நட்சத்திரங்களாகவும் சமூகத் தலைவர்களாகவும் திகழ்கின்றார்கள்.

பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு வழிகாட்டும் கண்கண்ட தெய்வங்கள். இவர்கள் தங்களது பிள்ளைகளை நாளாந்தம் வழிப்படுத்துபவர்கள். இவர்களின் வழிகாட்டலின் துணையில்தான் சமூகத்தின் நிலைத்திருப்பு தங்கியிருக்கிறது என்பதோடு குடும்ப நிர்வாக அலகு சிறப்பான நிர்வகிப்பின் மூலம்தான் அடுத்த சந்ததியி னருக்கும் அது கடத்தப் படுகின்றது. இது பிசகும் போதுதான் ஏனைய ஒவ்வொரு செயற்பாட்டிற்கும் குழப்பம் ஏற்படும். சில பெற்றோரின் வாழ்ந்து காட்டல் பிசகுகிறது.



அதனால்தான் இன்று சமூகத்தில் கொலை வெறி பிடித்து ரவுடிகள் அட்டகாசம், வீதிப்பறிக்கொள்ளை, பாலி யல் துஷ்பிரயோகம், பாலியல் வன்புணர்வு, மூப்பு, இளமை இல்லாத் தன்மை, தெய்வங்க ளாக மதிக்க வேண்டிய பெண்களை இம்சைப்படுத்து தல், போலியான வாழ்க்கை வாழுதல், பொய் சொல்லுதல் போன்ற விடயங்கள் மலிந்து கொண்டு செல்வதற்கு காரணமாகின்றன.

இங்கே குடும்பம் தனது குடும்ப நிர்வாகக் கட்டமைப்பு பிசகாமல் இருப்பதற்கு குடும்பத்தில் இருப்பவர்கள் ஒவ்வொருவரும் சிறப்பான வழிகாட்டிகளாக வாழ்ந்து காட்டவேண்டும். அப்படி வாழ்ந்து காட்டுகின்ற போது தான் சிறப்பான சமூகத்தை எதிர்பார்க்கமுடியும். சிறப்பான சமூகத்தை உருவாக்க முடியும்.

குடும்பத்தில் இருந்த பிள்ளை பிறப்பில் இருந்து ஐந்து வருடங்கள் தனது குடும்பத்தினருடன் இருந்து விட்டு அடுத்து யாரிடம் வருகின்றார்கள் என்றால் ஆசிரியர்களிடம். இங்கே தான் பிள்ளை கல்வியோடு ஒழுக்கத்தைக் கற்றுக்கொள் கின்றது. இங்கு ஏதாவது பிசகு ஏற்பட்டால் மனிதனது தலையெழுத்தே மாறிவிடும். அந்தளவுக்கு மிக முக்கிய மானதுதான் பாடசாலையும் ஆசிரியர்களும். இங்கே பிள்ளையானது ஒழுங்கு படுத்தப்பட்ட, திட்டமிடப்பட்ட நியமமுறையிலான கல்வி யைப் பெறுவதற்காக பாடசா லைக்கு வருகிறது. அந்த நியம முறைக் கல்வியை பாடசாலையில் பெறுகின்றது. சில வேளைகளில் துரதிர் ஷ்டங்களும் உண்டு. இதனை யாரும் மறுக்கமுடியாது.

பாடசாலைகளில் ஆசி ரியர்களின் வழிகாட்டல், வாழ்ந்து காட்டல்கள் மூலம் தாம் மாணவர்களை பல்க லைக்கழகங்களுக்கும் கல்வியியற் கல்லூரிகளுக் கும் ஏனைய உயர் கல்வி நிறுவனங்களுக்கும் அனு ப்பி வைக்கமுடிகின்றது. இங்கு கிட்டத்தட்ட நாடுபூராக வும் இரண்டு இலட்சம் மாணவர்கள் பரீட்சை எடுத் தால் அண்ணளவாக ஐம் பதாயிரம் மாணவர்கள் சித்தி எய்தத் தவறுகிறார்கள். பல்கலைக்கழகங்களுக்கு அண்ணளவாக இருபத்தை யாயிரம் பேர் வரை செல்கி றார்கள். ஏனைய கல்வி நிறுவனங்களுக்கும் அண் ணளவாக இருபத்தையா யிரம் பேர் செல்கிறார்கள். ஏனையவர்கள் மிகவும் சிரமப் படுகிறார்கள். இவர்க ளில் சிலர் பல்கலைக்கழகம் சென்றாலும் அல்லது செல்லாவிட்டாலும் ஆசிரியர் களின் வழிகாட்டல் சிறப்பாக அமையாதவிடத்தில் தான் தறிகெட்டவர்களாக மதிக்கப் பட வேண்டிய பல்கலைக் கழகங்களிலும் சரி, பாடசா லையிலும் சரி, கோஷ்டி மோதல்கள், போதைக்கு அடிபணிதல்,ஏனைய சமூகவிரோதச் செயல்களில் ஈடுபட்டு தமது வாழ்க்கையை சீரழித்துக் தொலைக்கிறார் கள். இங்கே சில ஆசிரியர்க ளின் வாழ்ந்து காட்டல் சிறப்பாக அமையவில்லை என்றுதான் சமூக ஆர்வலர் கள் ஆசிரியர்கள் மீது குற்றம் சுமத்துவதும் குறை கூறுவதுமாகக் காணப் படுகின்றது. இது சில இடங் களில் மறுப்பதற்கில்லை




என்றுதான் கூற வேண்டும்.

பெற்றோர் தமது பிள்ளை களுக்கு தமக்குப்பிடிக்காத சகபாடிகளுடன் பழக வேண் டாம் என்று வழிப்படுத்



துவார்கள். பிள்ளைகளது விருப்பம், விருப்பம் இன் மைகளை அறியாமல் தமது அதிகாரப் போக்கை பிள் ளைகள் மீது திணிப்பார்கள். ஆனால் தாங்கள் பிள் ளைகளுக்கு விருப்பமில் லாத நபர்களுடன் அவர்க ளது நட்பும் செயற்கையும் காணப்படும் இங்கேதான் இப்படியான விடயங்களில் தான் குடும்பத்தில் வழி காட்டலும் வாழ்ந்து காட்டலும் பிசகுகிறது.

இதேபோலத்தான் ஆசி ரியர்களும் மாணவர்களுக்கு வழிகாட்டுபவர்கள்.இவர்கள் பல விடயங்களை வழிகாட் டுபவர்கள்.அவற்றில் ஒரு விடயத்தை நோக்கின் இன்று மாணவர்களிடம் வாசிப்புப் பழக்கமோ அல்லது ஆராய் ந்து தேடிக்கற்கும் பழக்கமோ மிக அரிது. அதனால் வாசி ப்பை வழக்கப்படுத்திக் கொள்ளுங்கள், ஆராய்ந்து தேடிக் கற்றுக் கொள்ளுங் கள். தொடர் நாடக த்திற்கு அடிமையாகாதீர்கள் என்று காலை நற்சிந்தனையிலும் வகுப்புகளிலும் கூறுகிறார் கள்.



ஆனால் ஆசிரியர்க ளில் பலர் வாசிப்பு பழக் கமோ, தேடிக் கற்கிறதே இல்லை. சாதாரணமாக நாளாந்தப் பத்திரிகையில் ஒன்றை யேனும் வாசிக் காதவர்கள் காணப்படுகின் றார்கள்.இது வாழ்ந்து காட்டல் அல்ல.

**நீர் உயர வரப்புயரும்**
**வரப்புயர நெல்லுயரும்**
**நெல்லுயர குடி உயரும்**
**குடியுயர கோனுயரும்**

என்பது போல ஆசிரியர் தேடி வாசித்துக்கற்று அதன்படி ஒழுகினால் அவ்க ளிடம் கற்கும் மாணவர்கள் நிச்சயம் உயர்வடைவர்.

இதேபோல சிலர் ஆலோ சனை வழிகாட்டல் சேவையை வழங்குபவர்கள் தங்கள் வகுப்புகளில் எண்ணக் கருக்களை கற்பிக்கின்ற போது மனிதம்,உளவியல் என்றெல்லாம் கற்பிப்பார் கள். ஆனால் நிய வாழ் வில் தாங்கள் அவ்வாறு நடந்து கொள்கிறார்களா என்றால் அது கேள்விக் குறி. இதனைத் தான் ஊருக்குபதேசம் உனக் கில்லை என்பது போல ஆலோசனை வழிகாட்டல் சேவை வழங்கும் வைத் தியராக இருப்பார். அவர் தன்னிடம் குடும்பப் பிரச் சினையில் விவாகரத்துக் கேட்கப்போகிறோம் என்று வருபவர்களை தான் கற்ற கல்வியின் மூலமும் வித் தையின் மூலமும் அவர் களை இணைந்து வாழ வழி காட்டுவார்.ஆனால் தனது குடும்பத்தில் பிரச் சினை ஏற்பட்டால் அதற்கு தீர்வு காணமுடியாதவராக உடனடியாக விவாகரத் துக்குச் சென்று பெற்றும் விடுவார். இது வழிகாட்டல் அல்ல வாழ்ந்து காட்டல் அல்ல.

எனவே தான் வழிகாட் டல் சேவையானது இன்று எமது தமிழ் சமூகத்திற்கு மிக அவசியமான ஒன்று. இன்று ஆணிவேர் அற்ற மரம்போல எமது இனம் அங்கலாய் க்கின்றது. நல்ல தலைவன் இல்லாத குழுவொன்று திக்குத் திசை தெரியாமல் தடுமாறுவது போல தடு மாறுகிறது. போலியான முகத்திரைக ளோடு பல மனிதர்கள் நடமாடித் திரி கிறார்கள்.பல குடும் பத்தவர்கள் போலியான பகட்டு வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக் கிறார்கள். இந்தப்போலி நடிப்புக் களையும் போலித் திரைகளையும் கிழித் தெறி ந்து விட்டு உண்மையாக வாழ்வோம். சமூ கத்தில் வாழும் ஒவ்வொரு மனிதரும் அவரவர் பாத்திரங்களை உண்மையாக ஏற்று ஸ்ரனி சிலோ வெஸ்கியின் யதார்த்த நாடகத்தில் வரும் பாத் திரங்களாக உண்மை யாக வாழுகின்ற போது மனித னிடம் காணப் படும் இயல் பூக்கத்தின் வழியாக வளர்ந்து வரும் இளம் சமூகத்தினர் பின்ப ற்றி வாழ்வார்கள்.இது வார்த்தைகளில் வழிகாட்டு வதை விட உண்மையாக வாழ்ந்து காட்டுகின்றபோது தான் சிறப்பான வழி காட்டலாகும்.

எனவே நாம் ஒவ்வொருவரும் நாமாக வாழ்ந்து காட்டுவோம். சமூகம் தானாக மலர்ந்து பிரகாசமாக வளரும் என்பது திண்ணம்.

**பரமநாதன்-விஜிந்தன்**
**ஆசிரியர்**
**யா/மானிப்பாய் சென் ஆன்ஸ் றோ.க.த.பா.**

## போர்க்குற்ற விசா...

நேற்றைய தினம் முள்ளிவாய்காலில் நடைபெற்ற நினைவு நிகழ்வில் அஞ்சலி உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஆண், பெண், குழந்தை, வயோதிபர் வலுவிழந்தோர் என்ற பாகுபாடின்றி அவர்களின் உயிர்களைப் பறித்தெடுத்த 2009-ம் ஆண்டின் மே மாத இறுதி யுத்த சோக நிகழ்வுகளையே இன்று நினைவு கூருகின்றோம். எமது மதிப்பிற்குரிய ஆயர் இராயப்பு ஜோசப் அவர்கள் சாட்சியத்துடன் நூற்றிநாற்பதாயிரத்திற்கு மேல் எம்மக்கள் அத்தருணத்தில் கொல்லப்பட்டதாகக் கூறினும் இதுவரை யார் யார் கொல்லப்பட்டார்கள் அவர்கள் விபரங்கள் என்ன அவர்கள் எப்படி இறந்தார்கள் என்ற எந்த விபரங்களையும் முறையாக அறிந்து கொள்ள உத்தியோக ரீதியாக நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

சாட்சிகளில்லா யுத்தம் முடிந்து ஏழு வருடங்கள் ஆகிவிட்டன. பாதிப்புற்ற மக்களின் மனச் சுமைகளை நீக்க இதுவரை என்ன செய்துள்ளோம்? அவர்களின் பாதிப்புக்களை இனங்காண என்ன செய்திருக்கின்றோம்? தன்னம்பிக்கை இழந்து நடைப் பிணங்களாக வலம் வரும் எம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எம்மால் இதுவரை செய்ததாகச் சொல்லும் அளவுக்கு எதுவுமிருக்கின்றதா என்றால் எம்மால் திடமாக ஐயமற்ற பதிலைக் கூற முடியாமல் இருக்கின்றது.

மக்களின் கூட்டு ஏக்கத்தைப் பிரதிபலிக்கும் வண்ணமாகவே நாங்கள் இன்று இங்கு கூடியுள்ளோம். ஒருங்கு சேர்ந்து சோகத்தை வெளிப்படுத்துவது என்பது எமது பாரம்பரியப் பழக்கமாகும். அது சமூக கலாசாரப் பின்னணி கொண்டது. ஆனால் எமது சோகத்தைக் கூட்டாக வெளிக்காட்டுவதைக் கூட அண்மைக்காலம் வரையில் தடை செய்திருந்தார்கள். அழுவதென்பது மனதின் சுமையைக் குறைக்கும் ஒரு கைங்கரியம்.

அதற்குத்தடை செய்தவர்கள் மனித பண்பை இழந்தவர்கள். இன்று பலத்த கெடுபிடிகள் அடங்கி விட்டன. நாமும் சேர்ந்து தேர்ந்தெடுத்த அரசாங்கம் இதிலாவது எமது மனோநிலையைப் புரிந்து நடப்பது எமக்கு மனதுக்கு இதமாக இருக்கின்றது. எனினும் போர்க்குற்ற விசாரணை சம்பந்தமாக மந்த கதியே அவதானிக்கப்படுகின்றது. 2015-ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 23-ம் திகதியன்று ஐக்கிய நாடுகள் மனித உரிமைகளுக்கான உயரஸ்தானிகர் மேன்மைதங்கிய இளவரசர் சையிட் அல் குசேயின் அவர்களுக்கு ஒரு கடிதம் அனுப்பினேன்.

அதில் பொறுப்புக்கூறல், உண்மை, நீதி, நல்லிணக்கம் என்பவற்றை நிலைநாட்ட வலிமையான நடவடிக்கைகளைச் சர்வதேச சமூகம் எடுக்கும் என்று போரினால் பாதிக்கப்பட்ட எம்மக்கள் எதிர் பார்ப்பதாகக் கூறினேன். அதன் பின்னர் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையால் ஒரு ஒற்றுமைப் பிரேரணை கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டது. அதைப் பற்றி 30.09.2015ல் நான் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் இளவரசர் சையிட் அவர்களுக்கு எழுதிய கடிதத்தில் பிரேரணையை வரவேற்று அதே நேரம் எமது பல கரிசனைகளையும் வெளியிட்டிருந்தேன்.

முக்கியமாக போர்க் குற்றங்கள் எமது சட்டத்தின் கீழ் ஏற்றுக் கொள்ளப்பட்ட குற்றங்கள் அல்லாததால் எவ்வாறு அவற்றை எமது நாட்டுச் சட்டத்துடன் உள்ளடக்கப் போகின்றீர்கள் என்றும் உள்நாட்டு வழக்கு நடத்துநர்கள் ஒரு போதும் பாதிக்கப்பட்ட எம் மக்களுக்கு நீதி பெறச் செய்யும் வண்ணம் நடந்து கொள்ளமாட்டார்கள் எனவும் சர்வதேச வழக்கு நடத்துநர் ஒருவரை நியமிக்குமாறும் மேலும் உள்நாட்டு நீதிபதிகளை நியமித்தால் நீதி கிடைக்காது என்றும் சர்வதேச நீதிபதிகளுக்கு மேற்படி நீதிபதிகள் குழாமில் பொறுத்த தீர்மானம் எடுக்கும் பொறுப்பு வழங்கப்பட வேண்டும் என்றும் கூறி எழுதியிருந்தேன்.

பிரேரணையை வரவேற்று அதே நேரத்தில் அதனை நடைமுறைப்படுத்துவதில் சர்வதேச சமூகம் மிக்க அவதானத்துடன் பாதிக்கப்பட்ட எம்மக்களின் நலன்கருதி கண்காணிப்பு நடவடிக்கைகளில் இறங்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டிருந்தேன். அத்துடன் அவரை வடமாகாணத்திற்கு வரும்படி அழைத்ததன் பயனாக அவர் வந்து எம்மைச் சந்தித்து சென்றார். தற்போது அப்பிரேரணை கொண்டு வந்து 8 மாதங்கள் ஆகின்றன. போர்க்குற்ற விசாரணையை நடத்த எந்த ஆக்கபூர்வமான நடவடிக்கையையும் அரசாங்கம் எடுக்கவில்லை.

இது இப்படி இருக்க ஊடகவியலாளர் குஷால் பெரேராவின் புத்தக வெளியீட்டு நிகழ்வுக்கு நான் சென்ற வாரம் கொழும்பு சென்றிருந்த போது என்னிடம் ஒரு கேள்வி கேட்கப்பட்டது. 90 சதவீதம் சிங்கள சகோதரர்களைக் கொண்ட அந்தக் கூட்டத்தில் அவர்கள் அனைவரதும் கேள்வியாகவே அது அமைந்திருந்தது. தேசிய நல்லிணக்கத்தின் பொருட்டு போர்க்குற்ற விசாரணையைத் தியாகம் செய்ய வேண்டும் என்ற பலரின் கருத்துக்கு உங்கள் பதில் என்ன? என்று கேட்டார்கள். இதனை எம் தமிழ் மக்களும் கேட்டிருப்பதாக அறிவித்தார்கள்.

அதற்குப் பதில் அளிக்கும் போது நான் கூறினேன் "போர்க்குற்ற விசாரணை வேறு நல்லிணக்கம் வேறு. நடந்ததற்காகவே போர்க்குற்ற விசாரணை நடைபெறுகின்றது. இனி நாங்கள் எவ்வாறு நடந்து கொள்ள வேணடும் என்பது பற்றியதே நல்லிணக்க ஆராய்வு. இவற்றை வைத்துப் பண்டமாற்றுச் செய்வது போரில் உற்றார் உறவினர்களை இழந்த மக்களுக்குத் துரோகம் செய்வதாக அமையும். வேண்டுமென்றே செய்யப்பட்ட வெறித்தனமான செயல்களுக்குப் பச்சைக் கொடி காட்டினால் மீண்டும் அத்தகைய நடவடிக்கைகள் நடந்தேறும்.

எமது அரசாங்கம் எம்மைக் காப்பாற்றும் நாம் நினைத்தவாறு எதனையும் செய்யலாம் என்ற மனோநிலை இராணுவத்தாரிடம் வந்துவிடும். இதனால் நல்லிணக்கம் ஒருபோதும் ஏற்படாது. நல்லிணக்கம் ஏற்பட வேண்டுமானால் பாதிக்கப்பட்ட எம்மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்று கூறினேன். ஆகவே எப்படியாவது போர்க்குற்ற விசாரணையைத் தட்டிக் கழிக்கவே அரசாங்கம் பார்க்கின்றது.

சிங்கள மக்கள் பார்க்கின்றனர். ஏன் எம்முள் சிலரும் எண்ணுகின்றனர். பிழைகள் செய்தவரைத் தண்டிக்காது தப்பவைக்கவே அரசாங்கம் தன்னைத் தயார்படுத்தி வருகின்றது. இதற்கு மாறாக யாவரும் நீதிக்காகப் போராட முன்வரவேண்டும். நியாயமான சிங்களத் தலைமைகளும் இதில் எமக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். சர்வதேசம் இதில் மிகவும் கெட்டியாக இருக்க வேண்டும். ஆனால் அரசியல் காரணங்களுக்காக சில பல நாடுகள் கூட போர்க்குற்றங்களை மறந்து விடுங்கள். நாங்கள் சமஷ்டி எடுத்துத் தருகின்றோம் என்று கூற முன்வந்துள்ளார்கள்.

போரின் கடைசிக் கட்டத்தில் நடந்த குற்றங்களின் பாரதூரமான தன்மையை மனதிற்கு எடுக்காமல் இவர்கள் கதைக்கின்றார்கள். பாதிக்கப்பட்டுள்ளவர்களின் பாதிப்பையும பரிதவிப்பையும் இவர்கள் அறிந்து கொண்டிருந்தார்கள் என்றால் இவ்வாறான பண்டமாற்று பற்றிப் பேச முன்வந்திருக்க மாட்டார்கள். இறந்த எம்மக்களின் ஆத்மா சாந்தி அடைய போர்க்குற்ற விசாரணை நடந்தே ஆக வேண்டும்.

கலிங்கத்துப் போரின் பின்னர் போரில் இறந்தவர்களையும் காயமடைந்தவர்களையும் கைம்பெண்களையும் கைவிடப்பட்ட குழந்தைகளையும் கண்டு மனம் வெதும்பினான் அசோகச் சக்கரவர்த்தி. அதனால் தான் புத்தரின் போதனைகளை நாடிச் சரணடைந்தான். எமது நாட்டின் தலைவர்கள் புத்த பெருமானின் பெயரால் நீதியை நிலைநாட்ட பாதிக்கப்பட்ட மக்களின் குறைதீர்க்க இறந்த அப்பாவிகளின் ஆத்மா சாந்தியடைய போர்க்குற்ற விசாரணையைத் தாமதமின்றி சர்வதேச உதவியுடன் கூடி நடத்த முன்வர வேண்டும்.

எம்மைக் காண வாரந்தோறும் குடும்பத்தவரைப் பறிகொடுத்தவர்கள், காணாமல் போனவர்களின் உற்றார் உறவினர், போரினால் பாதிக்கப்பட்டவர்கள், காயமடைந்தவர்கள்,கைகால்களை இழந்தவர்கள், கண்களை இழந்தவர்கள், அன்புப் பெற்றோரை இழந்த அனாதைக் குழந்தைகள்,பெண் தலைமைத்துவ குடும்பத் தலைவிகள் எனப் பலர் வருகின்றார்கள்.

அவர்கள் யாவரும் நீதியைக் கேட்டு நிற்கின்றார்கள். இன்றும் இங்கு நாம் யாவரும் 2009-ம் ஆண்டு மே மாதம் 18-ந் திகதி இங்கு நடந்த போர்க்குற்றங்களுக்கு நீதி கேட்டு நிற்கின்றோம். நீதியை வழங்க எமது நல்லாட்சி அரசாங்கமும் சர்வதேச அரசாங்கங்களும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையும் முன்வரவேண்டும். இந்தத் தினத்தில் 2009-ம் ஆண்டு இங்கு அநியாயமாக மரணத்தை அணைத்துக் கொண்ட அத்தனை பேர்களினதும் ஆத்மாக்கள் சாந்தி அடைய நாம் யாவரும் பிரார்த்திப்போமாக!

அவர்களின் உற்றார், உறவினர்களுக்கு எமது உளமார்ந்த வருத்தங்களையும் அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம். உங்கள் இழப்பு அளவிடற்கரியது. உங்களின் மனச்சுமைகளைத் தாங்கும் சக்தியை உங்களுக்கு இறைவன் தருவானாக! சோகத்துடன் உங்களிடம் இருந்து விடை பெறுகின்றேன் என தெரிவித்தார். (செ-4)

## கேகாலையில் தொட...

இரவு புலத்கோபிட்டிய பிரதேசத்திலும் இந்த அனர்த்தங்கள் ஏற்பட்டுள்ளன.

அரநாயக்க பிரதேசத்தில் இடம்பெற்ற நிலச்சரிவு சம்பவத்தின் பின்னர் பாதிப்புக்குள்ளான மூன்று கிராமங்களை சேர்ந்த சுமார 150 பேர் காணாமல் போயுள்ளதாகக் கூறப்படுகின்றது.

காணாமல் போனதாக கூறப்பட்டவர்களில் இதுவரை 14 பேர் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளதாக இடர் முகாமைத்துவ மையம் கூறியுள்ளது.

68 ஆண்களும், 57 பெண்களும் என 125 பேர் காணாமல் போயுள்ளதாக அவர்களின் குடும்ப உறவுகளின் தகவல்கள் மூலம் அறிய முடிவதாக ஊடகங்களிடம் பேசிய அரநாயக்க பிரதேச செயலாளரான இஸற் ஏ.எம். பைஷால் கூறினார்.

66 வீடுகள் முற்றாக சேதமடைந்துள்ளதாகவும், ஆயிரத்து 500க்கும் மேற்பட்டோர் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

புலத்கோபிட்டிய பிரதேசத்தில் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி உயிழந்துள்ளதாக கூறப்படும் 16 பேரில் இதுவரை 5 பேரின் சடலங்கள் மட்டுமே மீட்கப்பட்டுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார்.

சப்ரகமுவ மாகாண சபை உறுப்பினரான அ.பாஸ்கரன், நிலச்சரிவு அனர்த்தம் பற்றி அந்த பிரதேச செயலகத்தினாலோ அல்லது தோட்ட நிர்வாகத்தினாலோ முன் எச்சரிக்கை அறிவிப்பு விடுக்கப்பட்டிருக்கவில்லை என குற்றஞ்சாட்டியுள்ளார்.

அரநாயக்க பிரதேசத்திற்கு நேற்று மாலை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேரில் விஜயம் செய்து பாதிக்கப்பட்ட இடங்களையும், அழிவுகளையும் பார்வையிட்டார்.

இந்த நிலையில், வெள்ளம் மற்றும் நிலச்சரிவு அனர்த்தங்களினால் பாதிப்புக்குள்ளானவர்களின் எண்ணிக்கை 3 இலட்சத்திற்கும் மேலாக அதிகரித்துள்ளது.

இடர் முகாமைத்துவ மையத்தினால் இறுதியாக வெளியிடப்பட்ட தகவல்களின் படி 83ஆயிரம் குடும்பங்களை சேர்ந்த 3 இலட்சத்து 52 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இக் குடும்பங்களில் 49ஆயிரம் குடும்பங்களை சேர்ந்த 2 இலட்சத்து 24ஆயிரம் பேர் தமது வாழ்விடங்களை விட்டு வெளியேறி 375 நலன்புரி மையங்கள் உட்பட பாதுகாப்பான இடங்களில் தங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-12)

## புலிகளுக்கு எதி...

வெற்றியின் ஏழாம் ஆண்டு நிறைவை முன்னிட்டு அவர் நேற்று விடுத்துள்ள அறிக்கையிலேயே இதனைத் தெரிவித்துள்ளார்.

மகிந்த ராஜபக்ஷ தனது அறிக்கையில் தொடர்ந்தும் குறிப்பிட்டுள்ளதாவது,

உலகின் முன்னணி பயங்கரவாத இயக்கமாக அமெரிக்க உளவு அமைப்புகள் பட்டியலிட்ட விடுதலைப் புலிகள் அமைப்புடன் போர் புரிந்து எமது இராணுவம் கீர்த்தி மிக்க வெற்றியொன்றைப் பெற்றுக் கொண்டது.

இந்த வெற்றி தமிழ் மக்களுக்கு எதிரான வெற்றி அல்ல. விடுதலைப் புலிகளுக்கு எதிராக மட்டுமே யுத்தம் மேற்கொள்ளப்பட்டது.

அதேநேரம் யுத்த வெற்றியின் பின்னர் நாங்கள் விடுதலைப் புலிகளையும் பழிவாங்கும் மனோபாவத்தைக் கொண்டிருக்கவில்லை.

இராணுவத்தினரிடம் சரணடைந்த 11 ஆயிரத்துக்கும் அதிகமான விடுதலைப் புலி உறுப்பினர்களை புனர்வாழ்வுக்குட்படுத்தி விடுதலை செய்துள்ளோம்.

எஞ்சிய சுமார் 300 பேர் வரையான முக்கிய விடுதலைப் புலி உறுப்பினர்களை வழக்குத் தாக்கல் செய்யும் நோக்கில் தடுத்து வைத்திருந்தோம். ஆனால் இந்த அரசாங்கம் அவர்களை விடுதலை செய்து கொண்டிருக்கின்றது. அதேநேரம் இராணுவத்தினரை பல்வேறு குற்றச்சாட்டுகளின் கீழ் கைது செய்து தடுத்து வைத்துள்ளது.

அத்துடன் யுத்தத்தில் வெற்றி பெற்றது தவறான ஒரு விடயம் என்பதைப் போன்ற ஒரு கருத்தை இராணுவத்தினர் மத்தியில் ஏற்படுத்த அரசாங்கம் முயற்சித்துக் கொண்டிருக்கின்றது.

விடுதலைப் புலிகளுடனான யுத்த வெற்றியை முழு உலகும் வியந்து பாராட்டியது. அதனைக் கௌரவிக்கும் வகையிலேயே நாங்கள் வருடாந்தம் வெற்றிக் கொண்டாட்டங்களை நடத்தி வந்தோம்.

ஆனால் இந்த அரசாங்கம் நல்லிணக்கத்துக்குப் பங்கம் ஏற்பட்டு விடும் என்று கூறி கலாசார நிகழ்வொன்றின் ஊடாக யுத்த வெற்றியை கொண்டாட ஏற்பாடு செய்துள்ளது.

நாங்கள் விடுதலைப் புலிகளுடன் யுத்தம் செய்த காலத்தில் மேற்கத்தேய நாடுகள் அவர்களைக் காப்பாற்ற நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தார்கள். இன்று அவர்கள் வகுத்துக் கொடுக்கும் பாதையில் இந்த அரசாங்கம் பயணித்துக் கொண்டிருக்கின்றது.

அதன் காரணமாகவே வடக்கில் சமஷ்டியை வலியுறுத்தும் அரசியல்வாதிகள் இராணுவ முகாம்களுக்குள் நுழைந்து இராணுவத்தினரைப் பரிகசிக்கும் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளனர்.

அத்துடன் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இருந்து இராணுவத்தினரை வாபஸ் பெறும் முயற்சிகளும் மேற்கொள்ளப்படுகின்றன. மேலும் இராணுவத்தினரை யுத்தக் குற்றவாளிகளாக்கும் வகையிலான செயற்பாடுகளிலும் இந்த அரசாங்கம் ஈடுபட்டுள்ளது.

இவற்றை உடனடியாக நிறுத்தி, தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருக்கும் இராணுவத்தினரை விடுதலை செய்ய இந்த அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

அவர்களுக்கு எதிராக போலியான குற்றச்சாட்டுகளை சுமத்துவதை கைவிட வேண்டும் என்றும் மகிந்த ராஜபக்ஷ தனது அறிக்கையில் தொடர்ந்தும் வலியுறுத்தியுள்ளார். (செ-12)

## வித்தியானந்தனின் நினைவு பேருரை இன்று

(யாழ்ப்பாணம்)

பேராசிரியர் சு.வித்தியானந்தனின் நினைவுப் பேருரை இன்று 19ஆம் திகதி வியாழக்கிழமை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறும்.

பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும் இந்நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் தமிழ்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா, புலமைச் சிரத்தைக்கு உட்படாத தமிழ்க் கவிதைப் பாரம்பரியம். தனிப்பாடல் திரட்டினை முன்னிறுத்திய நோக்கு என்ற பொருளில் நினைவுப்பேருரை நிகழ்த்தவுள்ளார். (ந)

## மின்சாரம் தாக்கி இளைஞன் காயம்

(தும்பளை)

தொலைக்காட்சி பார்ப்பதற்காக வீட்டிலுள்ள கேபிளினை திருத்தம் செய்த வேளை மின்சாரம் தாக்கியதில் இளைஞன் ஒருவர் படுகாயம் அடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்

இச் சம்பவம் நேற்று பிற்பகல் 3 மணியளவில் அல்வாய் கிழக்கு பகுதியில் இடம் பெற்றுள்ளது.

இதில் அதே இடத்தினைச் சேர்ந்த இராசநாயகம் அஜந்தன் (வயது 20) என்ற இளைஞனே படுகாயமடைந்தவராவார். (செ-19)

## தமிழர் தாயகமெங்கும்...

முள்ளிவாய்க்கால் படுகொலை நினைவு நிகழ்வுகள் நேற்றைய தினம் தமிழர் தாயகம் எங்கும் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது. இதில் வடக்கு மாகாண சபையினால் முள்ளிவாய்க்காலில் முன்னெடுக்கப்பட்ட நிகழ்வு உணர்வுபூர்வமாக நடைபெற்றதோடு, உயிரிழந்தவர்களது உறவுகள் முள்ளிவாய்க்கால் மண்ணில் புரண்டு கதறி யழுதனர்.

இலங்கை இராணுவத்தால் 2009 ஆம் ஆண்டு மே 18ஆம் திகதி இறுதிக்கட்ட போரின போது பல்லாயிரக்கணக்கான பொது மக்கள் போராளிகள் என்போர் படுகொலை செய்யப்பட்டிருந்தனர். இந்த கொடூரம் நடைபெற்று நேற்றுடன் ஏழு ஆண்டுகள் நிறைவுற்றுள்ள நிலையில், அதற்கான நீதி இன்னமும் கிடைக்காமலே உள்ளது.

இந்த நிலையில் நேற்றைய தினம் முள்ளிவாய்க்கால் நெடுந்துயர் நினைவு நிகழ்வுகள் தமிழர் தாயகமான வடக்கு கிழக்கிலும், புலம்பெயர் நாடுகளிலும் கடந்த ஆண்டுகளிலும் பார்க்க எழுச்சியுடன் அனுஷ்டிக்கப்பட்டுள்ளது. வடக்கு மாகாண சபை, தமிழ்த் தேசிய கூட்டமைப்பு, தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி,

யாழ்.பல்கலைக்கழகம், மன்னார் பொது அமைப்புக்களின் ஒன்றியம் ஆகியவற்றால் அனுஷ்டிக்கப்பட்ட நினைவு நிகழ்வுகளும், புலத்தில் லண்டன், கனடா, பிரான்ஸ், ஜேர்மன், இந்தியா ஆகிய நாடுகளில் அனுஷ்டிக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் நிகழ்வுகள் ஒட்டுமொத்த தமிழினத்தின் கவனத்தையும் ஈர்த்துள்ளன.

வடக்கு மாகாண சபையினால் ஏற்பாடு செய்யப்பட்ட நினைவு நிகழ்வு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனின் பொது சுடர் ஏற்றலுடன் ஆரம்பமாகியது. பின்னர் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பொது செயலாளர் மாவை.சேனாதிராஜா மலர் அஞ்சலி செலுத்தினார். இதனை தொடர்ந்து பாராளுமன்ற உறுப்பினர்கள், வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள்,

பொதுமக்கள், மதத்தலைவர்கள், பொது அமைப்பினர் ஆகியோர் அஞ்சலி செலுத்தினார்கள். இந்த நினைவஞ்சலியின் போது அங்கு வருகை தந்திருந்த உயிரிழந்தவர்களின் உறவுகள், தமது உறவுகள் இங்கு தான் புதைக்கப்பட்டதாக கூறி அந்த முள்ளிவாய்க்கால் மண்ணில் புரண்டு அழுதமை அனைவரது கண்களையும் கலங்க வைத்தது.

எனது மகள், எனது மகன், எனது கணவன், எனது அம்மா இங்கு தான் புதைக்கப்பட்டார்கள், நாங்கள் இங்கேயே இருந்துவிடுவோம் வேறு எங்கும் போக வேண்டாம் என கதறியழுத போது வெளிநாட்டில் இருந்து வந்த ஊடகவியலாளர்களும் அவர்களது கதறலை கண்டு கண் கலங்கியதை காண முடிந்தது. நீதியே தொலைந்து விட்டதா? என்ற அவர்களது எல்லாம் தொலைத்த விரக்தி கண்ணீர் சிந்திய அவர்களது முகங்களில் தெரிந்தது.

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் பிற்பகல் நான்கு மணிக்கு முள்ளிவாய்க்காலில் முள்ளிவாய்க்கால் படுகொலை அஞ்சலி நிகழ்வுகள் நடைபெற்றன. இங்கு நடைபெற்றது இனப்படுகொலையே என அந்த நினைவு நிகழ்வின் போது வலியுறுத்தப்பட்டது. இந்த அஞ்சலி நிகழ்வில் பிரதான சுடரை கட்சியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஏற்றி வைத்தார்.

பின்னர் உறவுகளை பறிகொடுத்த பொது மக்கள் தமது உறவுகள் நினைவாக சுடர்களை ஏற்றி அஞ்சலி செய்தனர். இதன் போதும், தமது உறவுகளை நினைத்து கதறியழுதார்கள். பின்னர் அஞ்சலி உரைகள் நடைபெற்றன. அஞ்சலி நிகழ்வுகள் முடிவுற்ற போதிலும், அந்த மண்ணில் இருந்து கடலை நோக்கி வெறித்து பார்த்த வண்ணம் சிலர் நேற்று முன்னிரவு வரை கடற்கரையில் அமர்ந்து கொண்டிருந்தார்கள்.

இதேவேளை யாழ்.பல்கலையில் நேற்று முற்பகல் பத்து மணியளவில் நடைபெற்ற நிகழ்வில் தமிழர் தாயகமான வடக்கு கிழக்கு இலங்கை வரைபடத்தில் தனியாக அடையாளப் படுத்தப்பட்டு, இன அழிப்பு நாள் என சுட்டிக் காட்டப்பட்டு நினைவு நிகழ்வுகள் நடைபெற்றன. இந்த நிகழ்வுகளின் போது ஆயிரக்கணக்கான மாணவர்கள் தமது சகோதரர்கள், பெற்றோர்கள் நினைவாக தீபங்களை ஏந்தியிருந்தனர். பின்னர் மாணவ தலைவர்களின் அஞ்சலி உரைகளும் நடைபெற்றன.

மன்னாரில், மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றிய தலைவர் வி.எஸ். சிவகரன் தலைமையில் மன்னார் நகர சபை மண்டபத்தில் காலை 11 மணியளவில் நினைவேந்தல் நிகழ்வு இடம்பெற்றது. இதன்போது யுத்தத்தில் படுகொலை செய்யப்பட்டவர்களுக்கான ஆத்ம சாந்திப் பிரார்த்தனை, மலர் அஞ்சலி செலுத்துதல் மற்றும் தீபமேற்றுதல் போன்ற நிகழ்வுகள் இடம்பெற்றன.

முதலில் இறுதி யுத்தத்தின் போது தனது குடும்ப உறவுகள் அனைவரையும் இழந்த சந்திரசேகரன் பிருந்தா என்ற சிறுமி சுடர் ஏற்றி அஞ்சலி நிகழ்வை ஆரம்பித்து வைத்தார். அதனைத்தொடர்ந்து இறுதி யுத்தத்தில் தனது கணவனை இழந்த கேதீஸ்வரன் பத்மினி என்ற பெண் நினைவிடத்துக்கு மலர் மாலை அணிவித்தார். கலந்து கொண்ட அனைவரும் தீபம் ஏற்றி அஞ்சலி செலுத்தியதோடு, மலர் அஞ்சலியும் செலுத்தினர். இதன் போது தமது உறவுகளை இழந்த உறவினர்கள் கண்ணீர் மல்க அஞ்சலி செலுத்தினர். பின்னர் சர்வ மதத்தலைவர்களினால் அஞ்சலி உரைகள் நிகழ்த்தப்பட்டன.

அதேபோல் கீரிமலையில் ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் ரி. துவாரகேஸ்வரனின் ஏற்பாட்டில் உயிரிழந்தவர்கள் நினைவாக பிதிர்க்கடன் செலுத்தும் நிகழ்வும் நடைபெற்றது. இதன் போது உயிரிழந்த உறவுகள் நினைவாக விசேட பூஜைகள் நடைபெற்று, கீரிமலை கடலில் ஆத்ம சாந்தி பிரார்த்தனையும் நடைபெற்றது. இந்த பூசை வழிபாடுகளிலும் பெருமளவில் மக்கள் கலந்து கொண்டு தமது உறவுகள் நினைவாக பிதிர்க்கடன்களை நிறைவேற்றினர்.

இவற்றை விட மட்டக்களப்பு வாகரையிலும், கிளிநொச்சி வட்டக்கச்சியிலும், திருகோணமலையிலும் நினைவு நிகழ்வுகள் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு, தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி ஆகியவற்றின் ஏற்பாடுகளில் நினைவஞ்சலி நிகழ்வுகள் நடைபெற்றன. இந்த நினைவு நிகழ்வுகளில் பெரிதான குழப்பங்கள் ஏதும் ஏற்படாத போதிலும்,

அனைத்து நினைவஞ்சலி நிகழ்வுகளும் புலனாய்வு பிரிவினரின் விசேட கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட்டு இருந்தது. விசேடமாக முல்லைத்தீவு முள்ளிவாய்க்கால் பகுதியில் சீருடை அணிந்த இராணுவத்தின் ரோந்து பணிகள் வழமைக்கு மாறாக இடம்பெற்றதை காண முடிந்தது. இதற்கு அரசியல் தலைவர்கள் கடும் கண்டனத்தையும் நினைவு நிகழ்வின் போது வெளிப்படுத்தி இருந்தனர்.

நேற்று தாயகத்திலும், புலம்பெயர் நாடுகளிலும் நடைபெற்ற நினைவு நிகழ்வுகளில் முள்ளிவாய்க்கால் படுகொலைக்கு நீதி வேண்டும், சர்வதேச போர்க்குற்ற விசாரணை நடத்தப்பட வேண்டும். யுத்தத்தில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு இழப்பீடு வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைகளை ஒருமித்து வெளிப்படுத்தியிருந்ததனை அவதானிக்க முடிந்தது.

முள்ளிவாய்க்கால் அழிவை நினைத்து வாடிக்கொண்டு இருக்காமல், தமிழ் மக்கள் அனைவரும் தமக்கான நீதியை பெற்றுக் கொள்ள அடுத்த கட்டத்தை நோக்கி நகர வேண்டும் எனவும், அந்த நகர்வு இராஜதந்திர ரீதியாக, ஜனநாயக ரீதியாக அமைந்தால் நிச்சயம் தமிழினம் மீண்டெழும் என்ற கோசம் அனைத்து நினைவு கூரல்களிலும் முன் வைக்கப்பட்டது. (செ-4,9,15,281)

## மரபணு பரிசோதனை...

நீதிமன்றில் சமர்ப்பித்தார்.

மேலும் குறித்த வழக்கை விசாரித்த நீதிபதி சந்தேக நபர்களின் விளக்கமறியலை எதிர வரும் ஜுன் முதலாம் திகதிக்கு விளக்க மறியலுக்கு உத்தரவிட்டதுடன் வழக்கு தொடர்பில் இன்னும் சமர்ப்பிக்கப்படாத ஏனைய அறிக்கைகளையும் விரைவில் சமர்ப்பிக்குமாறு குற்றப்புலனாய்வுப் பிரிவினருக்கு உத்தரவிட்டார்

மேலும் கடந்த முறை நீதிபதியால் பிறப்பிக்கப்பட்ட 19 வினாக்கள் தொடர்பில் தாம் வசாரணை மேற்கொள்வதாகவும் அந்த அறிக்கையும் விரைவில் தாம் சமர்ப்பிப்பதாகவும் குற்றப்புலனாய்வுப்பிரிவின் அதிகாரிமன்றில் தெரிவித்தார். அத்துடன் கடந்த காலத்தில் நீதிமன்ற நடவடிக்கைக்காக வருகை தந்த மாணவி வித்தியாவின் தாயார் மீது சந்தேக நபர்களின் உறவினர்கள் மேற்கொண்ட அச்சுறுத்தல் தொடர்பிலான விசாரணையை ஊர்காவற்றுறை பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.

இதன் போது வித்தியாவின் தாயார் சரஸ்வதி ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்திற்கு வருகை தந்து தனது வாக்கு மூலத்தை வழங்கியதாக அப்பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி குறிப்பிட்டார். இதுவரை காலமும் இரண்டு தவணைகளில் நடைபெற்று வந்த வழக்குகள் ஒன்றாக்கப்பட்டுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது. (செ-4)

## இலட்சம் பேர்...

ளார்.

அரசாங்கத்தின் போர் வெற்றிக் கொண்டாட்டம் மற்றும் உயிரிழந்த இராணுவ வீரர்களுக்கான நினைவு நிகழ்வுகள் என்பன பத்தரமுல்லையில் அமைந்துள்ள நாடாளுமன்ற மைதானத்தில் நேற்று புதன்கிழமை மாலை நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே ஜனாதிபதி இவ்வாறு கூறினார்.

மூன்று தசாப்தகால போர் முடிவுக்கு கொண்டுவரப்பட்டதன் வெற்றி ஒருபுறத்தில் மகிழ்வைத் தந்தாலும் அந்தப்போரால் ஒரு இலட்சம் பேர் கொல்லப்பட்டமை பெரும் துயரைத் தருகிறது.

போர் முடிவடைந்து நிலையான சமாதானம் மலர்ந்து 7 வருடங்கள் ஆகின்றன. துப்பாக்கி வேட்டுச் சத்தம் மௌனித்த போதிலும் நல்லிணக்கத்தை கட்டியெழுப்புவது பெரும் சவாலாகும்.

20ஆம் நூற்றாண்டிலிருந்து இலங்கையில் இனமுரண்பாடு காணப்படுகின்றது. எனவே இவற்றை சரிசெய்வது நமது கடமையாகும்.

இராணுவத்தை அரசாங்கம் வேட்டையாடுவதாக கூறுகிறவர்களின் அரசாங்கமே அவர்களுக்கு கடந்த காலங்களில் பெரும் துயரத்தை கொடுத்தனர் என ஜனாதிபதி மைத்திரி இதன்போது உரையாற்றினார். (செ-12)

## அரச சேவையாளர்களின்...

யப்பட்டிருப்பதாக உள்துறை அமைச்சர் வஜிர அபேவர்தன கூறினார்.

அனர்த்தம் காரணமாக ஏற்பட்டுள்ள தற்போதைய நிலைமைகள் சீராகும் வரை இந்த நடைமுறை அமுலாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

உள்துறை அமைச்சில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அமைச்சர் இதனைக் கூறினார்.

நிவாரண சேவை நடவடிக்கைகளின் போது உள்துறை அமைச்சினால் சரியான முறையில் சேவை இடம்பெறாவிட்டால் 1905 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொண்டு முறைப்பாடு தெரிவிக்க முடியும் என்றும் அமைச்சர் கூறினார்.

ஜனாதிபதி மற்றும் பிரதமரின் ஆலோசனைப்படி நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அரசு நடவடிக்கை எடுத்திருப்பதாகவும் அமைச்சர் மேலும் கூறினார்.(செ-12)

## இயற்கை பேரிடர்...

மக்களுக்கு அமெரிக்கா தனது இரங்கல் மற்றும் அனுதாபங்களைத் தெரிவித்துள்ளது.

இயற்கை அனர்த்தத்தினால் ஏற்பட்ட பாதிப்புக்கள் குறித்து இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் அதுல் கஷாப், வெளியிட்டுள்ள அனுதாப அறிக்கையில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த அறிக்கையில், இலங்கை அரசாங்கத்திற்கும், நாட்டின் பல்வேறு பகுதிகளில் நிலச்சரிவு மற்றும் வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கும் ஐக்கிய அமெரிக்க தூதரகம் சார்பில் ஆழ்ந்த கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில், அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கும், சேதங்களை சீரமைப்பதற்கும் அமெரிக்கா தயாராக இருப்பதாக அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (செ-12)


# 06 ஆம் மாத நினைவுகளுடன்...

மலர்வு 23 01 1948

உதிர்வு 19 11 2015



05ஆம் வட்டாரம், வேலணை வடக்கைப் பிறப்பிடமாகவும், வதிவிட மாகவும் கொண்ட

**திருமதி கனகரத்தினம் இரஞ்சிதமலர்**

நடமாடித் திரிந்த தெய்வம் - படமாகி
மாதங்கள் ஆறாகிப் போனதம்மா
உங்கள் நினைவுகளிலிருந்து
மீளமுடியாமல் தவிக்கின்றோம் - அம்மா
ஆறுதலை யார் தருவார் - எங்கள்
இடிந்து போன இதயங்களுக்கு

(சி-4639)

கந்தன் கருணை,
வேலணை-5

தகவல் : மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.05.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# தரம்-5 மாணவர்களுக்கான
# புலமைப்பரிசில் பரீட்சை — மாதிரி வினாத்தாள் இல-11

பகுதி-II

நேரம்:- 1 மணித்தியாலம் 15 நிமிடங்கள்

பின்வரும் பந்தியை நன்றாக வாசிக்குக.

**இலங்கை இயற்கை வளங்கொழிக்கும் செழிய நாடு. இலங்கையில் இயற்கைக்கூறுகள் மலைகளாகவும், காடுகளாகவும், வயல்களாகவும், கடல்களாகவும், ஆறுகளாகவும், குளங்களாகவும் பிரிந்தும் தொடர்ந்தும் வளம் செய்கின்றன. இலங்கை நாற்புறமும் நீலக்கடலால் சூழப்பட்ட அழகான தீவு. நாற்புறக் கடலும் அலைகளாக எழுந்து இலங்கையை ஆசீர்வதிக்கின்றன. மலையகம் பச்சைக் கம்பளத்தால் போர்த்தது போல் தேயிலைச் செடிகளால் செழித்தோங்கிக் காணப்படுகின்றன.**

கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளைப் பந்தியிலிருந்து தெரிந்து புள்ளிக் கோட்டின்மீது எழுதுக.

01. இலங்கைத் தீவில் காணப்படும் கூறுகள் எவை?
..............................................................................................

02. "செயற்கை" என்ற சொல்லின் எதிர்க்கருத்துச் சொல்லை எழுதுக.
..............................................................................................

03. 'வாழ்த்துகின்றன' என்ற சொல்லின் ஒத்தகருத்துச் சொல்லை எழுதுக.
..............................................................................................

04. இங்கு இடம்பெறும் உவமானத்தை எழுதுக.
..............................................................................................

05. பெருந்தோட்டப் பயிர் ஒன்று எழுதுக.
..............................................................................................

06. கடலுக்கு கூறும் அடைமொழிகள் இரண்டையும் எழுதுக.
..............................................................................................

07. 'காணப்படுகின்றன' என்னும் சொல்லின் திணை, பால், எண், இடத்தை எழுதுக.
..............................................................................................

08. 'எமது நாடு இலங்கை' எனும் வாக்கியத்தில் எமது என்ற சொல்லின் திணை, பால், எண், இடத்தை எழுதுக.
..............................................................................................

09. கீழே தரப்பட்டுள்ளவற்றிற்கு அடைப்புக்குள் இருந்து பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வந்தேன் | கதிரை | மலைகள் | வந்தோம் | சிறுவர்கள் | சிறுமி |



1) உயர்திணை, பன்மை, படர்க்கைப் பெயர்ச்சொல் ( ................................................ )
2) அஃறிணை, ஒருமை, படர்க்கைப் பெயர்ச்சொல் ( ................................................ )
3) தன்மை, பன்மை, வினைச்சொல் ( ................................................ )

10. பின்வரும் தொடர்களுக்குரிய தனிச் சொல்லை எழுதுக.
1) மூன்று புறமும் கடலால் சூழப்பட்ட நிலம் ( ................................................ )
2) ஆகாய விமானத்தை செலுத்துபவன் ( ................................................ )
3) யானையைப் பழக்கி வழி நடத்துபவன் ( ................................................ )

11. பின்வரும் ஆங்கில வாக்கியங்களின் கருத்தைத் தமிழில் எழுதுக.
   1) MAY I GO HOME ..............................
   2) YOU WILL COME TOMORROW ..............................
   3) WHAT IS YOUR NAME? ..............................

12. பின்வரும் வாக்கியத்தின் கருத்தை ஆங்கிலத்திற்கு மாற்றி ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.
   தயவு செய்து அமைதியாக இருங்கள். ..............................

13. ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான ஆங்கிலப் பெயரை ஆங்கில எழுத்துக்களிலே எழுதுக.

1)  ..............................
2)  ..............................
3)  ..............................
4)  ..............................

14. பின்வரும் வாக்கியங்கள் சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தைத் தமிழ் எழுத்துக்களில் எழுதுக
   1) எமது நாடு இலங்கை ..............................
   2) நாம் தமிழ் நன்றாகப் பேசுவோம் ..............................

15. பின்வரும் வாக்கியங்களின் கருத்தைத் தமிழில் எழுதுக.
   1) கடே கியட்டத வான்னே ..............................
   2) ஓயா மட்ட கியல தெனவதா? ..............................

16. பின்வரும் பழமொழிகளில் உள்ள வெற்றிடங்களை நிரப்புக.
   1) விளையும் பயிரை .............................. தெரியும்.
   2) இரக்கப் போனாலும் .............................. போ.
   3) இளமையிற் கல்வி .............................. எழுத்து.

17. சரியாக எழுத்துக் கூட்டப்பட்டுள்ள சொல்லின் கீழ்க் கோடிடுக.
   1) 1. வல்லரசு 2. வல்லறசு 3. வள்லரசு
   2) 1. நாடேங்கும் 2. நாடெங்கும் 3. நாடொங்கும்
   3) 1. வறியவர்கள் 2. வரியவர்கள் 3. வறியவர்கல்

**18 தொடக்கம் 30 வரையுள்ள வினாக்களுக்குரிய விடையைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

18. உணவுப் பொருளொன்றை வாங்கும் போது கண்டிப்பாக அவதானிக்க வேண்டியது யாது?
   1) பொருளின் விலை
   2) பொருளின் காலாவதியாகும் காலம்
   3) பொருளின் அளவு

19. இனப்பரம்பல் அடைவதற்காக கொழுக்கி கொண்ட வித்துக்கள் எவை?
   1) எருக்கலை, குருவிச்சை
   2) புலிநகம், நாயுருவி
   3) ஆடையொட்டி, காசித்தும்பை

20. தண்ணீரில் மிதந்து சென்று இனப்பரம்பல் அடையாத வித்து யாது?
   1) தேங்காய் 2) மாங்காய் 3) பாக்கு

21. முலையூட்டி விலங்கு அல்லாதது எது?
   1) பல்லி 2) பூனை 3) நாய்

22. மண்ணெண்ணெய்க்குப்பி விளக்கு சரிந்து வீழ்ந்து தீப்பற்றினால் அதை அணைப்பதற்கு உகந்ததல்லாதது எது?

1) நீர் 2) சரச்சாக்கு 3) மணல்

23. தோகை விரித்து அழகாக ஆடும் மயில் இனம் எது?

1) ஆண்மயில் 2) பெண்மயில் 3) ஆணும், பெண்ணும்

24. நீந்துவதன் மூலம் இடம்பெயரக் கூடிய பறவை எது?

1) கொக்கு 2) வாத்து 3) நீர்க்காகம்

25. உரோமங்களால் மூடப்படாத பிராணி எது?

1) முதலை 2) முயல் 3) செம்மறிஆடு

26. மரங்களில் கூடு கட்டி வாழாதது எது?

1) அணில் 2) காகம் 3) குயில்

27. இலங்கையில் மிருகக்காட்சிச்சாலை அமைந்துள்ள இடம் எது?

1) கண்டி 2) யால 3) தெகிவளை

28. யானைகள் சரணாலயம் அமைந்துள்ள இடம் எது?

1) யால 2) பின்னவல 3) தெகிவளை

29. தோலினால் சுவாசம் நடத்தும் பிராணி எது?

1) மீன் 2) மண்புழு 3) பாம்பு

30. கண்களை மூடுவதற்கு இமை இல்லாத பிராணி எது?

1) மீன் 2) தீக்கோழி 3) கிவி

**தரப்பட்டுள்ள வெற்றிடத்தில் விடையை எழுதுக.**

31. எண்கோலங்களில் அடுத்து வரும் இரு எண்களையும் முறையே எழுதுக.

1) 3030, 3020, 3010, ............................................. , .............................................

2) 1234, 2345, 3456, ............................................. , .............................................

3) 1909, 1906, 1903, ............................................. , .............................................

32. பின்வரும் பின்னங்களுக்கு பொருத்தமான இரண்டு சமவலுப் பின்னங்களை எழுதுக.

1) 1/3= ..................................., ...................................


2) 1/2= ..................................., ...................................

3) 1/4= ..................................., ...................................

33. பின்வரும் வடிவங்களில் அதற்கெதிரே தரப்பட்டுள்ள பின்னப்பகுதிகளை நிழற்றுக. அவற்றில் நிழற்றப்படாமல் எஞ்சியுள்ள பகுதி பின்னத்தில் எழுதுக.

1) $\frac{2}{6}$ =  ...................................

2) $\frac{5}{8}$ =  ...................................

3) $\frac{1}{4}$ =  ...................................

34. ஐந்து நண்பர்கள் ஆளுக்கு ரூபா 150 வீதம் சேர்த்த பணத்தில் ரூபா 325 இற்குப் பழங்களும் ரூபா 150 இற்குப் பானங்களும் வாங்கி மீதிப் பணத்தை தம்மிடையே சமமாகப் பங்கிட்டார்கள்.

1) பழங்களும் பானங்களும் வாங்கச் செலவிட்ட பணம் யாது? ரூபா ..............................

2) மீதிப் பணத்தில் மூவருக்கு கிடைத்த பணம் எவ்வளவு? ரூபா ..............................

35. அமலன் பரீட்சை ஒன்று செய்வதற்காக காலை 6.00 மணிக்கு கொழும்பிலிருந்து புறப்பட்டு கண்டி சென்று திரும்பி வந்தான். கொழும்பிலிருந்து கண்டி செல்ல மூன்று மணித்தியாலங்களும் திரும்பி வர நான்கு மணித்தியாலங்களும், பரீட்சைக்காக ஐந்து மணித்தியாலங்களும் செலவாகின.

1) அமலன் கண்டியிலிருந்து புறப்பட்ட நேரத்தை 24 மணித்தியாலக் கடிகாரத்திற்கேற்ப எழுதுக.

..............................

2) அமலன் கொழும்பிற்குத் திரும்பி வந்த நேரத்தை சாதாரண நேரத்தில் எழுதுக.


..............................

36. அட்டவணையிலுள்ள வெற்றிடங்களைப் பூர்த்தி செய்க.

| திண்மம் | முகங்களின் எண்ணிக்கை | உச்சிகளின் எண்ணிக்கை | விளிம்புகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1)  | | | |
| 2)  | | | |
| 3)  | | | |

37. 1) வரைபிற்கேற்ப அட்டவணையிலுள்ள வெற்றிடங்களைப் பூர்த்தி செய்க.

2) அட்டவணையிலுள்ள தகவல்களுக்கேற்ப வரைபைப் பூர்த்தி செய்க.




| தினங்கள் | செலவான பணம் |
|---|---|
| திங்கள் | 300 |
| செவ்வாய் | .................. |
| புதன் | 400 |
| வியாழன் | .................. |

38. உருவில் உள்ள தகவல்களுக்கேற்ப அட்டவணையிலுள்ள வெற்றிடங்களைப் பூர்த்தி செய்க.




| | | | | கொழும்பு |
|---|---|---|---|---|
| புத்தளம் | | | | |
| அனுராதபுரம் | | | | |
| வவுனியா | | | | |
| யாழ்ப்பாணம் | | | | |

39. வெற்றிடங்களுக்குப் பொருத்தமான விடையை அடைப்புக் குறிகளினுள்ளேயிருந்து தெரிந்தெடுத்து அதன் கீழ்க் கோடிடுக

1) நாய் கடித்தாலும் ..................... ( கடிக்கும் / கடிக்கலாம் )

2) அம்மா ஒவ்வொரு ................. ( தோசைகளாக / தோசையாக ) சுட்டாள்.

3) மைதானத்தில் சனக் கூட்டம். .................... ( அலைமோதியது / அலைமோதியன )

4) மைதானத்தில் பார்வையாளர்கள் ................ ( நிறைந்திருந்தனர் / நிறைந்திருந்தது )

5) என்னால் ............. ( பேசிய / பேசப்பட்ட ) கருத்துக்களை சபையோர் வரவேற்றனர்.

6) நாங்கள் ............... ( எழுதிய / எழுதப்பட்ட ) கவிதைகளை வாசித்தார்கள்.

7) எருது முன்னே செல்ல பசு அதனைப் பின் ............ ( தொடர்ந்தது / தொடர்ந்தன )

40. 'கிளி' என்னும் தலைப்பில் நான்கு வரிகள் கொண்ட சிறு கவிதை ஒன்றை எழுதுக.

..............................
..............................
..............................
..............................

இவ் வினாக்களுக்குரிய விடைகள்
நாளை வெள்ளிக்கிழமை
(20.05.2016)
வலம்புரி பத்திரிகையில் பிரசுரமாகும்.